ஸ்ரீ தமிழ்
உண்மை நின்றிட வேண்டும்

**ஆசிரியர் – பதிப்பாளர் :**
இல. பத்மப்ரியா

**பொறுப்பாசிரியர் :**
வெ. ஜெயராமன்

**துணை ஆசிரியர்கள் :**
நா. பாஸ்கரன்
சி. பாண்டிக்குமார்

**வடிவமைப்பு :**
ஸ்ரீஸ்வயம்

**சட்ட ஆலோசகர்கள் :**
இல. ஸ்ரீராம்
த. பாஸ்கர்

**அலுவலக முகவரி:**
ஸ்ரீ தமிழ்
77/6, 10வது அவென்யூ,
அசோக்நகர்,
சென்னை –600 083

70102 81932

http://www.shreetv.tv
facebook.com/shreetv
x.com/Shreetv media
youtube com/ShreeTV
shreemedia.news@gmail.com

Press and Registration of Books Act-ன்படி எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள உரிய நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டவை.

கதைகளில் வரும் பெயர்களும் நிகழ்ச்சிகளும் கற்பனையே. இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைத்தன்மைக்கு ஸ்ரீ தமிழ் நிர்வாகம் பொறுப்பல்ல. பேட்டிகள் மற்றும் சிறப்புக் கட்டுரைகளின் கருத்துகள் படைப்பாளர்களின் சொந்தக் கருத்துகளே!

**தனி பிரதி: ரூ 30/–**
**ஆண்டு சந்தா: ரூ 600/–**

# தமிழகத்தைக் குறிவைக்கும் பாகிஸ்தான் சீன சதி வலை

தமிழக முதல்வருக்கு உளவுத்துறை ஐஜி கொடுக்கும் அறிக்கைகளை தவெகவின் அரசியல் ஆலோசகர் ஜான் ஆரோக்கியசாமி, ஒரு மூத்த அமைச்சர் மற்றும் ஜோசப் விஜய் அவர்களின் பாதுகாப்பு அதிகாரி ஆகியோர் பார்வையிடுகின்றனர்.

அமைச்சர்கள் மற்றும் உயரதிகாரிகள் குறித்த ரகசிய விவரங்களை முதல்வர் அல்லாமல் பிறருக்கு தெரியபடுத்தும் முதல்வரின் செயல் இரகசியகாப்பு பிரமாணத்திற்கு விரோதமானது. இந்த தகவல்களை இந்த மூவர் வாட்ஸ் அப் வாயிலாக காவல்துறை அதிகாரியிடமிருந்து கேட்டு பெறுவது இவ்வறிக்கைகள் வெளியே கசிவதற்கு வாய்ப்பாக அமையும். இதை நம் நாட்டின் விரோதிகள் பயன்படுத்த வாய்ப்பு உள்ளது.

பாகிஸ்தான் மற்றும் சீனா போன்ற நாடுகள் இலங்கை வழியாக இந்தியாவிற்குள் ஊடுருவி பல சதிச் செயல்களை நிகழ்த்த திட்டமிட்டு செயல்பட்டு வருகின்றன. தமிழர்களின் தலைநகரான யாழ்பாணத்தில் சீன புத்தக கண்காட்சி நடத்தி இடது சாரி கொள்கைகளைப் புகுத்தி சீனா தன் பிடியை வலுப்படுத்தி வருகிறது. ஈஸ்டர் குண்டு வெடிப்பு சதி செயலில் ஈடுபட்டதாக அந்நாட்டின் முன்னாள் இராணுவ அதிகாரி சுரேஷ் சலே கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த நடவடிக்கையைப் பயன்படுத்தி சிங்களர்களுக்கும், முஸ்லீம்களுக்குமிடையே மோதலை உருவாக்க பாகிஸ்தான் ஆதரவு முஸ்லீம் அமைப்புகள் முற்பட்டு வருகின்றன. இந்த சூழலைப் பயன்படுத்தி சிங்கள அடிப்படைவாதத்தைத் தூண்டுகிறது ராஜ பக்சேவின் கட்சி. இந்த சூழலைப் பயன்படுத்தி LTTEக்கு ஆதரவாக பல எம்.பிக்கள் பேசத் தொடங்கியுள்ளனர்.

சீன-பாகிஸ்தான் தூண்டுதலில் செயல்படும் முஸ்லீம் கட்சி தலைவர்களுடன் நெருக்கமான தொடர்பில் இருப்பவர் தமிழக சிறுபான்மை நலத்துறை அமைச்சர் ஷாஜகான் அவர்கள். LTTEயின் தொடர்பில் விடுதலை சிறுத்தைகள் கட்சி அமைச்சர் திரு. வன்னியரசு செயல்படுகிறார்.

370 நீக்கத்திற்குப் பின் காஷ்மீர் எல்லை பாதுகப்பாக உள்ளது. பாஜவின் மேற்குவங்க வெற்றிக்குப்பின் அந்த எல்லையும் பாதுகாப்பாகி உள்ளது. தற்போது ஆயுதக்கடத்தல், போதைக்கடத்தல் இன்னும் பிற சட்டவிரோத பிரிவினைவாத செயல்களுக்கு தமிழக எல்லையை இந்த தீய சக்திகள் பயன்படுத்த இலங்கையை களமாக்கி தவெக அரசை துணைக்கொண்டு நாசகார செயல்களில் ஈடுபடும் தென்னகத்தில் ஆந்திராவைத் தவிர ஏனைய மாநிலங்களில் காங்கிரஸ் மற்றும் காங்கிரஸ் கூட்டணி ஆட்சி இருப்பதால் வட கிழக்கு மாநிலங்களைப் போல் தென்பாரதத்தை மிஷனரிகளின் துணைக்கொண்டு சீர் குலைக்கும் சர்வதேச சதி அரங்கேறும் வாய்ப்பு உள்ளது. இந்த அபாயத்தை உணர்ந்து மத்திய அரசு செயல்படுமா?

# மதக் கலவரத்தைத் தூண்டும் வன்னியரசு

ப்ரியா வெங்க்ட்

தமிழக கிறிஸ்தவ சபை கூட்டமைப்பு சார்பாக, ஜுன் 9 2026ம் தேதி அன்று போதகர்கள் சுவிஷேகர்கள் கூடுகை என்ற நிகழ்ச்சி சென்னையில் நடந்தது. இதில், சபாநாயகர் பிரபாகர் மற்றும் தவெக அமைச்சரவையில் சமூகநலத்துறை அமைச்சராக இருக்கும் விடுதலை சிறுத்தைகள் கட்சியைச் சேர்ந்த வன்னியரசும் கலந்து கொண்டனர்.

சட்டசபையை சுவிஷேச சபையாக மாற்றிய தவெகவின் சபாநாயகர் ஜே.டி. பிரபாகர், சிறுபான்மை மக்களுக்கான அடையாளம் இந்த அரசு. இதை பயன்படுத்திக் கொள்ளுங்கள். நாம் மாற்ற வேண்டியது இன்னும் பல இருக்கின்றன என்று கிறிஸ்தவ மக்களிடையே பேசினார். அமைச்சர் வன்னியரசோ இவருக்கு ஒரு படி மேலே சென்று மதக்கலவரத்தை ஏற்படுத்தும் வகையில் பேசினார்.

கிறிஸ்தவ மக்கள் அரசியல்படுத்தப்பட வேண்டும் என்று தனது விஷமப் பேச்சைத் தொடங்கினார். வக்ஃப் வாரிய சட்ட திருத்தம் கொண்டு வந்த போது இஸ்லாமியர்கள் மட்டும் தான் போராடினார்கள். கிறிஸ்தவ மக்கள் இஸ்லாமியர்களுக்கு ஆதரவாகப் போராடவில்லை. இன்று இஸ்லாமியர்களை குறிவைத்துள்ள பாஜக, ஆர்.எஸ்.எஸ்காரர்கள் நாளை கிறிஸ்தவர்களை குறிவைப்பார்கள். இன்று இஸ்லாமியர்களின் சொத்துக்களை குறிவைத்தவர்கள், நாளை கிறிஸ்தவர்கள் சொத்துக்களை குறிவைப்பார்கள். இஸ்லாமிய மக்கள் பாஜகவின் கொள்கை திட்டங்களுக்கு எதிராக எல்லாவிதமான போராட்டங்களிலும் ஈடுபட்டு கொண்டிருக்கும் போது நாம் அதில் கலந்து கொள்வதில்லை. ஜபம் மட்டும் தான் செய்கிறோம் என்று கிறிஸ்தவர்களை மத்திய அரசுக்கு எதிராக போராட அழைப்பு விடுத்திருக்கிறார். இதோடு மட்டுமில்லாமல், பழைய காஷ்மீரை போல நாடு முழுவதும் கலவரத்தில் கிறிஸ்தவ அமைப்புகள் ஒன்றுபட்டு ஈடுபட வேண்டும் என்றும் அமைச்சர் வன்னியரசு பேசியுள்ளதாக இந்து முன்னணியின் கண்டன அறிக்கை தெரிவிக்கிறது.

சமூக நலத்துறை அமைச்சர் வன்னியரசின் இந்தப் பேச்சு அவர் எடுத்துக்கொண்ட ரகசியகாப்பு பிரமாணத்திற்கும், பதவி பிரமாணத்துக்கும் எதிரான செயல். வன்னியரசின் இந்தப் பேச்சு கண்டனத்திற்குரியது. இந்த சட்டவிரோத பேச்சிற்காக தமிழக ஆளுநர் இவரை பதவி நீக்கம் செய்யவேண்டும். திட்டமிட்டு மதக்கலவரத்தை ஏற்படுத்தும் வகையில்



பேசியுள்ள இவரை கைது செய்து வேண்டும். சாதாரணமாக எதாவது ஒரு பதிவை ஒருவர் ஷேர் செய்தால் கூட மதங்களுக்குள் விரோதத்தை உருவாக்க முயல்கிறார், சமூக அமைதிக்கு ஊறு விளைவிக்கிறார் என்று கைது செய்வார்களே இப்போது ஒரு அமைச்சரே கலவரத்தைத் தூண்டும் வகையில் பேசி இருக்கிறாரே இவர் மீது என்ன நடவடிக்கை எடுக்கும் இந்த அரசு?

தமிழகத்தில் நிலவும் மின்வெட்டு, தவெகவினருக்கு எதிராக செய்திகளை தொடர்ந்து பகிர்ந்ததற்காக அரசு கேபிளிலிருந்து ஜனம் டிவி போன்ற சானல்களை நீக்கி, யூடியூபர் மாரிதாஸை கைது செய்த இந்த அரசு, அமைச்சர் வன்னியரசின் சட்டவிரோத பேச்சிற்காக நடவடிக்கை எடுக்குமா?

முதலமைச்சர் ஜோசப் விஜய் ஆட்சி பொறுப்பில் அமர்ந்தவுடன் இந்த ஆட்சி அனைவருக்குமான ஆட்சியாக இருக்கும் என்றாரே, இப்போது அவரது அமைச்சரவையில் இடம் பெற்றிருக்கும் ஒரு அமைச்சர் மதக்கலவரத்தைத் தூண்டும் வகையில் பேசியிருக்கிறாரே அவரை ஜோசப் விஜய் கண்டிப்பாரா? தன் அமைச்சரவையிலிருந்து நீக்குவாரா?

ஏற்கனவே அமைச்சர் ஆதவ் அர்ஜுனா சனாதன ஒழிப்பு தான் எங்கள் கொள்கை என்றார். அதையும் முதல்வரான ஜோசப் விஜய் கண்டிக்கவில்லை. சபாநாயகரான ஜே.டி பிரபாகர் இந்த அரசு சிறுபான்மை மக்களின் அடையாளம் என்கிறார். இதையெல்லாம் வைத்துப் பார்க்கும் போது திமுக அரசு எப்படி ஹிந்து இன அழிப்பு கொள்கையை முன்னெடுத்ததோ அதே பாதையில் தான் தவெகவும் பயணிக்கிறது என்பது தெள்ளத்தெளிவாகிறது. அமைச்சர் வன்னியரசு மீதும், சபாநாயகர் ஜேடி பிரபாகர் மீதும் கவர்னர் நடவடிக்கை எடுக்க வேண்டும். இத்தகைய சமூக விரோத வெறுப்பு பேச்சுக்களை முளையிலேயே கிள்ளி எறிய முதல்வர் ஜோசப் விஜய் முன் வருவாரா?

# விஜய் ஆர்கெஸ்டராவாக மாறிய போலீஸ் பேண்ட்

-வைஷ்ணவி



சென்னை எழும்பூர் ராஜரத்தினம் விளையாட்டு அரங்கில் 'சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை' தொடக்கவிழா 09.06.2026 மாலை 05.30 மணியளவில் நடைபெற்றது. இதில் தமிழ்நாடு முதலமைச்சர் விஜய் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு இந்த திட்டத்தை தொடங்கி வைத்தார். முன்னதாக இந்த விழாவின் போது தமிழ்நாடு காவல்துறையைச் சேர்ந்த இசைக்குழுவினர், முதலமைச்சர் விஜய் முன்னிலையில், அவர் திரைத்துறையில் கதாநாயகனாக நடித்துப் பெரும் வரவேற்பைப் பெற்ற பிகில் திரைப்படத்தின் "சிங்கப் பெண்ணே" மற்றும் மெர்சல் திரைப்படத்தின் "ஆளப் போறான் தமிழன்" ஆகிய இரண்டு சூப்பர் ஹிட் பாடல்களின் இசையை வாசித்தனர். இந்த அவலம் ஒருபுறம் நிகழ்ந்தது என்றால் மற்றொருபுறம் இந்த மிக முக்கியத்துவம் வாய்ந்த அரசு விழாவில் சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை திட்டத்தின் செயல்பாடுகள் மற்றும் நோக்கங்களை விளக்கும் வகையில் விழா மேடையில் அதிகாரப்பூர்வமாக ஒரு ஏஐ தொழில்நுட்பக் காணொளி ஒளிபரப்பப்பட்டது. அந்தக் காணொளியில் பல்வேறு இடங்களில் அடிப்படைத் தமிழ் வார்த்தைகள் கடுமையான எழுத்துப்பிழைகளுடனும், இலக்கணப் பிழைகளுடனும் இடம்பெற்றிருந்தது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. பெண்கள் பாதுகாப்பை முன்னிறுத்தி அரசு இவ்வளவு பிரம்மாண்டமாக நடத்தும் ஒரு முக்கியத் திட்டத்தின் தொடக்க விழாவில், தமிழ் மொழியில் இத்தகைய பிழைகளுடன் வீடியோ வெளியானது அங்கிருந்த தமிழ் ஆர்வலர்கள் மற்றும் பார்வையாளர்கள் மத்தியில் பெரும் சலசலப்பை ஏற்படுத்தியது.

இதைவிட கேவலம் என்னவென்றால் தமிழக அரசின் இலச்சினையில் இடம்பெற்றிருந்த எழுத்துக்கள் சிதைந்து கிடந்தன. ரியலிலும், ரீலாகவே இருக்கிறது என்ற அரசு என்று பலரும் பேசும்படியாக இந்த நிகழ்வுகள் அமைந்திருந்தன. பொதுவாக, அரசு விழாவில் ஏற்பாடுகள், காணொளிகள், சிறப்பு விருந்தினரின் உரைகளின் குறிப்பு ஆகியவை பலமுறை சரிபார்க்கப்படுவதுடன் அதிகாரிகளின் ஒப்புதலுக்கும் அனுப்பப்படும். இது போன்ற நடைமுறைகள் பின்பற்றப்பட்டனவா அல்லது முதல்வரின் சினிமா பாணிக்காக செய்யப்பட்ட மாற்றங்கள் இந்த தவறுகளுக்கு காரணமாகி விட்டனவா?

இந்த நிகழ்ச்சியில் பொதுமக்களை அனுமதிக்க வேண்டும் என்பதற்காக ராஜரத்தினம் விளையாட்டரங்கில் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. விளம்பரத்திற்காக, இந்த அரசு மேற்கொள்ளும் முயற்சிகள் யதார்த்தத்தில் நிர்வாகத்தை சீர்படுத்துவதை விட சீரழிப்பதாகவே அமைந்து வருகிறது.

மத்திய அரசின் ஆணைக்கிணங்க நாடு முழுவதும் பிரதமர், ஜனாதிபதி, ஆளுநர்கள் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகளில் முதலில் வந்தேமாதரம் அதைத் தொடர்ந்து தேசிய கீதம் அதன்பின் இறைவணக்கம் அல்லது மாநிலத்தின் வாழ்த்துப் பாடல் இடம் பெறவேண்டும். இந்த நடைமுறையை பின்பற்றி ஜோசப் விஜய் பதவிவேற்பு விழாவில் வந்தேமாதரம், தேசிய கீதம் அதைத் தொடர்ந்து தமிழ்தாய் வாழ்த்து இசைக்கப்பட்டது. வந்தேமாதரம் முழுபாடலை எப்படி இசைக்கலாம், தமிழ்தாய் வாழ்த்து ஏன் முதலில் இசைக்கப்படவில்லை என்று திமுகவும் அதன் தோழமைக் கட்சிகளும் கேள்வி எழுப்பினர். இந்த சலசலப்பிற்கு பயந்து இனிமேல் அப்படியெல்லாம் நடக்காது என்று பயந்து குப்புற கவிழ்ந்தது தவெக அரசு, இப்போது விஜயின் சினிமா பாடல் அரசு விழாவில், அதுவும் போலீசாரால் இசைக்கப்பட்டிருக்கிறது. தேசிய கீதத்தையும், தேசிய பாடலான வந்தேமாதரத்தையும் விட விஜயின் சினிமா பாட்டு புனிதமானதா? வந்தே மாதரத்தை எதிர்த்து வெகுண்டெழுந்த குரல்கள் விஜய் பாட்டிற்கு கோரஸ் பாடியது தமிழக அரசியல் மற்றும் பொதுதன்மையின் இழி தரத்தையே காட்டுகிறது. சுயமரியாதை, சமூகநீதி, பொதுவுடைமை என்று பேசி மக்களை முட்டாள்கள் ஆக்கியதின் விளைவு, ஆட்சி மாற்றத்திற்கு ஏற்ப சினிமா பாடல்களும். பிரச்சார பாடல்களும் அரசு விழாக்களில் காவல்துறையினரால் இசைக்கப்படவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. ஜனநாயகம் முடியாட்சி ஆகிவிட்டது.

# தேங்காய் பன்னும், ஷேர் ட்ரேடும்

ராயன்

அலுவலகம் வந்ததும் தனது லேப்டாப்பை பேகிலிருந்து எடுத்து நியூஸ் டெஸ்கில் எடுத்து வைத்தார் ராயன். ராயன் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொள்வதற்குள் படுத்த ஆரம்பித்தார் அருகில் இருந்த கல்யாண் ஷாட்ஸுக்கு டைட்டில் வேணும், பெரியவா பேசியதற்கு தம்ப் நெயில் என அடுக்கிக் கொண்டே போனார். தான் ஏன் அசராமல் வேலை தொல்லை கொடுக்கிறேன் என்பதற்கு ஆதாரத்தைக் காட்ட யூடியூப் டேஷ் போர்டு காட்டி சென்ற வாரத்தோடு வீயூவ்ஸ் குறைஞ்சிருக்கு பாருங்க என சொல்லி ஏற இறங்க பார்ப்பதன் மூலம் யோவ், அதற்கு காரணமே நீதான் என சொல்லாமல் சொல்கிறார் என நினைத்து தட தட என தட்டி கல்யாண் கேட்டதை முடித்து விட்ட திருப்தியில் இருந்தார் ராயன்.

ஆபீஸ் லேட்டாக வந்தாலும் டீ குடிக்கும் முன் ஏதாவது அசைபோட நினைத்த ராயன், இந்த உணர்வுக்கு யார் ஒத்து வருகிறார்கள் என சுற்றி பார்த்தார். அப்போது குமாருடன் வந்த அவரது குழந்தை, அத்தை பசிக்குது என CEOவிடம் சொல்ல, நீ தானே ஆன் லைனில் ஆர்டர் போடுவியே அந்த தேங்காய் பன் போடேன் எனச் சொல்ல, உடனே அம்மா சொல்படி கேட்டு உடனே போடுடா ராயா என பெரியவா சொல்ல, இதற்காகவே காத்திருந்த ராயனால் உடனே தேங்காய் பன் ஆர்டர் செய்யப்பட்டது. அதன் ருசியின் அருமை பெருமைகளை பேசிக் கொண்டபோது, ஹெல்த் கான்சியஸாக இருக்கும் எடிட்டர் போத்தன், எனக்கும் என்னவோ இந்த பன் ரொம்ப பிடிச்சிருக்கு என்றார்.

ஆர்டர் போட்ட பன் வருவதற்குள் ஒரு பக்கம் டீ வாங்கி வரச் சொல்லி பணித்த கரண்ஜி, பன் அசை போடுவதற்கு முன் கொஞ்சம் அரசியல் நிலவரத்தைப் பற்றி பேசலாமே என்றார். அரசியல் நிலவரம் என்பதை தாண்டி, நம்ம சேனலே கலவரம் ஆயிடுச்சு



என கொதித்தார் கல்யாண். ஒரு வீடியோவினால் 11 சப்ஸ்க்ரைபர்ஸ் குறைஞ்சிடுச்சு என வருத்தமாக சொல்ல, அப்படின்னா அந்த சப்ஜெக்ட்ல வீடியோ போடாம இருந்திருக்கலாம் என்றார் கரண்ஜி. சமூகவலைதளங்களில் தூர்வாறிய ராயன் ஆமாம், சிலர் இத்தனை நாள் இந்த சேனலை பின் தொடர்ந்தோமே என்ன பாவம் செய்திருக்கிறோம் என புலம்பிப் பதிவு போட்டிருப்பதைப் படித்துக் காட்டினார்.

அப்படி என்ன வீடியோ அது என வெகுளியாக கேட்டார் ராம்.

நாலு நாளா அவனவன் கழுவி ஊத்திக்கிட்டு இருக்கான், இது தெரியாம மேயர் ப்ரியா, அமைச்சர் கீர்த்தனா ரீல்ஸ் வீடியோவுல மூழ்கி இருந்தா இது எப்படித் தெரியும்? என திருநெல்வேலியிலிருந்து வந்த மிக்ஸர் பாக்கெட்டில் கை வைத்த ராமை கிண்டல் செய்தார் குமார். ராம் மிக்ஸர் பாக்கெட்டில் கை நுழைத்ததும் ஆபீஸில் இருக்கும் அனைவரின் ஃபோகஸூம் அந்த பாக்கெட் மீதே இருந்தது. இனி அந்த மிக்ஸரில் ஒரு முந்திரி பருப்பு மிஞ்சாது என யார் பக்கமும் திரும்பாமலே AK சொன்னார். இந்த முந்திரி தூர்வாறலில் நானும் சளைச்சவன் இல்லை என தன் பங்குக்கு வேகம் காட்டினார் குமார். மிக்ஸருக்கு ஏன் இப்படி அடிச்சுக்குறாங்க என ஒன்னும் புரியாமல் லேப்டாப்பில் பெயிண்டிங் செய்து கொண்டிருந்த நைனு விழித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். நாம மிக்ஸருக்குள் இருக்கும் முந்திரிக்கு அடிச்சுக்குறோம், ஆனால் பேஸ்புக்ல மந்திரி மிக்ஸர் என சொல்லி அடிக்குறாங்க என பொடி வைத்து பேசினார் கரண்ஜி.

அது இருக்கட்டும் ஒரு ஷேர் ட்ரேட் கதை சொல்றேன் என தனக்கு பொருளாதாரமும் தெரியும் என அவுத்து விடத் தொடங்கினார் ராயன்

பாரத் மூவர்ஸ் என ஒரு கம்பெனி. அவங்க கால் பதிக்காத மாநிலமே இல்லை என சொல்லாம். இந்தக் கம்பெனி பல புது முயற்சிகள் செய்வதில் கில்லாடி. இவர்களின் முதலீடுகள், வர்த்தகம் எல்லாமே அதிக லாபம் நோக்கி தான் இருக்கும். அப்படி ஒரு பகுதியில் மட்டும் லாபம் குறைவாக இருக்கும் நேரத்தில், நல்ல ஷேர் கிடைச்சிருக்குன்னு கர்நாடக ஷேர் ட்ரேடர் சொல்ல, பெர்ஃபாமென்ஸ் எப்படியிருக்கும், ரிட்டன்ஸ் நல்லா வரும் என நினைத்த அஸிஸ்டெண்ட் சொல்ல கம்பெனி சேர்மன் சரி வாங்கிப் போடுங்க என சொல்லியிருக்கார். ஆனா பீரியாடிக்கா பெர்ஃபாமன்ஸ் பற்றி அப்டேட் வேணும்




என்றும் சொல்லியிருக்கார். ஷேர் ரேட் ஜாஸ்தி இருப்பதைப் பற்றி கவலைப்படாமல் ட்ரேடிங்கில் அனுபவசாலி சொல்வதை நம்பி வாங்கி விட்டனர். முதல் சில மாதங்கள் வாங்கிய பங்கு செம்மத்தியான ஏற்றம். ஏற்கனவே இருக்கும் சில கம்பெனி ஷேர்கள் மைனசிலும், சில ஷேர்ஸ் டார்மெண்டிலும் இருந்து வந்த நிலையில் புதுசா வாங்குன ஷேரோட ஃப்லோசார்டைப் பார்த்து அந்த கம்பெனிக்கு உற்சாகமானது. கம்பெனியின் டெல்லி மீட்டிங்கில் போர்டு மெம்பர்ஸ் ஒவ்வொருவரும் தங்கள் மொபைல் கால்குலேட்டரில் புதுசா வாங்கிய ஷேரின் ரிட்டன்ஸ், டிவிடண்ட் தொகை எவ்வளவு வரும் என கணக்குப் போட்டு துள்ளிக் குதித்தனர்.

மீட்சுவல் ஃபண்ட் (அரசியல் கணக்கில் கூட்டணி இப்படி சொன்னா தான் உங்களுக்குப் புரியும்) ரிட்டன்ஸ் குறைவாகவும், அதேபோல ரிஸ்க்கும் குறைவு என போர்டு மெம்பரில் சிலர் முனகியுள்ளனர். ஆனால் அதிக விலை கொடுத்து வாங்கிய புது ஷேர் தாறுமாறான ரிட்டன்ஸ் கிடைக்கும் என நம்பிய மெம்பர்ஸ் எதைப் பற்றியும் கண்டுகொள்ளாமல் இருந்தனர். இதற்கிடையே பல மாதங்களாக ஷேர் ட்ரேடிங்கில் பிஸ்தாவாக அறியப்பட்டவர்கள் கம்பெனி வாங்கிய புதிய ஷேர் பற்றி எழுதிய கட்டுரைகள், எக்னாமிக் சேனல்களில் பேசிய நிபுணர்களின் பேச்சுக்களால் கம்பெனி அப்பாடா, சமீபத்தில் வாங்கிய நம் ஷேர்கள் எல்லாமே செம்ம பெர்ஃபாமன்ஸ் காட்டியிருக்கிறது. அது தந்த காஃன்பின்டசில் புதிதாக வாங்கிய இந்த ஷேர் பற்றி போர்டு மெம்பர்கள் கவலைப்படாமல் இருந்தனர்.

திடீரென போர்டு சேர்மன் நமது கம்பெனி ஷேர்கள் பற்றிய ரிவ்யூ செய்யனும் வாங்க என 2024ல் வைத்த மீட்டிங் தான் மிக முக்கியமான திருப்பு முனையாக இருந்தது என சொல்லனும். சேர்மன் ஒவ்வொன்றாக ஆய்வு செய்த போது புதுசா அதிக விலைக்கு வாங்கிய ஷேர் எதிர்பார்த்த டிவிடெண்ட் கொடுக்கலன்னு புரிய ஆரம்பிச்சது. அவரின் அஸிஸ்டெண்ட் சேர்மனிடம் இது குறித்து சொல்ல நினைத்தாலும், ஷேர் மீது அவருக்கு அதிக நம்பிக்கை இருந்ததால் அதை கெடுக்க விரும்பாமல் இருந்தது எவ்வளவு பெரிய தப்பு என்பதை சேர்மன் இப்ப மனம் நொந்து இருப்பதைக் கண்டு கவலையடைந்தார். இது எப்படி நடந்தது என சேர்மன் மண்டையை போட்டு உடைக்க, ட்ரேடிங்கில் பங்குகள் மதிப்பைக் கூட்ட சிலர் எழுதியதை, பேசியதை நம்பியதும் தான் காரணம். அதைவிட நம்மை இந்த ஷேரை அதிக விலை கொடுத்து வாங்கி ஏமாறச் செய்தது இந்த கம்பெனியுடன் தொழில் போட்டியில் உள்ள இன்னொரு கம்பெனி தான் எனத் தெரிந்தவுடன் சேர்மன் கலங்கித் தான் போய்விட்டார் என்று தான் சொல்ல வேண்டும்.

உலக அரங்கில் 12 வருடங்களாக நம்ம கம்பெனியின் துணிச்சலான செயல்பாடு, முதலீடு, வர்த்தகம், லாபம் மற்றும் சேர்மனைக் கண்டு க்ளோபல் கம்பெனிகள் எல்லாம் வியந்து பாராட்டுற நேரத்தில் உள்ளூர் ஷேர் வாங்கியதில் பெரிய நஷ்டத்தை சந்தித்தது அந்த கம்பெனிக்கு பெரிய பின்னடைவாக ஆகி நிற்கிறது. இந்த ஷேர் நஷ்டத்தை தான் தரும்னு பாரத் மூவர்ஸ் கம்பெனி மீது உள்ள அக்கறையில் பலர் சொன்னதைக் கேட்காமல் இருந்ததே இந்த நிலைக்குக் காரணம் என புரியும் போது தலைக்கு மேலே வெள்ளம் என்ற நிலை ஆகிப் போச்சு.

இப்படி கதையை நீட்டி முழுக்கி சொல்லி முடிப்பதற்குள், கதை சொல்வதை ஆர்வமாக கேட்கும் எடிட்டர் போத்தன், இது என்னணா! ஷேர் ட்ரேடிங் கதையா? உங்களுக்கு அரசியல் தவிர ஒன்றும் தெரியாதே இது என்ன புது ஜெர்னல் என போத்தன் கேட்க..

அந்நாளு கும்பகோணம் குசும்ப நம்ம கிட்டயே காட்டுராரு., இந்தக் கதையை பொறுமையா ஒருமுறை நீயே சொல்லிப் பாரு வேற எதாவது தோணும் என ராம் சொல்ல..

ஜி ஷேர் ட்ரேடிங் இப்படி ஏதாவது லாஸ் ஆகும்னு தெரிஞ்சு தானே எச்சரிக்கையாக " Investments in securities market are subject to market risks, read all the related documents carefully before investing" அப்படின்னு தெளிவா சொல்லிடுறாங்க. இது கூடவா அந்த கம்பெனிக்கு தெரியாம இருந்திருக்கும் என மீண்டும் தொடங்கினார் கரண்ஜி.

அதற்குள் சொமொட்டொவில் ஆர்டர் போட்ட தேங்காய் பன் வந்து விட்டது.

ராயா பன்-ஐ பங்கு போடு என பெரியவா சொல்ல..

கத்தி எங்கே என கத்தாமல் பொறுமையாக கேட்டு வாங்கி வெட்டினார்..பின் வெட்டியத் துண்டுகளை ஆபீஸில் அனைவரும் ருசித்தனர்.

# சென்னை பல்கலையில் கிறிஸ்தவ அரசியல் படிப்பு கல்வி மூலம் அடுத்த சிலுவைப் போரா?

இராஜேஷ்

சென்னைப் பல்கலைக்கழகத்தின் கிறித்தவ ஆய்வியல் துறை (Department of Christian Studies), தனது தனித்துவமான இரண்டாம் வத்திக்கான் சங்க ஆய்வுகளுக்கான சான்றிதழ் படிப்பு (Certificate Programme in Vatican II Council Studies) உள்ளிட்ட பல்வேறு படிப்புகளுக்கான இணையவழி சேர்க்கை பதிவைத் தொடங்கியுள்ளது.

இந்தக் கல்விப் பிரிவுகளில் சேர விரும்பும் மாணவர்கள், பல்கலைக்கழகத்தின் அதிகாரப்பூர்வ இணையதளத்தின் வாயிலாக தங்களது விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கலாம் என ஒரு விளம்பரத்தை வெளியிட்டிருந்தது Catholic Connect என்ற கிறிஸ்தவ தளம். இதுகுறித்து ஸ்ரீ டிவியின் செய்திகள் சிந்தனைகள் நிகழ்ச்சியில் விரிவாகப் பேசப்பட்டது.

இறையியல் படிப்புகள் பல்வேறு பல்கலையில் சொல்லித்தரப்படுகிறது. இதில் ரெகுலர் மற்றும் தொலைதூரக் கல்வி மூலம் பயில்வோர் உண்டு. ஆனால் இரண்டாம் வத்திக்கான் சங்க ஆய்வுகளுக்கான சான்றிதழ் படிப்பு என்பது இறையியல் படிப்பு இல்லை என்பதும், இது கிறிஸ்தவ பிரிவான கத்தோலிக்க கிறிஸ்தவ சபையின் மதமாற்ற முன்னெடுப்புகளையும், அடிப்படைவாத சித்தாந்தங்களையும் பரப்பும் முயற்சியாகவே அமைந்துள்ளது.

இந்தியாவில் கிறிஸ்தவ ஆதிக்கம் என்பதே கல்வி மூலமே எங்கும் பரவியது என்பதை பலரும் பல கட்டங்களில் ஆய்வுகள், எழுத்துக்கள், உரைகள் மூலம் நிரூபித்துள்ளனர். குறிப்பாகத் தமிழகத்தில் “திராவிடம்” என்ற பிரிவினைவாத, துவேஷத்தை முன்னிறுத்திய கொள்கை கால்டுவெல் என்ற பாதிரி மூலம் விஷ விதையாக விதைக்கப்பட்டதும், அது இப்போது ஆலகால விஷ விருட்சமாக ஓங்கி உயர்ந்து வளர்ந்திருப்பதை பார்த்து தான் வருகிறோம். உண்மையில் மொழியியல் ஆய்வு, ஒப்பிலக்கணம் என பல்வேறு வெளிப்பூச்சுக்கள் மூலம் பேசினாலும் தமிழர்கள் தனி இனக் குழுக்கள், தமிழ் மொழி தனித்துவமிக்கது என்ற மயக்கும் பெருமைமிக்கதான பிரச்சாரம் ஒருபுறம் எனில் இதற்குள் இழையோடும் அரசியல் என்பது தமிழையும், தமிழர்களையும் இந்தியா, ஹிந்து என்ற அடையாளத்திலிருந்து விலக்கச் செய்வதான மிஷினரி அரசியல் என்பதே.



நேரடியான வாட்டிகன், மிஷினரி என்றால் தமிழர்களிடம் எடுபடாமல் போய்விடும் என்றே திராவிடம் என்ற அரசியல் சித்தாந்தத்தின் பின்னால் ஒளிந்து கொண்டு கிறிஸ்தவ மதத்தை பரப்பும் உத்தியை பல ஆண்டுகளாக செய்து வருகின்றனர். சைவ சித்தாந்தம், ஹிந்து சமயங்கள் குறித்த சைவ, வைணவ படிப்புகள் பல்கலையில் இருப்பது போல இதுவும் அப்படித்தானே சொல்லித் தரப்படும், இதற்கு ஏன் இவ்வளவு கூச்சல், அச்சம், சச்சரவு என சிலர் கேட்கலாம். ஹிந்து சமய படிப்புகள் மற்றும் அதன் நோக்கம், இலக்கு பிரிவினையையோ, துவேஷத்தையோ, வெறுப்புணர்வையோ ஏற்படுத்துவது அல்ல, மாறாக அரசியல்மயமான இரண்டாம் வத்திக்கான் சங்க ஆய்வுகளுக்கான சான்றிதழ் படிப்பு அப்படியல்ல என்பதை புரிந்து கொள்ள வேண்டும். இது சமயப்படிப்பு அல்ல, கிறிஸ்தவ அரசியல் கட்டமைப்பை உருவாக்க செய்யப்படும் அஸ்திவாரம். கிறிஸ்தவர்களின் கல்விப்பணி, சேவையை பலரும் வாயாரப் புகழ்வதையும், ஆங்காங்கே கிறிஸ்தவ நிறுவனங்கள் ஓங்கி உயர்ந்து நிற்பதைப் பார்க்கும் போது மக்களிடம் அவர்களின் பிரச்சாரம் எடுபடுகிறது என்பதை உணராமல் ஏன் அச்சத்தை விதைக்கிறீர்கள் என்ற கேள்வி எழலாம்.

தமிழகத்தில் சென்ற திராவிட மாடல் ஆட்சியில் பல அமைச்சர்கள் கிறிஸ்தவம் இல்லை என்றால் தமிழர்கள் கல்வி கற்றிருக்கவே முடியாது என வாய்க்கூசாமல் மேடைதோறும் பேசி வந்தனர். சனாதனம் ஹிந்துக்கள் சிலரை கல்வி கற்க தடுக்கிறது, கிறிஸ்தவம் எல்லோருக்கும் கல்வி கிடைத்திட வேலை செய்கிறது என அப்பட்டமாக மத துதவேஷ பிரச்சாரத்தை செய்தனர். எல்லோருக்கும் கல்வியை கொண்டு சேர்க்கும் சிறுபான்மை நிறுவனங்கள் என பிரச்சாரம் செய்யப்படுவது எவ்வளவு மோசமான பொய்! சிறுபான்மையினர்கள், நீதிமன்றம் வரை சென்று சர்வ சிக்ஷ அப்யான் திட்டத்தின் தொடர்ச்சியாக ஏழை மாணவர்களுக்கு தரமான கல்வி, அதுவும் தனியார், அரசு ஆதரவுப் பள்ளிகளில் செயல்படுத்திட கொண்டுவரப்பட்ட RTE திட்டத்தை நடைமுறைப்படுத்த மாட்டோம் என கொடி பிடித்தது ஏன்? ஒரு பக்கம் தமிழன் கல்வி கற்கவே நாங்கள் தான் காரணம் என்ற பிரச்சாரம் மறுபக்கம் தரமான கல்வி ஏழைக்கு கிடைத்திடக் கூடாது என்பதற்கு நீதிமன்றத்தில் வழக்கு, எப்படியிருக்கிறது இவர்களின் முகமூடி? அதே ஹிந்துக்கள் நடத்தும் பள்ளிகளில் இந்த RTE திட்டம் சிறப்பாக செயல்படுத்தி வருவது ஒருபுறம் என்றால் அவர்களின் 25% சேர்க்கைக்கு உரிய நிதியை மாநில திராவிட மாடல் அரசு ஆண்டுக்கணக்கில் தராமல் இழுத்தடித்த அநீதியை நம்மால் மறந்து, அதை கடந்து செல்ல முடியாது.

கல்வி கொடுப்பதில் தான் ஓரவஞ்சனை என்றால் கல்வித் திட்டத்தில் கிறிஸ்தவ மதப் பிரச்சாரத்தை எப்படி நாம் செய்து வருகிறோம் என்பதை பாதிரி ஜோ அருண் பட்டவர்த்தனமாக பேசிய வீடியோக்கள் சமூகவலைதளங்களில் வைரலானதை எல்லாம் நாம் பார்த்தோம். கல்வி மூலம் மதமாற்ற பிரச்சாரத்தில் ஈடுபட்ட அந்த பாதிரிக்கும் சிறுபான்மை வாரியத் தலைவராக பதவி தந்து அழகுபார்த்தது திமுக. அதற்குப் பிரதிபலனாக கிறிஸ்தவ சபைகள் எல்லாம் ஓரணியில் திரண்டு நின்று 2026 சட்டமன்ற தேர்தலில் திமுக கூட்டணிக்கு ஓட்டளிக்க வேண்டும் என்ற பிரச்சாரத்தை முன்னெடுத்தார். இதையும் உண்மை என நம்பி கடைசியில் ஏமாந்து போய் நிற்கதியாக திமுக நிற்பது வேறு கதை. கல்வி மூலம் கிறிஸ்தவ மதமாற்ற முயற்சிப்பது, பிரச்சாரம் செய்வது இது தான் முதன்முறையா என்றால் இல்லை.

சென்னை பல்கலைக்கழகத்தின் பண்டைய வரலாறு மற்றும் தொல்லியல் துறை சார்பில் சுப்ரமணிய ஐயர் அறக்கட்டளை சொற்பொழிவு ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகிறது. உங்களுக்கு நினைவிருக்கலாம் 2025 கல்வியாண்டில், சென்னை பல்கலைக்கழகத்தின் பண்டைய வரலாறு மற்றும் தொல்லியல் துறை சார்பில் சுப்ரமணிய ஐயர் அறக்கட்டளை சொற்பொழிவுக்காக, இந்தியாவில் கிறிஸ்துவ மதத்தை பரப்புவது எப்படி, இந்த மார்க்கம் ஏன் தேவை ஆகிய தலைப்புகளில் மார்ச் 14-ம் தேதி நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த சொற்பொழிவு சென்னைப் பல்கலைக்கழகத்தின் சேப்பாக்கம் வளாகத்தில் பிற்பகல் 2 முதல் 5 மணி வரை நடத்த திட்டமிட்டிருந்தனர். இந்நிகழ்ச்சியில், பொறியாளர் கே.சிவக்குமார் சிறப்பு விருந்தினராக உரையாற்றுவதாக துறைத் தலைவர் (பொறுப்பு) ஜே.சவுந்தரராஜன் ஏற்பாடு செய்திருந்தார். இந்த நிகழ்ச்சிக்கு கல்வியாளர்கள், பேராசிரியர்கள், ஹிந்துத்துவ அமைப்பைச் சேர்ந்தவர்கள் உட்பட பல்வேறு தரப்பிலும் கண்டனங்கள் எழுந்தன.

சென்னை பல்கலைக்கழக வளாகத்தில் ஒரு மதத்தை பரப்புவது குறித்த கருத்தரங்கம் நடத்தப்படுவது மாணவர்கள் மத்தியில் தவறான முன்னுதாரணமாக அமைந்துவிடும் என்று சமூக வலைத்தளங்களில் கருத்துகள் பரவின. இந்த நிகழ்ச்சியை ரத்து செய்து, அதற்கு ஏற்பாடு செய்தவர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் எனவும் கோரிக்கைகள் வைக்கப்பட்டது.

இந்த நிலையில், இந்த நிகழ்ச்சி குறித்து விளக்கம் கேட்டு சென்னை பல்கலைக்கழகத்துக்கு ஆளுநர் மாளிகை சார்பில் நோட்டீஸ் அனுப்பப்பட்டது. இதனால், சென்னைப் பல்கலைக்கழகத்தின் இந்த நிகழ்ச்சி பெரும் சர்ச்சையானது.

இதற்கு விளக்கம் அளித்து சென்னை பல்கலைக்கழக பதிவாளர் எஸ்.ஏழுமலை ஆளுநரின் தனிச் செயலருக்கு அனுப்பிய கடிதத்தில், "பண்டைய வரலாறு மற்றும் தொல்லியல் துறை சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்த சுப்ரமணிய ஐயர் அறக்கட்டளை சொற்பொழிவை நடத்துவதற்கு பல்கலைக்கழகத்திடம் முறையான அனுமதி பெறப்படவில்லை. எனவே, இந்த நிகழ்ச்சியை ரத்து செய்யுமாறு சம்மந்தப்பட்ட துறையினருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது" என்று கூறப்பட்டது

இப்படி வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் கிறிஸ்தவ மிஷினரிகள் தங்கள் மதமாற்ற வேலையை செய்து வருவதைப் பார்த்து வருகிறோம். இத்தனை ஆண்டுகாலம் திராவிட என்ற மறைமுக கிறிஸ்தவ மிஷினரி கட்டமைப்பு மூலம் செய்து வந்ததை தமிழகத்தின் புதிதாக வந்துள்ள மீட்பர், காலத் திருப்பர்,தேவதூதர் ஜோசப் விஜய் ஆட்சியின் கீழ் தைரியமாகவே கல்வி மூலம் கிறிஸ்தவ மதப் பிரச்சாரம் என்பதையும் தாண்டி வாட்டிகன் அரசியலை முன்னெடுக்கத் தயாராகி இருப்பது இன்னொரு சிலுவைப் போரை சத்தமில்லாமல் பாடங்கள் மூலம் படை நடத்த திட்டமிட்டிருப்பதாகவே தோன்றுகிறது.

# மாவோயிஸ்ட் பயங்கரவாதத்திற்கு உதவிய பெங்களூரு கிறிஸ்தவ மிஷனரி

இராமகிருஷ்ணன்

கர்நாடக மாநிலம் பெங்களூரு கொத்தனூரில் டி.டி.ஐ எனப்படும் "தி திமோதி இனிசியேசிடிவ்" என்ற கிறிஸ்தவ மிஷனரி இயங்குகிறது. இதன் தலைமையகம் அமெரிக்காவின் வடக்கு கரோலினா. இந்த கிறிஸ்தவ மிஷனரி அரசின் அனுமதி பெறாமல் இயங்கி வந்துள்ளது. இந்த கிறிஸ்தவ மிஷனரி வெளிநாட்டு நிதியான 92.55 கோடி ரூபாயை சட்டவிரோதமாக இந்தியாவிற்குள் கொண்டு வந்ததோடு மட்டுமல்லாமல் மாவோயிஸ்ட் அதிகம் நடமாடும் பகுதிகளில் செலவழித்துள்ளதாக அமலாக்கத்துறை குற்றம் சாட்டியுள்ளது.

அமெரிக்காவின் 'ட்ரூயிஸ்ட் வங்கி' (Truist Bank) வழங்கிய சர்வதேச டெபிட் கார்டுகள் மூலமாக இந்தப் பணம் இந்தியாவுக்குக் கடத்தப்பட்டுள்ளது. கடந்த சில ஆண்டுகளில் மட்டும் இந்தியா முழுவதும் சுமார் 1,000-க்கும் மேற்பட்ட இதுபோன்ற வெளிநாட்டு டெபிட் கார்டுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. நவம்பர் 2025 முதல் ஏப்ரல் 2026 வரையிலான குறுகிய 6 மாத காலத்திற்குள், கர்நாடகா, சத்தீஸ்கரின் பஸ்தர், தம்தரி மற்றும் அசாமின் கோல்பாரா ஆகிய பகுதிகளில் உள்ள ஏடிஎம்கள் (ATMs) மூலம் இந்த 92.55 கோடி ரூபாய் ரொக்கமாகத் திரும்பத் திரும்ப எடுக்கப்பட்டுள்ளது. சத்தீஸ்கரின் தம்தரி பகுதியில் உள்ள ஒரு கூட்டுறவு வங்கிக் கிளையின் ஏடிஎம் மூலம் மட்டும் கோடிக்கணக்கான ரூபாய் எடுக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் TTI அமைப்போடு சேர்த்து 7 முக்கிய நபர்கள் மீது எஃப்.ஐ.ஆர் (FIR) பதிவு செய்யப்பட்டுள்ளது. ஜோனதன் எஸ் ராஜன் பெங்களூரைச் சேர்ந்த இவர், TTI அமைப்பின் இந்தியச் செயல்பாடுகளின் தலைவராக இருந்து மொத்த நிதியையும் கையாண்டுள்ளார். அஜித் வர்கீஸ் மத்தாய் 'லேயர் எல்எல்சி' மற்றும் 'கார்க்செஸ் எல்எல்சி' போன்ற போலி நிறுவனங்கள் மூலம் பணத்தை மாற்ற உதவியவர். வர்கீஸ் சாக்கோ சத்தீஸ்கரின் தம்தரி பகுதியில் ஏடிஎம் மூலம் பணம் எடுப்பதைக் கண்காணித்தவர். பாப்லு குர்மி, அசாம் மாநிலப் பணப் பரிமாற்றங்களைக் கவனித்தவர் மற்றும் பெங்களூருவைச் சேர்ந்த மைக்கா மார்க் மற்றும் மைசூரைச் சேர்ந்த சுப்ரீம் ஜாய் என்ற 7 பேர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், அமலாக்கத்துறை கடந்த ஏப்ரல் மாதம் அதிரடி சோதனைகளைத் தொடங்கியவுடன், இந்த மிஷனரி நெட்வொர்க் ஆதாரங்களை அழிக்க முயன்றுள்ளது. டிஜிட்டல் வங்கிப் பரிவர்த்தனை பதிவுகள் அனைத்தும் மைக்கா மார்க் என்பவரின் உத்தரவின் பேரில் அழிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. அதே போன்று TTI அமைப்பின் சர்வதேச இணையதளம், இந்தியப் பயனர்கள் பார்க்க முடியாதவாறு உடனடியாக முடக்கப்பட்டுள்ளது.

ஆனால் இதற்கெல்லாம் முன்னதாக "ஜோஸ் பெல்" என்ற வெளிநாட்டு நபர் ஒருவரை விமான நிலையத்தில் சோதனையிட்டபோது, அவரிடமிருந்து 24 வெளிநாட்டு டெபிட் கார்டுகள் பறிமுதல் செய்யப்பட்டதுதான் இந்த ஒட்டுமொத்த நெட்வொர்க்கையும் வெளிச்சத்திற்குக் கொண்டு வந்துள்ளது.

இந்தியாவை நிலைகுலைய செய்ய கிறிஸ்தவர்கள் தொடர் முயற்சி செய்துவருகிறார்கள். விடுதலைக்குப்பின் கேரளத்தில் கம்யூனிஸ்ட் அரசை கவிழ்க்க அமெரிக்கா சர்ச்சுகளைப் பயன்படுத்தியது. கூடங்குளம் அணு உலைப் போராட்டத்திற்கு கிறிஸ்தவ NGOக்கள் வாயிலாக அந்நிய நாடுகள் பண உதவி செய்தது. ஸ்டேண்ஸ் சாமி போன்ற பாதிரியார்கள் நக்ஸல் பயங்கரவாதத்தைத் திட்டமிட்டு வளர்த்தனர். இந்தியாவில் மாவோயிஸ்ட் பயங்கரவாதத்தை உருவாக்கி நிதியுதவி செய்து ஆயுத உதவி செய்து வெளிநாட்டு தொடர்புகளை ஏற்படுத்தி ஆதரவு மனப்பான்மையை சமூகத்தில் உருவாக்க பல நிழல் அமைப்புக்களை ஏற்படுத்தி செயலாக்கம் கொடுப்பது கிறிஸ்தவ என்.ஜி.ஓக்கள். பல்லாயிரம் உயிர்களை காவு வாங்கி நாட்டின் வளர்ச்சியைத் தடுத்து கல்வியைக் கெடுத்த பாதகத்திற்கு மாவோயிஸ்ட்டுகளைப் பயன்படுத்திய நாசகார சக்திகள் இந்த மிஷனரிகள். இந்த கிறிஸ்தவ என்.ஜி.ஓவைப் போல பல நூறு கிறிஸ்தவ அமைப்புக்கள் நாடு முழுவதும் செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனங்களையும் முடக்கி இதை நடத்துபவர்களைத் தண்டித்தால் தான் இந்தியா அமைதி பூங்காவாக திகழும் என்பதில் மாற்றுக்கருத்து இருக்க முடியாது.

# கோவில் நிலத்தில் பள்ளி - சர்ச்சாக மாற்றிய கிறித்துவர்கள்

*வீரவேலு நாச்சியார்*

ஆம்பூர் மாவட்டத்தில் துதிப்பட்டு கிராமத்தில் 5000 ஆண்டுகள் பழமையான பிந்து மாதவ பெருமாள் கோவில் அமைந்துள்ளது. இக் கோவிலுக்கு அருகிலேயே 'ஐ.இ.எல்.சி (IELC) தொடக்கப் பள்ளி' நடைபெற்று வருகிறது. 70 ஆண்டுகளுக்கு முன் சீனிவாச நாயுடு என்பவர் தன் வசம் வைத்திருந்த நிலத்தை அப்பகுதி கிராம குழந்தைகளின் கல்விக்காக தொடக்கப் பள்ளி அமைக்க ஜான்சுந்தர் என்பவரிடம் ஒப்படைத்தார். அதன் பின் ஜான் சுந்தரும் கல்வி நிறுவனத்தைத் தொடங்கி நடத்தி வந்தார். இந்நிலையில் தான் 2023ம் ஆண்டில், India Evangelical Lutheran Church-ஐ சார்ந்த பாதிரியார் துரைராசு சர்ச் கட்டத் தொடங்கினார். இப்பகுதி ஹிந்துக்கள் எதிர்க்கவே, மே 27 2023 அன்று வருவாய் கோட்டாச்சியர், சட்டவிரோதமாக கட்டப்பட்ட சர்ச் மற்றும் கோபுரத்தின் பகுதிகளை அகற்றுமாறு உத்தரவிட்டார். அப்போது சில முறைகேடுகள் வெளிச்சத்திற்கு வந்தன. உள்ளூர் கீழ்நிலை வருவாய்த்துறை அதிகாரிகளுடன் கூட்டுச் சேர்ந்து நில ஆவணங்களில் முறைகேடு செய்ததாக கூறப்படுகிறது. அதாவது நிலத்தின் வகைப்பாட்டை சர்க்கார் பொறம்போக்கு என்பதிலிருந்து ரயத்துவாரி என்று சட்டவிரோதமாக மாற்றப்பட்டதோடு, பதிவேட்டில் இருந்த சீனிவாச நாயுடுவின் பெயரை IELC என்று மாற்றியுள்ளனர். இந்த நில ஆவண மோசடியை ஜூன் 5 2023 வெளிக்கொணர்ந்த மக்கள் மாவட்ட ஆட்சியரிடம் மனுக்களை சமர்பித்தனர். ஆட்சியரோ நீதிமன்றத்தை அணுகுமாறு மக்களுக்கு உத்தரவிட்டார். அதன் பின் 21 ஜனவரி 2024 அன்று தொடக்கக் கல்வி இணை இயக்குநர் இது குறித்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு மாவட்டக் கல்வி அலுவலருக்கு உத்தரவிட்டார்.

இதற்கிடையில் பாதிரியார் துரைராசு மாவட்ட ஆட்சியரை அணுகி ஒட்டுமொத்த பள்ளி சொத்தையும் ஒரு பழைய சர்ச் கட்டிடத்திற்குரியது என்றும் சாதாரண புனரமைப்பு பணிகள் மட்டுமே நடைபெறுவதாகவும் பொய்யாக சித்தரித்தார். அங்கு தொடக்கப்பள்ளி இயங்கி வருவதையே மறைத்து தங்களுக்குச் சாதகமான உத்தரவை பெற்றார் பாதிரியார். மாவட்ட ஆட்சியரும் ஆவணங்களை சரி பார்க்காமல் இது ஒரு பழைய சர்ச் என்பதால் இதற்கு முன் அனுமதியோ அல்லது ஒப்புதலோ தேவையில்லை என்று ஒருதலைபட்சமாக உத்தரவிட்டார்.

இந்நிலையில்தான் சென்னை உயர்நீதிமன்றத்தில்



இது குறித்து திரு ஜெய்சங்கர் என்பவரால் வழக்கு தொடுக்கப்பட்டது. அந்த வழக்கு 29.05.2026 அன்று நீதிபதி ஜி.ஆர்.ஸ்வாமிநாதன் அவர்கள் முன் வந்தது. அந்த வழக்கில் நீதிபதி அவர்கள், பாதிக்கப்பட்ட சமூகத்திற்குத் தங்கள் தரப்பை எடுத்துரைக்க எவ்வித வாய்ப்பும் வழங்காமல், முந்தைய வருவாய் கோட்டாட்சியரின் (RDO) சட்டப்பூர்வ உத்தரவை மீறி மாவட்ட ஆட்சியர் செயல்பட்டது அதிகார வரம்பை மீறிய செயலாகும் என்று கூறி மறு உத்தரவு வரும் வரை சர்ச்சை கட்டக்கூடாது என்றும் எந்த நிலையில் இருக்கிறதோ அதே நிலை தொடரவேண்டும் என்றும் உத்தரவிட்டார்.

சட்டவிரோத சர்ச்சை எதிர்த்து 2023ம் ஆண்டிலிருந்து தொடர்ந்து ஹிந்துக்கள் போராடி வருகின்றனர். தமிழகத்தில் கிறிஸ்தவர்கள் தொடர்ந்து தவெக ஆட்சி வந்தவுடன் இது போன்று பல சட்டவிரோத சர்சுகள் மீண்டும் கட்டப்படுவது வாடிக்கையாகி விட்டது. இதே மாவட்டத்தில் வாணியம்பாடியைச் சுற்றியுள்ள பகுதிகளில் கிராம்ம்தோறும் சர்ச் கட்ட வேண்டும் என்று தவெக பெயரில் போஸ்டர்கள் ஒட்டப்பட்டன. புகார் கொடுத்தும் காவல்துறை நடவடிக்கை எடுக்கவில்லை. ஜோசப் விஜய் பதவியேற்ற அதே நாளில் கோவை மாவட்டம் காளப்பட்டில் இரவோடு இரவாக சர்ச் கட்டும் பணி தொடங்கியது. நீதிமன்றத்தை நாடி ஹிந்துக்கள் தடை உத்தரவு பெற்றனர். இந்த சட்டவிரோத செயல்களுக்கு அதிகாரிகளும் துணைபோவது ஆட்சி மாறினாலும், காட்சி மாறவில்லை என்பதையே காட்டுகிறது.

# இஸ்லாமிய அடிப்படைவாத ஆதரவு திமுகவை பின்பற்றும் தவெக

பால கௌதமன்

25 ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்தவர்களை விடுதலை செய்ய முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருவதாக சிறுபான்மை நலத்துறை அமைச்சர் திரு ஷாஜகான் தெரிவித்துள்ளார். சிறை முன்விடுதலை தொடர்பாக முடிவெடுக்கவேண்டியது சட்டத்துறை மற்றும் உள்துறை அமைச்சகம். ஆனால், சிறுபான்மை நலத்துறை அமைச்சராக இருக்கும் திரு ஷாஜகான் இது குறித்து ஏன் பேசுகிறார்? தமிழக சிறைகளில் பயங்கரவாத வழக்குகளில் கைது செய்யப்பட்டவர்கள் நீண்ட சிறைத்தண்டனைகளை அனுபவித்து வருகின்றனர். ஆகவே இந்த நடவடிக்கை இஸ்லாமிய பயங்கரவாதிகளை முன்விடுதலை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தை கொண்டே எடுக்கப்பட்டுள்ளது. இஸ்லாமிய சிறைவாசிகளை வெளியே விடுகிறோம் என்று அறிவித்தால் பிரச்சினையாகிவிடும். அதற்காக, 25 ஆண்டுகால சிறைத்தண்டனை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பு இஸ்லாமியர்களை திருப்திபடுத்தவேண்டும், இஸ்லாமியர்களை சென்றடைய வேண்டும் என்பதற்காக சட்டத்துறைக்குத் தொடர்பே இல்லாத சிறுபான்மையின நலத்துறை அமைச்சர் அதுவும் இந்திய தேசிய முஸ்லீம் லீக்கின் அமைச்சரால் வெளியிடப்பட்டுள்ளது.

சிறுபான்மையின நலத்துறை அமைச்சராக இருக்கும் திரு ஷாஜகான் அவர்கள் பாகிஸ்தான், ஐ.எஸ்.ஐ ஏஜெண்டாக செயல்படும் இலங்கை எம்.பி ஹிஸ்புல்லா, ராஃப் ஹக்கீம், ஈஸ்டர் குண்டுவெடிப்பில் கைது செய்யப்பட்ட ரியாத் பத்யுதீன் ஆகியோருடன் தொடர்புடையவர். ஆகவே, ஆட்சிக் கட்டிலில் அமர்ந்தவுடன் பயங்கரவாத ஆதரவு நடவடிக்கைகளைத் துரிதமாக செய்து வருகிறார். இந்திய பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட வக்ஃப் திருத்த சட்டத்தை தமிழக அரசு பின்பற்றாது என்று அறிவித்துள்ளார் அமைச்சர் ஷாஜகான். இது ஒரு சட்டவிரோத செயல் என்றாலும், இஸ்லாமிய சமுதாயத்தைச் சுரண்டும் கொள்ளையர்களிடமிருந்தும், பாரம்பரிய இஸ்லாமிய வழிபாட்டு முறைகளை ஒழித்து அடிப்படைவாத அரேபிய வழிபாட்டு முறைகளை புகுத்தும் தீய சக்திகளை ஊக்குவிக்கப்பதற்காகவுமே புதிய வக்ஃப் சட்டத்தை அமல்படுத்த மறுக்கிறார்.

இந்நிலையில், திருப்பரங்குன்றம் மலையுச்சியில் தீபம் ஏற்ற வேண்டும் என்ற நீதிமன்ற உத்தரவை அமல்படுத்த மாட்டோம் என்று தவெக அமைச்சரும், திருப்பரங்குன்றம் சட்டமன்ற உறுப்பினருமான திரு நிர்மல்குமார் தெரிவித்துள்ளார். இஸ்லாமிய சிறைவாசிகள் முன்விடுதலை, இஸ்லாமிய வாக்குகளுக்காக நீதிமன்ற தீர்ப்பை அவமதிப்பது, முருகனின் ஆறுபடை வீடுகளில் முதல் வீடான திருப்பரங்குன்றம் மலையை முருகனுக்கே சொந்தமில்லை என்று அறிவித்து ஹிந்துக்களின் வழிபாட்டு உரிமையை பறிப்பது தமிழின் ஆன்மீக அடையாளத்தை அழித்து அந்நிய அடையாளங்களை புகுத்துவது பாரம்பரிய இஸ்லாமிய பழக்கவழக்கங்களை ஒழித்து பிரிவினையையும், பயங்கரவாதத்தையும் தூண்டும் அந்நிய சக்திகளை ஊக்குவிப்பது, இஸ்லாமிய வழிபாட்டிற்காக எழுதி வைக்கப்பட்ட மானியங்களை தனியார்கள் திருட வழிவகை செய்வது போன்ற முந்தைய திமுக, அதிமுக அரசுகள் செய்த செயல்களை தவெக அரசு தொடர்கிறது.

கடந்த ஆட்சிகளில் இஸ்லாமிய அடிப்படைவாதிகளை திருப்திபடுத்த திராவிட அரசுகள் எதை செய்தனவோ அதை இஸ்லாமிய அடிப்படைவாதிகளே நேரடியாக செய்ய இந்திய முஸ்லீம் லீக்கைச் சேர்ந்த திரு ஷாஜகானை ஜோசப் விஜய் சிறுபான்மை நலத்துறை அமைச்சராக்கி உள்ளார் என்றே தோன்றுகிறது. அமைச்சர்கள், உயரதிகாரிகள் பற்றிய ரகசிய குறிப்புக்களை மாதம் ஒருமுறை அல்லது இருமுறை உளவுத்துறை IG முதல்வருக்கு அனுப்புவார். இந்த அறிக்கையைக் கூட தவெகவின் தேர்தல் பிரச்சார வியூக வகுப்பாளர் ஜான் ஆரோக்யசாமி, மூத்த அமைச்சர்களில் ஒருவர், மற்றும் முதல்வரின் பாதுகாப்பு அதிகாரி ஒருவரும் தான் பார்வையிடுகின்றனர் என்று செய்திகள் வெளிவருகின்றன. இந்த ரகசிய அறிக்கைகளை வாட்ஸ் அப்பிலும் பகிர அறிவுறுத்துவதாகவும் தகவல்கள் வெளியாகின்றன. இது அந்த அறிக்கையின் ரகசியத் தன்மைக்கு சவாலாக அமைந்துள்ளது. இந்த சூழலில் பயங்கரவாத ஆதரவு போக்கு, அமைச்சர்களின் செயல்பாடுகள் போன்றவற்றை காவல்துறை அதிகாரிகள் எப்படி முதல்வரிடம் தைரியமாக தெரிவிக்க முடியும்? இந்த சூழலைப் பயன்படுத்தி இஸ்லாமிய அடிப்படைவாதிகள் தங்கள் பணிகளைத் தங்கு தடையின்றி அரசு அதிகாரத்தைப் பயன்படுத்தி செய்து வருகின்றனர். தமிழகம் இன்னொரு காஷ்மீராக மாறாமல் தடுக்க முதல்வர் விழித்துக்கொள்வாரா?

# காலியாகும் மம்தாவின் கூடாரம் - பாஜகவிற்கு எச்சரிக்கை

ரகுபதி

மேற்கு வங்க அரசியலில் கடந்த 15 ஆண்டுகளுக்கும் மேலாக அசைக்க முடியாத சக்தியாக விளங்கிய மம்தா பானர்ஜி மற்றும் அவரது அகில இந்திய திரிணாமுல் காங்கிரஸ் கட்சி, தற்போது மிகக் கடுமையான ஒரு அரசியல் நெருக்கடியைச் சந்தித்து வருகிறது.

சமீபத்திய 2026 மேற்கு வங்க சட்டமன்றத் தேர்தலில் மம்தா கட்சி கடும் தோல்வியடைந்ததையடுத்து திரிணாமுல் காங்கிரஸ் கட்சி இதுவரை கண்டிராத மிகப்பெரிய உட்கட்சிப் பிளவையும், அரசியல் பழிவாங்கல்களையும் சந்தித்து வருகிறது. தேர்தல் தோல்விக்குப் பின் கட்சிக்குள் பெரும் அதிருப்தி அலை எழுந்துள்ளது. மம்தா பானர்ஜி மருமகன் அபிஷேக் பானர்ஜி அதிகாரம் அதிகமாக இருப்பதாகவும் அதை ஒருபோதும் ஏற்க முடியாது என்று 58 எம் எல் ஏக்கள் அதிருப்தியை வெளிப்படுத்தி இருக்கின்றனர். அதோடு நில்லாமல் இந்த 58 அதிருப்தி எம்எல்ஏக்களும் சட்டப்பேரவையில் திரிணாமுல் காங்கிரஸ் கட்சிக்கான குழு தலைவர் அதாவது எதிர்க்கட்சித் தலைவர், தலைமை கொறடா, துணைத் தலைவர் நியமனத்தில் மம்தாவின் முடிவை எதிர்த்து கடந்த புதன்கிழமை அவைத் தலைவரிடம் கடிதம் அளித்திருக்கின்றனர். பெரும்பான்மை அடிப்படையில் அவர்களின் முடிவை சபாநாயகர் ஏற்றுக் கொண்டிருக்கிறார். கட்சியில் இருந்து நீக்கப்பட்ட ரிதபிரத பானர்ஜி 58 எம்எல்ஏக்களின் ஆதரவுடன் திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் சார்பில் மேற்குவங்க சட்டசபையில் எதிர்க்கட்சி தலைவராக மாறியிருக்கிறார். மொத்தம் 80 எம்எல்ஏக்களின் மூன்றில் ஒரு பங்கு அதாவது 54 எம்எல்ஏக்கள் அணி மாறினால் அது கட்சி தாவல் சட்டமாக கருதப்படாது.



திரிணாமுல் காங்கிரஸின் 20 மக்களவை உறுப்பினர்கள் கட்சித் தலைமைக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியதோடு நில்லாமல் நாடாளுமன்ற சபாநாயகரைச் சந்தித்து, 'தேசிய குடிமக்கள் கட்சி' (NCPI) என்ற பிராந்தியக் கட்சியுடன் தங்களை இணைத்துக் கொள்வதாக அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளனர். இவர்கள் தங்களுக்குப் பெரும்பான்மை இருப்பதாகக் கூறி, தங்களது அணியே உண்மையான திரிணாமுல் காங்கிரஸ் என்று உரிமை கோரவும் திட்டமிட்டுள்ளனர்.

இந்த அதிருப்தி குழுவினர் மத்தியில் ஆளும் பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு (NDA) ஆதரவளிக்கப் போவதாகவும் அறிவித்துள்ளனர்.

கட்சியின் சரிவு இதோடு நிற்கவில்லை இதன் தாக்கம் உள்ளாட்சி அமைப்பு வரை எதிரொலிக்க தொடங்கியுள்ளது. வடக்கு 24 பர்கானாஸ் மாவட்டத்தில் உள்ள காஞ்ச்ராபாரா மற்றும் ஹாலிசஹர் ஆகிய முக்கிய நகராட்சிகளில் திரிணாமுல் காங்கிரஸைச் சேர்ந்த கவுன்சிலர்கள் மொத்தமாகத் தங்கள் பதவிகளை ராஜினாமா செய்து வருகின்றனர். இவர்கள் அடுத்தடுத்து பாஜகவில் இணையலாம் என்ற பேச்சும் பலமாக எழுந்துள்ளது.

மம்தா பானர்ஜிக்கு மிகவும் நெருக்கமான மூத்த தலைவர்கள் பலரே தற்போது அவரை விட்டு விலகி வருவது, திரிணாமுல் காங்கிரஸை பெருமளவில் பலவீனப்படுத்தியுள்ளது.

மம்தா பானர்ஜி தன் மருமகனிடம் கட்சியை ஒப்படைக்க வேண்டும் என்று தீட்டிய திட்டத்தின் விளைவாகவும், அவரது மருமகன் அபிஷேக் பானர்ஜியின் சர்வாதிகாரப் போக்கினாலும், மரியாதைக் குறைவான நடத்தையினாலும் திரிணாமுல் காங்கிரஸ் இன்று சரிவுற்றுள்ளது. இது மட்டுமின்றி எந்த கொள்கையும் இல்லாமல் இடதுசாரி குண்டர்களை எதிர்ப்பதற்காக உருவாக்கப்பட்ட குண்டர் படையே திரிணாமுல் காங்கிரஸ். கட்ட பஞ்சாயத்து, மாமூல் வசூல் என்று சட்டவிரோத சம்ராஜ்யம் நடத்தும், கொள்ளைக் கூடாரமாகவும் திரிணாமுல் காங்கிரஸ் மாறியதால், பணத்திற்கும், பதவிக்கும் அக்கட்சியைச் சார்ந்தவர்கள் எளிதாக விலை போகிறார்கள். காவல்துறை உதவியுடன் அரசின் ஆசியுடன் ரவுடித்தனம் செய்தவர்களுக்கு ஆட்சியின் ஆதரவு இல்லை என்று தெரிந்தவுடன் பயத்தில் திரிணாமுல் காங்கிரஸை விட்டு ஓடுகிறார்கள். பாரதிய ஜனதா கட்சி இந்த ரவுடிகளை சேர்த்துக்கொண்டு அவர்களை முன் நிறுத்துமானால் பாஜகவிற்கும் திரிணாமுல் காங்கிரஸின் நிலை தான் ஏற்படும் என்பதைப் புரிந்து கொண்டு செயல்படுவது பாஜகவிற்கு நல்லது. திரிணாமுல் காங்கிரஸினரை மிகுந்த எச்சரிக்கையுடன் கையாண்டு சட்டத்தின் ஆட்சியை மேற்கு வங்கத்தில் பாஜக நிறுவ வேண்டும் என்பதே அந்த மாநில மக்களின் எதிர்பார்ப்பு.

# அரசியல் உலா

- கரிகாலன்

## கடினமான மலைப்பாதை

**எச்சரிக்கை:**
எங்கோ நடந்ததை நேரில் பார்த்தது போல பேசுகின்ற எல்லாம் தெரிந்த ஏகாம்பரங்கள் இங்கே பலர் இருக்கிறார்கள். வாங்கின காசுக்கு மேலே கூவுபவர்களும் இங்கே உண்டு. ஊடக தர்மத்திற்கு அவை கேடு.

**தெரிந்ததைத் சொல்லத் தேவையில்லை, தெளிந்ததைச் சொல்வதே சிறந்தது. முதிர்ந்த அனுபவம் உள்ள பத்திரிகையாளர்கள் அப்படியே பேசி, எழுதி வருகிறார்கள். அவ்வகையில் எனது சிற்றறிவுக்கு எட்டிய சில விஷயங்களை எச்சரிக்கையாக எழுதுகிறேன்.**

அண்ணாமலை எனும் இளைஞர் தமிழக அரசியலில் பாரதிய ஜனதா கட்சியின் இளம் தலைவராக அறிமுகம் ஆனார், பாரதிய ஜனதா கட்சியின் முகமாகப் பிரபலமானார். திறமையாளர்கள் பலருக்கும் இருக்கக் கூடிய பிரச்சனை அவருக்கும் வந்தது.

அமைப்புக்கு கட்டுப்படுவது அவருக்குச் சிரமமாக இருந்தது. அவரது விருப்பமும் தேர்வும் வேறாக இருந்ததால் வேராக இருந்த, அடையாளம் தந்த அரசியல் கட்சியை விட்டு விலகி அவரது பயணத்தைத் தொடரப் புதிய பாதையை வகுத்து வருகிறார்.

துக்ளக் ஆசிரியர் தனது பேட்டி ஒன்றில் கடந்த ஆண்டு சம்பவங்களைக் குறிப்பிட்டு மாநிலத் தலைவர் பதவியில் அண்ணாமலையே தொடர வேண்டும் என்று தான் வலியுறுத்தியதாகவும், பதவி மாற்றத்தைத் தான் விரும்பவில்லை என்றும் தெரிவித்து இருந்தார்.

துக்ளக் பெயரைத் தன் பெயரோடு சேர்த்து பயன்படுத்தும் மற்றொரு பத்திரிகையாளர் மற்றொரு பேட்டியில் கடந்த ஆண்டு அண்ணாமலை மாநிலத் தலைவர் பதவியில் இருந்து நீக்கப்படவில்லை, அவரே ராஜினாமா செய்தாரெனத் தம்பட்டம் அடிக்கிறார்.

அவதூறு சொல்லாமல் அண்ணாமலை பிரிந்து சென்றதாக வேறொரு பேட்டியில் குருமூர்த்தி குறிப்பிட்டது உண்மைதான். ஆனால் அண்ணா ஆதரவாளர்கள் தரப்பிலிருந்து அவதூறுகள் மலைபோலக் குவிகின்றன. அதை அவர்களும் அறிவார்கள்.

வேண்டாம் என விட்டுச் சென்ற கட்சியைப் பற்றி எத்தனைக் கேவலமான சொல்லாடல்கள்! திராவிட இயக்கங்கள் கூட அவர்களைப் பார்த்து அஞ்ச வேண்டும். அப்படி ஒரு அநாகரிகம்.

அது அவர்களுக்குப் புதிதல்ல. ஆரம்ப முதலே அண்ணா ஆதரவு கோஷ்டிகள் நேரடியாக, மறைமுகமாக பிற பாஜக தலைவர்கள் மீது குறை சொல்லிக் கொண்டும், சேற்றை அள்ளி வீசிக்கொண்டும் இருக்கிறார்கள். இப்போது இயக்கத்தின் மீதும்!

தனது பெயரில் வேறு எந்த ரூபத்திலும் இயங்கும் அமைப்புகளுக்குத் தனது அங்கீகாரம் கிடையாதென இப்பொழுது தனி இயக்கம் கண்டபின் அறிவித்திருக்கின்ற அண்ணா இதற்கு முன்பும், இப்பொழுதும் அவரது பெயரால் பாஜக தலைவர்கள் மீது அவதூறு பரப்பும் ஆதரவாளர்களை நோக்கி எந்த வேண்டுகோளும் வைத்ததில்லை.

அந்த ராஜினாமாவிற்குப் பிறகு அவர் பல விஷயங்களை வாய் திறந்து பேசவில்லை தான். ஆனால் பல்வேறு விதமான வறட்டு வாதங்களை முன்வைத்து பாரதிய ஜனதாவை பலவீனப்படுத்தும் முயற்சியில் அந்த இயக்கத்தினர் தீவிரமாக இறங்கி இருக்கிறார்கள். பொன்னேரி பொதுக்கூட்டம் மட்டுமே பொதுப்பார்வைக்கு வந்தது.

அண்ணாவுக்கு வந்திருப்பது ஒவ்வாமை வியாதி.அடிப்படைப் புரிதல், ஆழ்ந்த சிந்தனை, இணைந்து பணி செய்தல் ஆகியவையே அதற்கு மருந்து. ஆனால் அதை மறுத்து, மறைத்து அவருக்கு ஒத்து ஊதி, புதிய இயக்கத்துக்குத் தூபம் போடும் ஊடக ஜால்ராக்கள் அந்த வியாதி குறையாமல் பார்த்துக் கொள்கிறார்கள்.

அண்ணா தேர்ந்தெடுத்தது கடினமான மலைப் பாதை. அதில் பயணிப்பது அவரவர் விருப்பம். மனச் சோர்வு ஏற்படும் போதெல்லாம் உலாப் போவது அவரது வழக்கம். அதுவும் அவருக்குப் புதிதல்ல என்றாலும் அவரை நம்பியே கட்சியைப் பிரிந்த சில லட்சம் இயக்க உறுப்பினர்களை எண்ணி நாம் வருந்த வேண்டி இருக்கிறது.

# ஜனநாயகத்தின் அச்சாணி

**கடந்த இதழில் பாஜகவைப் பற்றி எழுதாமல் இருந்ததற்குக் காரணம் அங்கே நிலவிய ஒரு குழப்ப நிலை. அப்பொழுது கலங்கி இருந்த கமலாலயம், இப்பொழுது தெளிந்துள்ளது. சமீபத்திய நிகழ்வுகளால் குளம் வற்றி விட்டது என்றோ, முழுவதுமாகக் களங்கம் நீங்கியது என்றோ சொல்ல இயலாது.**

**எச்சரிக்கை 1:**

கடந்த இரு வாரங்களில் கட்சியை விட்டு விலகிய பலரும் ஏதோ ஒரு நபரால், ஒரு இயக்கத்தால் ஈர்க்கப்பட்டு அங்கே செல்லவில்லை. உழைப்பவர்களுக்கான அங்கீகாரம், தனக்கான அரசியல் எதிர்காலம் இனி இந்தக் கட்சியில் இல்லை என்ற அவநம்பிக்கைமிகுதியில் அவர்கள் வெளியேறியுள்ளனர்.

**எச்சரிக்கை 2:**

எச்சரிக்கையை கட்டம் கட்டிப் பிரசுரிப்பது நம் வழக்கம். ஆனால் இந்த முறை ஒட்டுமொத்தக் கட்டுரையுமே எச்சரிக்கையாகத்தான் இருக்கப் போகிறது.

மயிலாப்பூருக்கானத் தவறான வேட்பாளர் தேர்வு தமிழகம் முழுவதிலும் எதிரொலிக்கும், கட்சியின் வாக்கு சதவீதத்தைச் சரிக்கும் என்பதை நம் ஸ்ரீ தமிழ் இதழில் தேர்தலுக்கு முன்பே எச்சரித்து இருந்தோம்.

எந்த ஒரு நபரோ, இயக்கமோ தோல்வியைக் குறி வைத்து எந்தச் செயலையும் செய்வதில்லை. விளைவுகள் வெற்றியை ஈட்டாத போது குறிக்கோள்கள் கேள்விக்குறி ஆகின்றன. தமிழக பாரதிய ஜனதா கட்சி இப்பொழுது அப்படிப்பட்டச் சூழலில் சிக்கித் தவிக்கிறது.

தனிநபர்களை நம்பி இந்தக் கட்சி இல்லை என்று வெளியே போனவர்களைப் பார்த்து உள்ளே இருப்பவர்கள் சொல்லும்பொழுது, வெளியே போகாத சில தனிநபர்களுக்காகவே இந்தக் கட்சி நடக்கிறதோ என்ற சந்தேகமும் எழாமல் இல்லை.

பேத்திக்குத் தாலி கட்டும் சமயத்தில் பாட்டி மணவறையில் உட்கார்ந்த கதையாகத் தான் இருக்கிறது பாஜகவின் வேட்பாளர் தேர்வு. சிலருக்கென்று தொகுதிகளையும், சிலருக்கு மாநிலத்தையும் நேர்ந்து விட்டாற் போல சமீபத்திய தேர்தல்களில் நடக்கின்ற கேலிக் கூத்துகள் தொண்டர்களை வெகுவாக நோகடித்து இருக்கிறது.

திராவிடக் கட்சிகளில் மட்டுமே கேள்விப் பட்டிருந்த குறுநில மன்னர் ஆட்சி முறை தற்போது தமிழக பாரதிய ஜனதா கட்சியிலும் ஊடுருவி விட்டது. இதுவரை கோட்டைகளாகக் கருதப்பட்ட சில பெருங்கோட்டங்கள் தனிநபர் ஆதிக்கத்தால் பெரும் ஓட்டைகள் ஆகிவிட்டன.

தேசியத்தை முதன்மையாகக் கொண்டது நமது சித்தாந்தம். மெத்தப் படித்தவர்கள் என்பதற்காக சித்தாந்த அடிப்படை இல்லாதவர்களையும், அதை அறவே வெறுப்பவர்களையும் உயர்த்திப் பிடிக்காமல் இனிமேலாவது எளியவர்களுக்கு ஏற்றம் தரும் கட்சியாக மீண்டும் கட்டமைக்க வேண்டியது காலத்தின் அவசியம்.

ஒட்டுமொத்த தேசத்தில் எத்தனை மாநிலங்களை வென்றெடுத்தோம் என்ற பெருமையை விட எங்கள் சொந்த மாநிலத்தில் என்ன சாதித்தோம் என்பதையே ஒவ்வொரு தொண்டனும் பெருமையோடு எண்ணிப் பார்க்க விரும்புவான்.

நடுநிலை, ஆதரவு நிலை, எதிர் நிலையில் இருக்கக் கூடிய மக்களை எல்லாம் வலிமைமிக்க ஜனநாயக அமைப்பான பாரதிய ஜனதா கட்சியை நோக்கி ஈர்க்க வேண்டியது தலைமையின் பணி. அதைத் தக்க வைப்பதும், தேவைக்கேற்பத் தகவமைப்பதும் அமைப்பின் பணி.

ஜனநாயக ரதத்தில் அந்த அமைப்பே அச்சாணி. இப்பொழுது அச்சாணியில் அதிக கவனம் செலுத்துவது அமைப்புக்கு மட்டுமல்ல, அனைவருக்கும் நலம் பயக்கும்.

**எச்சரிக்கை 3:**

பாஜகவிற்குப் பலமே கட்டுக்கோப்பான லக்ஷயப் பற்றுள்ள தொண்டர் படையைத் தக்க வைத்திருப்பது தான். ஆனால் அவர்களுக்கான சவால் காத்திருக்கிறது. இப்பொழுது கட்சியை விட்டு விலகிப் போனவர்கள் வெகு விரைவில் திரும்பி வருவார்கள். பதவியை உதறி விட்டுப் போனவர்கள் மீண்டும் பதவி எதிர்பார்க்கக் கூடும். அவர்கள் அனைவரையும் பாஜக எந்த விதமாகக் கையாளப் போகிறது எனத் தெரியவில்லை.

# மோடியின் சாதனை – நீண்டகாலப் பிரதமராகத் தொடர்வது மட்டுமல்ல – நீண்டகாலக் கூனல்களை நிமிர்த்தி தேசத்தை பீடுறச் செய்தார்

- அருண்பிரபு

கடந்த ஜூன் 9ஆம் நாளை பாஜகவினர், மோடி ஆதரவாளர்கள் மட்டுமில்லாது பொது மக்களும் கொண்டாடினர். ஏன்? பிரதமர் மோடி அன்று தான் நீண்டநாட்கள் கடமையாற்றிய பிரதமர் என்ற சாதனையைப் படைத்தார். 4,399 நாட்கள் தொடர்ந்து தொண்டாற்றியிருக்கிறார். ஒரு நாள் கூட விடுப்பு எடுத்ததில்லை. கடந்த 2014, மே 26 அன்று முதல் முறையாக பாரதப் பிரதமராகப் பொறுப்பேற்றார் திரு நரேந்திர தாமோதரதாஸ் மோடி. அன்று தொடங்கி இவ்வாண்டு ஜூன் 15 வரை தொடர்ந்து விடுமுறை இன்றிப் பிரதமராக தேசப்பணி செய்த தலைவர் அவர். அதற்கு முன் குஜராத் முதல்வராக அக்டோபர் 7, 2001 அன்று பொறுப்பேற்று 4,610 நாட்கள் முதல்வராகக் கடமையாற்றி மே 22, 2014 அன்று பொறுப்பை ஆனந்திபென் படேல் அம்மையாரிடம் ஒப்படைத்து விடைபெற்றார்.

**இவர் நீண்டகாலம் பிரதமராக இருந்தது மட்டுமல்ல சாதனை. இவரது சாதனைகளைப் பார்ப்போம்.**

பாரதப் பிரதமரின் ஏழைகளுக்கு வீடு கட்டித் தரும் திட்டம்,

பாரதப் பிரதமரின் வீட்டுக்கு வீடு குழாய் மூலம் குடிநீர் வழங்கும் திட்டம் பாரதப்

பிரதமரின் தூய்மை பாரதம் திட்டம்,

பாரதப் பிரதமரின் வங்கிக் கணக்கு திட்டம், பாரதப் பிரதமரின் க்கஜ பணப்பரிவர்த்தனைத் திட்டம்,

பாரதப் பிரதமரின் ஆயுஷ்மான் பாரத் மக்கள் ஆரோக்கியம்/ மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்,

பாரதப் பிரதமரின் ஆயுஷ்மான் பாரத் அட்டைகள் - இதன் மூலம் 44 கோடிப்பேர் பாரதம் முழுவதும் பணம் செலுத்தாமல் தங்களுக்கான வைத்தியம் பார்த்துக்கொள்ள வசதி.

பாரதப் பிரதமரின் ஆயுஷ்மான் பாரத் வய வந்தனா - 70 வயதுக்கு மேம்பட்ட முதியோருக்கான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்.

பாரதப் பிரதமரின் மக்கள் மருந்தகம் (Jan Aushadi Kendra)- இதன் மூலம் ஆயிரக்கணக்கில் விலை விற்கும் மருந்துகள் நிறுவன அடையாளம் இல்லாதவையாகக் (Generic) குறைந்த விலையில் மக்களுக்குக் கிடைக்கிறது.

Mission Indradhanush - இத்திட்டத்தின் மூலம் கர்ப்பிணிப் பெண்கள், 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் ஆகியோருக்கு தடுப்பூசி செலுத்தும் திட்டம்.

AIIMS மருத்துவமனைகள் 8 லிருந்து 23 ஆக உயர்த்தப்பட்டது

மருத்துவக் கல்லூரிகள் 387லிருந்து 800ஆக உயர்த்தப்பட்டது.

பாரதப் பிரதமரின் பயனாளர் பணத்தை நேரடியாக வங்கியில் செலுத்தும் திட்டம் (Direct Benefit Transfer)

பாரதப் பிரதமரின் ஏழைகளுக்கு இலவச சமையல் எரிவாயுத் திட்டம் (Pradhan Mantri Ujjwala Yojana) - 10.5 கோடி கிராமப்புற ஏழை மக்களுக்கு இலவச சமையல் எரிவாயு இது வரை வழங்கப்பட்டுள்ளது.

உலகின் மிகப்பெரிய உயிரியளவியல் அடையாள அமைப்பு (Aadhaar - World's Largest Biomeric Identity System)



நெடுஞ்சாலைகள் 60% போட்டு முடிக்கப்பட்டு கடந்த 70 ஆண்டுகளில் 90000 கிமீ சாலைகள் என்ற சாதனையில் இருந்து 11 ஆண்டுகளில் 1,46,572 கிமீ சாலைகள் என்ற வேகமான வளர்ச்சி

மின்மயமாக்கல் திட்டம் ரயில்வேயில் 100% முடிக்கப்பட்டது.

2014லிருந்து 31,000 கிமீ தூரத்துக்குப் புதிய இருப்புப்பாதைகள் அமைக்கப்பட்டது. 45,000 கிமீ இருப்புப் பாதைகள் புதுப்பிக்கப்பட்டது.

வடகிழக்கு மாநிலங்களுக்கு சுதந்திர பாரதத்தில் முதல் முறையாக ரயில் விட்டது.

சரக்கு ரயில்களுக்கான பிரத்தியேக இருப்புப் பாதைகள் (இதுவரை 2,843 கிமீ).

1,300 ரயில் நிலையங்களைப் புதுப்பித்தது.

வந்தே பாரத் விரைவு ரயில்.

81 கோடி மக்களுக்கு இலவச உணவு தானியங்கள் வழங்கும் திட்டம்

கிராமப்புற பெண்களின் தொழில் முனைவுத் திறனை ஊக்குவித்து 3 கோடிப் பேருக்குச் சுய உதவிக் குழுக்கள் மூலம் நிதி உதவிகள் வழங்கி குறைந்தது மாதம் 10000 ₹ வருமானம் ஈட்ட உதவி. ( Lakhpati Didi Yojana)

கிராமப்புறப் பெண்களுக்கு விவசாயம், தையல், உற்பத்தி, சிறுதொழில் என்று பயிற்சிகள் வழங்கி அவர்களைச் சுயதொழிலுக்கோ அல்லது வேலை வாய்ப்புக்கோ தயார் படுத்தும் திட்டம். (Skill Development)

GST - நம் நாட்டில் 1950 முதல் 2017 வரை 16 வரிகள், 22 வரிகள் மீதான கூடுதல் கட்டணங்கள் வசூலிக்கப்பட்டு வந்தன. இவை தவிர மாநில அரசுகள் வணிக வரி, தீர்வை என்று வசூலித்தன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு %ல் இருக்கும். இவற்றை ஒருங்கிணைத்து நான்கு வரிவரம்புகளில் (0%, 5%, 18%, and 40%) என்று கொண்டு வந்தது மோடி அரசு. கூடுதலாக 2017ல் சேர்க்கப்பட்ட 12% மற்றும் 28% வரம்புகள் 2025ல் நீக்கப்பட்டன. இந்த GSTயால் மாநிலங்களுக்கு இடையிலான வர்த்தகம் மேம்பட்டது. நீண்ட வரிசையில் வண்டிகள் நிற்பது ஒவ்வொரு மாநில வணிக வரி அதிகாரிகள் வசூலிப்பதும் நின்று போயின. சரக்குப் போக்குவரத்து வேகம் பெற்றுள்ளது. வணிகம் எளிமை அடைந்துள்ளது. பல்வேறு வகைப்பட்ட சேவை வரி, மத்தியத் தீர்வை, மாநிலத் தீர்வை லொட்டுத் தீர்வை, லொசுக்கு வரி என்று நீண்ட பட்டியல் இனி இல்லை. மூன்றே வரம்புகள். இணைய வழியில் செலுத்திவிட்டு ரசீதோடு பறக்கலாம்.

சிறுதொழில் முனைவோரை ஊக்குவிக்க முத்ரா திட்டம். இதன் மூலம் ₹40 லட்சம் கோடி கடன்கள் இளைஞர்களுக்கு வழங்கப்பட்டு அவர்கள் சுயதொழில் செய்து முன்னேறுகின்றனர்.

தொழில் தொடங்கும் ஆராய்ச்சியாளர், புதிய திட்டங்களுடன் இருக்கும் இளைஞர்களுக்கு Startup India Scheme. கடந்த 10 ஆண்டுகளில் ₹100கோடிக்கு எட்டியிருக்கிறது. 100% வருமானவரி விலக்கு. காப்புரிமை விண்ணப்பக் கட்டணத்தில் 80% தள்ளுபடி.

இந்தியாவில் 29 பழைய தொழிலாளர் சட்டங்களை ஒருங்கிணைத்து, 4 புதிய தொழிலாளர் குறியீடுகள் (Labour Codes) முழுமையாக அறிவிக்கப்பட்டு அமல்படுத்தப்பட்டுள்ளன. இது சம்பளம், வேலை நேரம், மற்றும் சமூகப் பாதுகாப்பு ஆகியவற்றில் மிகப்பெரிய மாற்றங்களை கொண்டுவந்துள்ளது.

ஏறத்தாழ 500 ஆண்டுகள் காத்திருப்புக்குப் பிறகு நம் மண்ணின் அறத்திரு மைந்தன் இராம்பிரானுக்கு அயோத்தியில் ஆலயம் கட்டி முடிக்கப்பட்டு குடமுழுக்கு நடத்தப்பட்டது. 1992ல் பல்லாயிரம் பேர் போராடி நூற்றுக்கணக்கானோர் உயிர்நீத்து அவமானச் சின்னமான கும்மட்டம் இடிக்கப்பட்டது. பிறகு வழக்காடி அந்த இடம் இராமனுக்கே என்று 2019ல் தீர்ப்பானது. உடனடியாக அங்கே ஆலயம் அமைக்க அறக்கட்டளை நிறுவி கட்டுமானங்கள் முடித்து 2024ல் கும்பாபிஷேகம் நடந்தது. பிரதமர் மோடி அவர்களின் வாழ்நாள் சாதனை இது.

சாகர் மாலா திட்டத்தின் மூலம் நம் நாட்டின் கடல் வழிப் போக்குவரத்தைச் சீரமைத்து, கடல்சார் பாதுகாப்பை மேம்படுத்தியிருக்கிறது. இது நாட்டின் பாதுகாப்புக்கும், வணிகக் கப்பல்கள், பயணிகள் கப்பல் போக்குவரத்துக்கும் ஏதுவான நிலையை ஏற்படுத்தியிருக்கிறது.

ஜம்மு காஷ்மீரத்தில் 370ஆவது சாசனப்பிரிவினை ஒழித்து அந்த மாநிலத்தை நாட்டோடு முழுமையாக இணைத்து ஒரே தேசம் ஒரே கொடி ஒரே தலைமை என்ற நிலையை ஏற்படுத்தியது மோடி அரசு. இந்த 370 ஒழிக்கப்பட்டதன் மூலம் அங்கே வசிக்கும் பட்டியலின மக்களுக்கு முனைவர் பட்டமே பெற்றிருந்தாலும் துப்புரவுப் பணியாளர், எடுபிடி வேலை போன்றவை மட்டுமே வழங்கப்பட்டு வந்த நிலை மாறி அரசியல் சாசனத்தின் வழியாக இட ஒதுக்கீடு அமல்படுத்தப்பட்டது. அவர்கள் படிக்கவும் உரிய பணியில் சேரவும் உரிமைகள் மீட்டெடுக்கப்பட்டுள்ளன.

எல்லைப்புறச் சாலைகள், வேலிகள், குடைவுப் பாதைகள் அமைத்து ராணுவத்தின் விரைவான போக்குவரத்துக்கு வகை செய்யப்பட்டுள்ளது.

ஆயுதங்கள் வெளிநாடுகளில் இருந்து வாங்கி அவற்றில் துட்டு அடித்துக் கொண்டிருந்த நிலை மாறி

₹ 38000 கோடி அளவுக்கு ஆயுதங்களை நாம் ஏற்றுமதி செய்கிறோம்.

உலக நாடுகளில் ஐரோப்பாவும் அமெரிக்காவும் வகுக்கும் விதிகளுக்குக் கட்டுப்பட்டு மற்ற நாடுகள் நடக்க வேண்டும் என்ற நிலையை மாற்றி "என் தேசம், என் மக்கள் நலன்" என்று வெளியுறவுக் கொள்கைக்கான அடிப்படையை மாற்றினார் மோடி.

ரஷ்யாவிடம் கச்சா எண்ணை வாங்கினால் அமெரிக்கா கோபிக்கும் என்று உலகமே நடுங்கிய நிலையில் ரஷ்யாவிடம் எண்ணை வாங்கினார். கேட்டால் உன் நலனுக்கு நீ யோசிப்பாய் என் நலனுக்கு நான் யோசிக்கிறேன் என்றார்.



இஸ்ரேலுடன் நட்பு பாராட்டினால் அரபு நாடுகள் கோபிப்பர் என்ற இல்லாத அச்சத்தைக் காங்கிரஸ் கைக்கொண்டு கூறுகெட்ட முடிவுகள் பல எடுத்திருந்த நிலையில் சௌதி அரேபியா, ஐக்கிய அரபு நாடுகள் என்று போய்விட்டு அப்படியே இஸ்ரேலுக்கும் போய் நண்பர் நேதன்யாகுவிடம் அளவளாவிவிட்டு தேசத்துக்குத் தேவையான ராணுவ / மருத்துவ தொழில்நுட்ப ஆராய்ச்சிகள் குறித்து ஒப்பந்தங்கள் போட்டுவிட்டு வந்தார்.

பாகிஸ்தானோடு குலாவிக்கொண்டு அப்படித்தான் செய்வேன் நான் காலிஃபாவாக்கும் என்று தெவானட்டில் தெண்டித் திரிந்த துருக்கி அதிபர் எர்துவானை போடா ஜாட்டான் என்று விட்டுவிட்டு துருக்கியிடம் அடிபட்ட சைப்ரஸ் நாட்டுடன் நட்புக் கொண்டார். நம் நாட்டில் இருந்து துருக்கிக்குப் போக இருந்த சுற்றுலாப் பயணிகள் பயணத்தை ரத்து செய்துவிட்டு வேறிடம் போனார்கள். துட்டு வற்றத்தொடங்கியதும் எர்துவான் பாரம்பரியம் ஆதிகாலத்து வணிக நெருக்கம் என்று வழிந்து கொண்டிருக்கிறார்.

நம் நாட்டின் நூற்றுக்கணக்கான டன்கள் தங்கத்தை லண்டனிலேயே வைத்துவிட்டுத் தேவைப்பட்டால் அப்படியே அடகு பிடித்துக்கொள்ளச் சொல்லிக் கடன் வாங்கலாம் என்று "பொருளாதார மேதை" மனமோகனச் சிங்கர் எடுத்த முடிவைத் தூக்கிப் போட்டுவிட்டு குந்துமணி பாக்கியில்லாமல் ரிசர்வ் வங்கியில் கொண்டு வந்து வைத்தார் மோடி. ரஷ்யாவை முடக்கு என்று அமெரிக்கா உத்தரவிட்டவுடன் பிரித்தானிய அரசு ரஷ்யத் தங்கம், அவர்களது அந்நியச் செலாவணிக் கணக்கு என்று அனைத்தையும் முடக்கிவிட்டது. இப்படி ஒரு நிலை நமக்கு வரவேண்டாம் என்றே தங்கத்தை நம் நாட்டுக்கு மீட்டெடுத்தார் மோடி.

நீண்டகாலமாக உலகில் உதாசீனப்படுத்தப்பட்டு வந்த ஆப்பிரிக்க நாடுகளை இணைத்து எடுணிஞுச்டு குணிதஞூட என்று பெயரிட்டு அவர்களுக்கும் முக்கியத்துவத்தை ஏற்படுத்தினார்.

சீனாவில் இருந்து பரவிய கொரோனா பெருந்தொற்றின் போது உலகமே அழுத்தம் கொடுத்தும், உள்நாட்டுக் கைக்கூலிகள் கதறியும் காதில் வாங்காமல் சர்வதேச மருந்துக் கம்பெனிகளைப் புறக்கணித்து நம் நாட்டிலேயே எதிர்ப்பு மருந்து தயாரித்தார். நாடு முழுவதும் மக்களுக்கு தடுப்பூசி போடப்பட்டு பலர் காப்பாற்றப்பட்டனர். உலகின் அத்தனை நாடுகளும் ஆயிரக்கணக்கான கோடிகள் விலை வைத்து அது போதாதென்று அந்தந்த நாட்டில் முக்கிய இடங்களை அடமானம் பிடித்துக் கொண்டு மருந்து தருவோம். குணமாகாவிட்டால் பொறுப்பேற்க மாட்டோம் என்று ஒப்பந்தம் எழுதிக்கொண்டு வந்த சர்வதேச மருந்துக் கம்பெனிகள் கையறு நிலையில் பாரதத்தை விட்டுக் கிளம்பின. மேலும் அவர்களுக்கு அதிர்ச்சி தரும் விதமாக ஆப்பிரிக்கா, ஆசியா, ஆஸ்திரேலியா உள்ளிட்ட கண்டங்களில் உள்ள ஏழை நாடுகளுக்கு இலவசமாகக் கொரோனா ஊசிகள் கொடுத்து மக்களைப் பெருந்தொற்றில் பலியாகாமல் காப்பாற்றினார் மோடி.

சாதனைப் பட்டியல் இன்னமும் நீள்கிறது. <https://www.pib.gov.in/> › PressReleasePage என்ற தளத்தில் நூற்றுக்கணக்கான பக்கங்களுக்கு விளக்கமாக இருக்கிறது. படித்துத் தெளிவுறலாம். பாரதமாதா பாதங்களில் பணிந்து வணங்குவது தவிர இப்படி ஒரு தலைவரைக் கொடுத்ததற்கு நாம் வேறேதும் செய்யத் தோன்றவில்லை. வந்தே மாதரம்.

# எத்தனால் புரட்சி

- வித்யாசங்கர்




**E85 பெட்ரோல்**

இந்தியாவில் பெட்ரோல் விலை உயர்வால் மக்கள் அவதிப்பட்டு வரும் நிலையில், சாதாரண பெட்ரோலை விட 20 ரூபாய் குறைவான விலையில் E85 என்ற புதிய எரிபொருளை மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. உலக சுற்றுச்சூழல் தினத்தன்று புதுடெல்லியில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில் மத்திய பெட்ரோலியத்துறை அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி இதனை முறைப்படி தொடங்கி வைத்தார்.

**E85 பெட்ரோல் என்றால் என்ன?**

சாதாரண பெட்ரோலுடன் குறிப்பிட்ட அளவு எத்தனால் (Ethanol) கலக்கப்பட்டு இந்த எரிபொருள் தயாரிக்கப்படுகிறது. இதில் 80% முதல் 85% வரை எத்தனால் மற்றும் 14% முதல் 19% வரை பெட்ரோல் கலக்கப்பட்டிருக்கும்.

இந்த E85 பெட்ரோலை அனைத்து சாதாரண வாகனங்களிலும் பயன்படுத்த முடியாது. இதனை Flex-Fuel Vehicles (FFV) எனப்படும் நெகிழ்வுத்தன்மை கொண்ட எரிபொருள் என்ஜின் உள்ள வாகனங்களில் மட்டுமே பயன்படுத்த முடியும். இந்த என்ஜின்கள் E20 முதல் E100 வரை எந்தவொரு எத்தனால் கலவை கொண்ட எரிபொருளிலும் இயங்கும் வகையில் பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்டவை ஆகும். தற்போதைக்கு முதற்கட்டமாக நாடு முழுவதும் உள்ள 48 பொதுத்துறை எரிபொருள் நிலையங்களில் (Fuel Stations) இந்த வசதி தொடங்கப்பட்டுள்ளது 500 பெட்ரோல் நிலையங்களுக்கு இந்த சேவை விரிவுபடுத்தப்படும். நாடு முழுவதும் சுமார் 5,000 பெட்ரோல் நிலையங்களில் E85 பெட்ரோல் கிடைக்க வழிவகை செய்யப்படும்.

எத்தனால் பயன்பாடு அதிகரிப்பதால் வாகனங்களில் இருந்து வெளியாகும் காற்று மாசுபாடு பெருமளவில் குறையும். இந்தியா தனது கச்சா எண்ணெய் தேவையை இறக்குமதி மூலமே பூர்த்தி செய்கிறது. இந்தியாவில் தற்போது பெட்ரோலில் எத்தனால் கலக்கும் விகிதம் 20% (E20) ஆக உள்ளது. இந்த எத்தனால் கலப்புத் திட்டத்தின் மூலம் இதுவரை ₹1.84 லட்சம் கோடி அளவிலான அந்நியச் செலாவணி சேமிக்கப்பட்டுள்ளது. 2014-ம் ஆண்டில் வெறும் 1.53% ஆக இருந்த எத்தனால் கலப்பு, தற்போது 20% ஆக உயர்ந்துள்ளது. மத்திய அரசின் இலக்குப்படி, வரும் 2030-31 ஆம் ஆண்டிற்குள் நாட்டின் ஒட்டுமொத்த எத்தனால் கலப்பு அளவை 26% ஆக உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது.

E85 பெட்ரோல் அறிமுகம் என்பது இந்தியாவின் சுற்றுச்சூழல் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு மிக முக்கியமான மைல்கல் ஆகும். ஆரம்பத்தில் குறிப்பிட்ட சில வாகனங்களுக்கு மட்டுமே இது பொருந்தும் என்றாலும், எதிர்காலத்தில் Flex-Fuel வாகனங்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் போது, இது நாட்டுக்கு ஒரு மிகப்பெரிய பொருளாதார நிம்மதியைத் தரும்.

**எத்தனால் அடுப்புத் தொழில்நுட்பம்**

சாதாரண எல்.பி.ஜி (LPG) சிலிண்டர்களுக்கு மாற்றாக, திரவ வடிவ உயிரி எரிபொருளான (Liquid Bio-fuel) தூய எத்தனிலை எரிபொருளாகக் கொண்டு இயங்கும் அடுப்புகளே எத்தனால் அடுப்புகள் ஆகும். இதன் பயன்பாட்டு முறை நாம் முன்பு வீடுகளில் பயன்படுத்திய பாரம்பரிய மண்ணெண்ணெய் (Kerosene) அடுப்பை ஒத்தே இருக்கும். மண்ணெண்ணெயைப் போலவே எத்தனாலும் ஒரு திரவ வடிவிலான எரிபொருள். கேஸ் சிலிண்டர் போல இதில் வாயு (Gas) இருக்காது. அடுப்புடன் இணைக்கப்பட்டுள்ள பாதுகாப்பான எரிபொருள் டேங்கில் (Fuel Tank) நாம் இந்தத் திரவத்தை ஊற்றிப் பயன்படுத்த வேண்டும். அடுப்பின் பர்னர்கள் திரவ எத்தனாலை நேரடியாக எரிக்காமல், Capillary

Action மூலம் அதை லேசாக ஆவியாக்கி அந்த ஆவியைத்தான் நீல நிறச் சுடராக எரிய வைக்கிறது. மண்ணெண்ணெய் அடுப்பு போல இதில் புகையோ, நெடியோ, வாசனையோ வராது; பாத்திரங்களின் அடியிலும் கறை படியாது.

**எத்தனால் வடித்தல்**

கரும்புச் சாற்றின் கழிவான மொலாசஸ் (Molasses), மக்காச்சோளம், சோளம், உடைந்த மற்றும் அழுகிய உணவுத் தானியங்களை ஈஸ்ட் (Yeast) சேர்த்துப் பெரிய கலன்களில் நொதிக்க வைப்பது (Fermentation) முதல் படி. நொதித்த திரவத்தை சூடாக்கி ஆவியாக வெளிவரும் ஆல்கஹாலை ஒரு குழாய் வழியாகச் செலுத்தி, அதைக் குளிரூட்டி மீண்டும் (Distillation) திரவமாக மாற்றிப் பிடிப்பது இரண்டாம் படி. இப்படி வரும் சாராயத்தில் 95% ஆல்கஹாலும், 5% தண்ணீரும் கலந்திருக்கும். இந்த 5% தண்ணீரை பிரிக்கப் பயன்படும் தொழில்நுட்பம்தான் Molecular Sieve எனப்படும் மூலக்கூறு சல்லடை. Zeolite எனப்படும் விசேஷப் படிக மணிகளால் இந்தச் சல்லடை தண்ணீரை மட்டும் தன்னுள் உறிஞ்சிக்கொண்டு, 99.9% தண்ணீரே இல்லாத தூய எத்தனாலை (Anhydrous Ethanol) நமக்குத் தருகிறது. 'மேக் இன் இந்தியா' திட்டத்தின் கீழ் இந்த மாலிகுலர் சீவ் தொழில்நுட்பக் கருவிகள் தற்போது நம் உள்நாட்டிலேயே உலகத் தரத்தில் தயாராவது நம் நாட்டுப் பொறியியலின் பெருமையாகும்!

**பிரேசில் - கென்யா மாதிரிகள்**

உலகளவில் இதில் மாபெரும் வெற்றி பெற்ற இரண்டு நாடுகளின் மாதிரிகளைத் (Models) மத்திய அரசு இந்தத் திட்டத்தில் பயன்படுத்தியுள்ளது. தங்களின் ஒட்டுமொத்தப் போக்குவரத்து மற்றும் ஆற்றல் தேவையை 100% உள்நாட்டு எத்தனால் மற்றும் 'ஃப்ளெக்ஸ் என்ஜின்' (Flex-fuel) தொழில்நுட்பம் மூலம் நிறைவு செய்து காட்டிய பிரேசிலின் ஆலைத் தொழில்நுட்ப முறையை இந்தியா உற்பத்திக்காகப் பின்பற்றுகிறது.

ஆப்பிரிக்க நாடான கென்யாவில், விறகு அடுப்புகளுக்கு மாற்றாக எத்தனாலைச் சமையலறைக்குக் கொண்டு சென்று புரட்சி செய்தார்கள். அங்கு எத்தனாலைச் சிலிண்டர்களில் அடைக்காமல், தண்ணீர்க் கேன்கள் போலச் சிறிய ஜார்களில் அடைத்து, உள்ளூர் மளிகைக் கடைகள் மற்றும் 'ஸ்மார்ட் ஏடிஎம்கள்' மூலம் மக்களிடம் ரீஃபில் (Refill) செய்யும் முறையை அமுல்படுத்தினார்கள். இதே எளிய விநியோக முறையைத்தான் இந்தியாவும் சமையலறை எரிபொருள் விநியோகத்திற்காக யோசித்திருக்கிறது.

வாகனங்களுக்கான எத்தனால் கலந்த பெட்ரோல் பெட்ரோல் பங்குகளில் கிடைக்கும். ஆனால், சமையலுக்குப் பயன்படுத்தப்படும் தூய எத்தனால் பெட்ரோல் பங்குகளில் கிடைக்காது. எல்.பி.ஜி வாயுவைப் போல இதை அதிக அழுத்தம் கொடுத்து இரும்புச் சிலிண்டர்களில் அடைக்க வேண்டிய அவசியமில்லை. சாதாரண வெப்பநிலையில் இது திரவமாக இருப்பதால், பாதுகாப்பான தடிமனான பிளாஸ்டிக் அல்லது அலுமினியக் கன்டெய்னர்களில் (2 லிட்டர், 5 லிட்டர் ஜார்கள்) அடைக்கப்பட்டு விற்க முடியும். கேஸ் ஏஜென்சிகள் (Gas Agencies), நியாயவிலைக் கடைகள் (Ration Shops) அல்லது இதற்கென உருவாக்கப்படும் பிரத்தியேக சில்லறை விநியோக மையங்கள் மூலம் மக்கள் இதை எளிதாக வாங்கிக்கொள்ளலாம்.

**சமையலறைப் புரட்சி (2029 - 2031) திட்ட வரைபடம் (roadmap)**

தற்போதைய 2026-ஆம் ஆண்டில் இத்திட்டம் சில குறிப்பிட்ட மாநிலங்களில் முன்னோடித் திட்டமாக (Pilot Project) சோதனை முறையில் செயல்படுத்தப்பட உள்ளது.

2026 - 2027: நாடு தழுவிய பாதுகாப்புக் கொள்கைகள், விநியோக விதிகள் மற்றும் ஆலைகளின் கட்டமைப்பு மேம்பாடு.

2027 - 2028: புதிய டீலர்ஷிப் உரிமங்கள் (Licenses) வழங்குதல் மற்றும் சந்தையில் முன்னணி வீட்டு உபயோகப் பொருட்கள் தயாரிக்கும் நிறுவனங்களின் எத்தனால் அடுப்புகள் அறிமுகம்.

2029 - 2031 (3 முதல் 5 ஆண்டுகளுக்குள்): இந்தியாவின் அனைத்து நகர்ப்புற மற்றும் கிராமப்புறச் சமையலறைகளிலும் எத்தனால் அடுப்புகள் முழுமையான நடைமுறைக்குச் சாத்தியமாகும்.

**காந்தியடிகளின் "கிராம சுயராஜ்யம்" நோக்கி**

அரசு இந்த எத்தனால் தயாரிக்கும் உரிமத்தையும், மாலிகுலர் சீவ் தொழில்நுட்பத்தையும் கிராமப்புற விவசாயக் கூட்டமைப்புகளுக்கும், சுயஉதவிக் குழுக்களுக்கும் "குடிசைத் தொழில்" மாதிரியாக வழங்கினால், நம் ஊர் விவசாயக் கழிவைக் கொண்டு, நம் ஊர் இளைஞர்கள் தயாரிக்கும் எரிபொருளில், நம் ஊர் சமையலறைகள் இயங்கும். இதுதான் காந்தியடிகள் கண்ட உண்மையான கிராம சுயராஜ்யம்!

அன்று திலகர் விதைத்த சுயராஜ்யக் கனவு, இன்று பாரத பிரதமர் நரேந்திர மோடியின் தொலைநோக்கு மற்றும் 'மேக் இன் இந்தியா' திட்டங்களால், எத்தனால் சமையல் அடுப்புத் தொழில்நுட்பத்தின் வழியாக நம் வீட்டுச் சமையலறைகளுக்குள் நனவாகப் போகிறது. விலை மலிவு, 100% விபத்தில்லாப் பாதுகாப்பு, சுற்றுச்சூழல் தூய்மை, விவசாயிகளின் பொருளாதார உயர்வு என அத்தனை நன்மைகளையும் கொண்ட இந்த எத்தனால் புரட்சி, இந்தியாவின் இறையாண்மையையும் சுயசார்பையும் உலகரங்கில் பறைசாற்றும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை!

# காவ்டா - உலகின் மிகப்பெரிய எரிசக்தி பூங்கா

இராமனுஜம்

இந்தியாவின் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் துறை, உலகமே வியந்து நோக்கும் ஒரு பிரம்மாண்டமான மைல்கல்லை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது. குஜராத்தின் கச் (Kutch) பாலைவனப் பகுதியில் உள்ள காவ்டா (Khavda) என்னும் இடத்தில், உலகின் மிகப்பெரிய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பூங்கா மிக அதிவேகமாக உருவெடுத்து வருகிறது.

சுமார் 700 சதுர கிலோமீட்டருக்கும் அதிகமான பரப்பளவில் கட்டப்பட்டு வரும் இந்த தளம், பிரான்ஸ் நாட்டின் தலைநகரான பாரிஸை விட ஐந்து மடங்கு பெரியது என்பது இதன் பிரம்மாண்டத்திற்கு சான்றாகும்.

இத்திட்டத்தின் இறுதி இலக்கு 30 கிகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்வதாகும். இந்த ஆற்றலின் அளவு, கனடா, நெதர்லாந்து, பெல்ஜியம் அல்லது சிலி போன்ற ஒரு முழு நாட்டின் ஒட்டுமொத்த குடியிருப்பு மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு இணையானது. இந்தத் திட்டம் வெறும் காகித வடிவில் இல்லாமல், ஏற்கனவே சுமார் 10 கிகாவாட் உற்பத்தித் திறனுடன் செயல்பாட்டிற்கு வந்துவிட்டது என்பதும், 2030 ஆம் ஆண்டிற்குள் முழுமையாக நிறைவடையும் வகையில் பணிகள் தொய்வின்றி நடந்து வருவதும் நாட்டின் உள்கட்டமைப்பு திறனைப் பிரதிபலிக்கிறது.

தொழில்நுட்ப ரீதியாக, இது ஒரு கலப்பு (Hybrid) எரிசக்தி பூங்காவாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இதில் 20 கிகாவாட் சூரிய ஆற்றலும், 10 கிகாவாட் காற்று ஆற்றலும் உற்பத்தி செய்யப்பட உள்ளன. பகல் நேரத்தில் சூரிய ஒளி மூலமும், இரவு மற்றும் மாலை வேளைகளில் பலத்த காற்றின் மூலமும் சுழலும் காற்றாலைகள் வழியாகவும் 24 மணி நேரமும் தடையற்ற பசுமை ஆற்றலை இந்த தளம் வழங்கும்.

பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் ரீதியாக இந்தத் திட்டத்தில் உள்ள மிகப்பெரிய சாதனை என்னவென்றால், இது தேர்வு செய்யப்பட்டுள்ள இடம்தான். விவசாயம் செய்ய முடியாத, மக்கள் குடியிருப்புகள் இல்லாத, அடர்ந்த காடுகள் அற்ற, எந்தவொரு வணிக நடவடிக்கைகளுக்கும் பயன்படாமல் இருந்த ஒரு வெற்றுப் பாலைவனப் பகுதி இதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதனால் இயற்கையான சுற்றுச்சூழல் அமைப்பிற்கோ அல்லது மக்களின் வாழ்வாதாரத்திற்கோ எந்தவித பாதிப்பும் ஏற்படாமல், வீணாகக் கிடந்த நிலம் நாட்டின் பெரும் சொத்தாக மாற்றப்பட்டுள்ளது.

> **சுமார் 700 சதுர கிலோமீட்டருக்கும் அதிகமான பரப்பளவில் கட்டப்பட்டு வரும் இந்த தளம், பிரான்ஸ் நாட்டின் தலைநகரான பாரிஸை விட ஐந்து மடங்கு பெரியது என்பது இதன் பிரம்மாண்டத்திற்கு சான்றாகும்.**

பொது மற்றும் தனியார் பங்களிப்புடன் உருவாகும் இத்திட்டத்தில் என்டிபிசி (NTPC), அதானி கிரீன் (Adani Green), கேபிஐ கிரீன் (KPI Green), என்எச்பிசி (NHPC) போன்ற பல முன்னணி நிறுவனங்கள் இணைந்து முதலீடு செய்து வருகின்றன.

சுமார் 18 பில்லியன் டாலர் மதிப்பீட்டில் உந்தப்படும் இந்த மெகா திட்டம், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு வலுசேர்ப்பதோடு மட்டுமின்றி, 15,000-க்கும் மேற்பட்டோருக்கு வேலைவாய்ப்புகளை நேரடியாகவும் மறைமுகமாகவும் வழங்கி வருகிறது.

நிலக்கரி மற்றும் கச்சா எண்ணெய் போன்ற பாரம்பரிய எரிபொருட்களை நம்பியிருக்கும் நிலையை மாற்றி, தூய்மையான ஆற்றலை நோக்கி இந்தியா எடுத்து வைக்கும் இந்த ராட்சதக் கால்வைப்பு, நாட்டின் எதிர்காலப் பொருளாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்வதோடு உலகளாவிய கார்பன் உமிழ்வைக் குறைப்பதிலும் இந்தியாவின் பங்கை உறுதி செய்கிறது.

இந்த பிரம்மாண்டமான பசுமை ஆற்றல் திட்டத்தின் வடிவமைப்பு என்பது ஏதோ ஒரு குறிப்பிட்ட நிறுவனத்தால் மட்டும் செய்யப்பட்டதல்ல. இது இந்திய அரசு மற்றும் குஜராத் மாநில அரசின் தொலைநோக்குப் பார்வையின் கீழ்,





**சுமார் 18 பில்லியன் டாலர் மதிப்பீட்டில் உந்தப்படும் இந்த மெகா திட்டம், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு வலுசேர்ப்பதோடு மட்டுமின்றி, 15,000-க்கும் மேற்பட்டோருக்கு வேலைவாய்ப்புகளை நேரடியாகவும் மறைமுகமாகவும் வழங்கி வருகிறது.**

பொதுத்துறை மற்றும் தனியார் துறை நிறுவனங்கள் இணைந்து செயல்படும் ஒரு கூட்டுத் திட்டமாகும் .

முதற்கட்டமாக, இவ்வளவு பெரிய பாலைவன நிலத்தை ஒதுக்கி, உள்கட்டமைப்பை மேம்படுத்தி, உற்பத்தியாகும் மின்சாரத்தை வெளி மாநிலங்களுக்கும் கொண்டு செல்வதற்கான முதன்மை கிரிட் (Grid) மற்றும் மின் விநியோகக் கட்டமைப்பை வடிவமைத்தது இந்திய அரசே ஆகும்.

இதன் பின்னர், இந்த 700 சதுர கிலோமீட்டர் பரப்பளவை வெவ்வேறு பகுதிகளாகப் பிரித்து, மின் உற்பத்திக்கான தளங்களை அமைக்கும் பொறுப்பு முன்னணி நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதில் அதானி கிரீன் எனர்ஜி நிறுவனம் மிகப்பெரிய பரப்பளவில் (சுமார் 538 ச.கி.மீ) சூரிய மற்றும் காற்றாலை கட்டமைப்புகளை வடிவமைத்து நிறுவி வருகிறது.

இவர்களுடன் இணைந்து மத்திய அரசின் பொதுத்துறை நிறுவனமான என்டிபிசி கிரீன் எனர்ஜி லிமிடெட், என்எச்பிசி மற்றும் கேபிஐ கிரீன் எனர்ஜி போன்ற பிற முன்னணி நிறுவனங்களும் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பகுதிகளில் தனித்தனியாகத் திட்டங்களை வடிவமைத்துச் செயல்படுத்தி வருகின்றன.

இத்திட்டத்தின் கால அளவைப் பொறுத்தவரை, இதன் ஆரம்பகட்ட பணிகள் 2021-22 காலகட்டத்தில் துவங்கின. ஏற்கனவே சுமார் 10 கிகாவாட் மின் உற்பத்தித் திறன் செயல்பாட்டிற்கு வந்துவிட்ட நிலையில், முழுமையான 30 கிகாவாட் உற்பத்தி இலக்கை 2030 ஆம் ஆண்டிற்குள் எட்ட வேண்டும் என்ற இலக்கோடு பணிகள் மிக அதிவேகமாக நடந்து வருகின்றன.

இந்த மாபெரும் இலக்கை அடைவதற்காக மதிப்பிடப்பட்டுள்ள ஒட்டுமொத்த திட்ட மதிப்பு சுமார் 18 பில்லியன் டாலர் ஆகும். இது இந்திய பண மதிப்பில் தோராயமாக 1.5 லட்சம் கோடி ரூபாய்க்கும் அதிகமாகும். 15,000 க்கும் அதிகமான பொறியியல் பட்டதாரிகள் மற்றும் மேலாண்மைப் படிப்பு முடித்தவர்களுக்கு நிரந்தரமான வேலை வாய்ப்பு வழங்கும் இத்திட்டத்தில் பணியில் சேர வகை வகையான வேலை வாய்ப்புகள் கொட்டிக் கிடக்கின்றன.



# வாய்க்காகட்டை வம்பு

**01**

எங்கள் மீது திமுகவினர் பழி தூற்றுவதால் கவலையில்லை னு வைகோ ஆதங்கமா சொல்லிருக்காரே ?



கொலை பழி சுமத்தி கட்சியை விட்டு விரட்டியபோதே பெருசா நினைக்கல... இதெல்லாம் சினம் கொண்ட சிறுத்தைக்கு, ஜுஜுபி...

**02**

பெரியாறு, மேகேதாட்டு பிரச்சினையில் தமிழக உரிமைகளை விட்டுத்தர மாட்டோம் - அமைச்சர் நிர்மல் குமார் உறுதியா சொல்லிட்டாருல்ல.....



மகளிர் உதவி தொகை வேண்டாம்னு அணில் குஞ்சுகள வைச்சு ரீல்ஸ் போட்டது போல இதுக்கும் ஒன்னு போட்டுட்டு போக போறாங்க

**03**

தவெகவினர் தற்குறிகள் இல்லை அம்புக்குறிகள்னு நடிகர் ராகவா லாரன்ஸ் சொல்லிருக்காரே ?



ரஜினி செல்ப் எடுக்கல.. ஓடற வண்டியில புட்போர்டிலயாவது தொத்திட்டு போவோம்னு நினைச்சிருக்கலாம்

**04**

சட்டம் ஒழுங்கு வெண்டிலேட்டரில் உள்ளதாக எதிர் கட்சித்தலைவர் உதயநிதி கடுமையா விமர்சனம் செஞ்சிருக்காரே ?



வெண்டிலேட்டரில் தள்ளின டாக்டர் கம்பவுண்டர் மேல பழி போடறாரே

**05**

தேசிய ஜனநாயக கூட்டணியில் இருந்து தமாகா விலகல்; அதிமுகவில் இருந்து நடிகை கௌதமி விலகல் இதையெல்லாம் எதைக் காட்டுகிறது ?



All the roads lead to பனையூர்.

**06**

தாம்பரம் - வேளச்சேரி சாலைக்கு மேஜர் முகுந்த் வரதராஜன் பெயர் சூட்டப்படும் என தாம்பரம் மாநகராட்சி தீர்மானம் போட்ருக்கே ?



ஆட்சி மாற்றத்தால் ஏற்பட்ட மனசாட்சி மாற்றம். திமுககாரங்களே குடும்பத்தை கைகழுவிட்டாங்க

**07**

தமிழகத்தில் ஒரு பெரிய தலைவரை ( ரஜினியை) நாம் மிஸ் செய்துவிட்டோம் - லதா ரஜினிகாந்த்



இந்தம்மா பேராசையில தான அவரே பயந்து ஒதுங்கினாரு. சாத்தான் வேதம் ஓதுது



**-நா.பாஸ்கரன்**

# நெஞ்சை நிமிர்த்தி நெத்தியடி பதில்கள்

பால்கி

"**எந்தவொரு ஐரோப்பிய நாடும் இந்தியத் தயாரிப்பு ஆயுதங்களால் இதுவரை தாக்கப்படவில்லை. ஆனால், இந்தியாவிற்கு எதிராகப் பயன்படுத்தப்பட்ட ஐரோப்பிய ஆயுதங்களைப் பற்றி என்னால் அப்படிச் சொல்ல முடியாது!**"

வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களின் இந்த ஒற்றை வாக்கியம், ஒட்டுமொத்த மேற்கத்திய நாடுகளின் இரட்டை நிலைப்பாட்டையும், போலித்தனத்தையும் உலக அரங்கில் தோலுரித்துக் காட்டியுள்ளது.

**ஜூன் 2026 ஐரோப்பிய சுற்றுப்பயணமும் நெத்தியடி பதிலும்**

சமீபத்தில், ஜூன் 2026-ல் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டார். பெல்ஜியம், பிரான்ஸ் உள்ளிட்ட ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் தலைவர்கள் மற்றும் வெளியுறவுத்துறை அமைச்சர்களைச் சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடத்தினார். இந்தச் சுற்றுப்பயணத்தின் போது, சில மேற்கத்திய நாடுகள் இந்தியாவிற்குத் தார்மீக அறிவுரைகள் (Geopolitical lectures) வழங்க முற்பட்டன. அந்தப் போலித்தனமான அறிவுரைகளுக்குப் பதிலடி கொடுக்கும் விதமாகவே அவர் மேற்கண்டவாறு முழங்கினார்.

**மேற்கத்திய நாடுகளின் போலித்தனம் (The Hypocrisy of the West)**

"**ஐரோப்பாவின் பிரச்சனைகள் உலகத்தின் பிரச்சனைகள், ஆனால் உலகத்தின் பிரச்சனைகள் ஐரோப்பாவின் பிரச்சனைகள் அல்ல**"

என்று டாக்டர் ஜெய்சங்கர் முன்பொருமுறை கூறியது சர்வதேச அளவில் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியது. பல தசாப்தங்களாக, ஐரோப்பிய மற்றும் மேற்கத்திய நாடுகள் தங்களை உலகத்தின் 'தார்மீக காவலர்களாக' (Moral Police) முன்னிறுத்திக் கொள்கின்றன. மனித உரிமை, ஜனநாயகம், உலக அமைதி என்று மேடைகளில் முழங்கும் இதே நாடுகள் தான், உலகின் பல பகுதிகளில் நடக்கும் போர்களுக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஆயுதங்களை விநியோகித்து வருகின்றன.

ஆயுதங்களை விற்று தங்களின் பொருளாதாரத்தை வளர்த்துக்கொண்டு, மறுபுறம் அமைதிக்கான நோபல் பரிசுகளையும், மனித உரிமை உபதேசங்களையும் வழங்கும் இந்த இரட்டை நிலைப்பாட்டைத் தான் ஜெய்சங்கர் தனது ஒற்றை வரியில் சுக்குநூறாக உடைத்துள்ளார்.

**இந்தியாவின் அமைதி வரலாறு**

"**இன்று வரை, எந்தவொரு ஐரோப்பிய நாடோ, அல்லது ஆப்பிரிக்க நாடோ "இந்தியா எங்கள் மீது ஆக்கிரமிப்புப் போர் தொடுத்தது" என்று சரித்திரத்தில் குற்றம் சாட்ட முடியாது. இதுவே இந்தியாவின் மிகப்பெரிய தார்மீக பலம்.**'' டாக்டர் ஜெய்சங்கரின் இந்த வார்த்தைகள் நமது சரித்திரப் பெருமையின் அடித்தளத்தில் இருந்துதான் பிறக்கின்றன.

நாம் நமது கலாச்சாரத்தையும், அறிவியலையும், வணிகத்தையும், ஆன்மீகத்தையும் தான் உலகெங்கும் பரப்பினோமே தவிர, வாளையும் ரத்தத்தையும் அல்ல என்ற கருத்தைத்தான் இவ்வாறு டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

**நாட்டு நலன் சார்ந்த வெளியுறவுக் கொள்கை (Strategic Autonomy)**

உக்ரைன் ரஷ்யா போரைக் காரணம் காட்டி, இந்தியா ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்கக் கூடாது என்று மேற்கத்திய நாடுகள் அழுத்தம் கொடுத்தன. அதற்கு ஜெய்சங்கர் அளித்த பதிலடி வரலாற்றுச் சிறப்புமிக்கது.

"**ஐரோப்பிய நாடுகள் ரஷ்யாவிடம் இருந்து எரிவாயு வாங்குவது அவர்களின் உரிமை என்றால், இந்தியா தனது மக்களின் நலனுக்காக மலிவு விலையில் எண்ணெய் வாங்குவதும் எங்கள் உரிமை**" என்று நேரடியாகவே முகத்தில் அடித்தார் போல் கூறினார்.

இந்தியா யாருடைய அச்சுறுத்தலுக்கும் அடிபணியாது. டெல்லி எவருக்கும் தலையாட்டி பொம்மை அல்ல. நமது முடிவுகள் வாஷிங்டனிலோ, லண்டனிலோ, பாரிஸிலோ எடுக்கப்படுவதில்லை; அவை புது தில்லியில், இந்திய மக்களின் நலனை மட்டுமே மையமாகக் கொண்டு எடுக்கப்படுகின்றன.

**இது புதிய இந்தியா!**

டாக்டர் எஸ். ஜெய்சங்கர் போன்ற ஒரு அறிவார்ந்த, கூர்மையான, மற்றும் தேசபக்தி மிக்க ஒரு வெளியுறவுத்துறை அமைச்சரை பெற்றிருப்பது இந்தியாவுக்கு கிடைத்த வரம். சர்வதேச மேடைகளில், வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் மற்றும் தலைவர்கள் இந்தியாவின் மீது வைக்கும் விமர்சனங்களுக்கு, அவர் புள்ளிவிவரங்களுடனும், வரலாற்று ஆதாரங்களுடனும் அளிக்கும் பதிலடிகள் ஒவ்வொரு இந்தியனையும் பெருமிதம் கொள்ள வைப்பவை.

# சிறிய ரெடிமேட் அணு மின்சக்தி இயந்திரம்

- மைதிலி

அணுசக்தி நீராவி உற்பத்தி இயந்திரம், அணு உலைகளின் இதயம் போன்றது. யுரேனியம் பிளவுபடும்போது உருவாகும் வெப்பம், கதிரியக்கத் தன்மை கொண்ட 'கன நீரை' (heavy water) கொதிக்க வைக்கிறது. அந்த வெப்பம் இந்த இயந்திரத்தில் உள்ள ஆயிரக்கணக்கான மெல்லிய குழாய்கள் வழியாகச் செலுத்தப்பட்டு, மறுபுறம் உள்ள சுத்தமான நீரை நீராவியாக மாற்றுகிறது. அந்த நீராவி டர்பைனைச் சுழற்றி மின்சாரத்தை உருவாக்குகிறது. குஜராத்தில் உள்ள L&T ஹசிரா ஹெவி இன்ஜினியரிங் மையத்தில் (L&T Hazira Heavy Engineering Hub) இது தயாரிக்கப்பட்டது. ஜூன் 5, 2026 அன்று, பிரதமர் நரேந்திர மோடி '700 MW' என்று சிவப்பு எழுத்துக்களில் குறிப்பிடப்பட்டிருந்த அந்த அணுசக்தி நீராவி உற்பத்தி இயந்திரத்தின் முன் நின்று அவர் புகைப்படம் எடுத்துக்கொண்டார். இது வெறும் தொடக்க விழா மட்டுமல்ல, "இதை நாங்களே தயாரித்தோம்" என்று உலகிற்கு விடுக்கப்பட்ட ஒரு அறைகூவல் இது.

300 டன் எடையுள்ள, 0.1 மிமீ அளவு கூட குறைபாடு இல்லாத, 40 ஆண்டுகள் உத்தரவாதம் கொண்ட இந்த அணுசக்தி உபகரணத்தை அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ், ஜப்பான், கொரியாவுக்கு அடுத்தபடியாக இப்போது இந்தியா சாதித்துள்ளது, யாருடைய உதவியும் இன்றி, ஒரு சிறிய நட்-போல்ட் (nut-bolt) முதல் இறுதிச் சோதனை வரை அனைத்தையும் நாமே செய்துள்ள சுதேசி திட்டம் இது.

**இதனால் என்ன நன்மை?**

இந்த ஒரே ஒரு 700 MW அணு உலை மூலம் 70 லட்சம் வீடுகளுக்கு 24 மணி நேர மின்சாரம், நிலக்கரி இல்லாமல், புகை இல்லாமல் 30 முதல் 40 ஆண்டுகளுக்குத் தர முடியும். ஒரே வடிவமைப்பைக் கொண்ட 10 உலைகளை ஒரே நேரத்தில் fleet mode (தொடர் உற்பத்தி முறை) யில் கட்டும்போது, ஒரு யூனிட்டிற்கான செலவில் 20% வரை குறைகிறது. இந்த ஒரு அணு உலை மூலம் நேரடியாக 2000 பேர்களுக்கும், மறைமுகமாக 10000 பேர்களுக்கும் வேலை வாய்ப்பு கிட்டும்.

**அணுமின்சாரத்தின் எதிர்காலம்**

ஏப்ரல் 2026 மதிப்பீட்டின் 24 அணு உலைகள் இயங்கி, 8.8 ஜிகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்கின்றன. இன்னும் 11 அணுமின் நிலையங்கள் கட்டுமானத்தில் உள்ளன, அவற்றின் மூலம் 8.7 ஜிகாவாட் வரவிருக்கிறது. இவற்றில், 3 இந்த ஆண்டே செயல்பாட்டிற்கு வரும். மேலும், 500 மெகாவாட் வேகப் பெருக்க அணு உலை ஏப்ரல் 6, 2026லிருந்து கல்பாக்கத்தில் நிலைபெறத் தொடங்கியுள்ளது. ரஷ்யாவிற்குப் பிறகு, நாம் மட்டுமே இதில் சாதித்து இருக்கிறோம். இதன் மூலம், தோரியம் சகாப்தத்திற்கான கதவு திறக்கப்பட்டுள்ளது.



2047-ஆம் ஆண்டுக்கான இலக்கு100 ஜிகாவாட் அணுசக்தி. அதாவது, இன்று நம்மிடம் இருப்பதை விட 11 மடங்கு அதிகம். அதில் பாதி உற்பத்தி, இங்கு குறிப்பிட்டுள்ள 700 மெகாவாட் மற்றும் 200 மெகாவாட் 'இந்தியாவில் தயாரிக்கப்பட்ட' அணு உலைகளின் மூலமாக இருக்கும் என்பது இதன் சிறப்பு.

70 லட்சம் குடும்பங்களுக்கு 30 ஆண்டுகள் தொடர்ந்து அதே திறனுடன் மின்சாரம் வழங்கக்கூடிய, பாதுகாப்பான சிறிய ரெடிமேட் அணுசக்தி நீராவி மின் உற்பத்தி இயந்திரத்தை (Nuclear Steam Generator) இந்தியா கண்டுபிடித்துள்ளது என்பதுதான் இந்தக் கட்டுரையின் சாராம்சம். இந்தியாவின் உள்நாட்டு 700 மெகாவாட் உயர் ஆற்றல் பேரலை (PHWR) திட்டத்தில் பல ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான முயற்சியின் சாதனை வெற்றி இது.

இது வெறும் ஒரு புகைப்படம் மட்டுமல்ல; இந்தியா அணுசக்தி தொழில்நுட்பத்தில் முக்கிய இடத்தில் உள்ளது என்பதை இது அமைதியாக உணர்த்துகிறது. நமது தூய்மையான ஆற்றல் எதிர்காலத்தின் முதுகெலும்பை நமது சொந்தக் கைகள், திறன்கள் மற்றும் தொழிற்சாலைகளைக் கொண்டு நாம் உருவாக்குகிறோம். இது போன்ற கடினமான தொழில்துறை சக்திதான் உண்மையில் அடுத்து வரும் பல தலைமுறைகளுக்கு நமது நாட்டைத் தாங்கி நிற்கப் போகிறது.

# செய்
# சிந்த

**செய்தி:**

**மின்துறை சார்ந்த ஹார்டு டிஸ்குகள் திருட்டு; விசாரணை நடைபெறுவதாக அமைச்சர் விளக்கம்**

**சிந்தனை**

ஊழல்வாதிகளை காப்பாற்ற காண்டிராக்ட் கம்பெனி ஊழியரை குற்றவாளியாக்கிய விஞ்ஞானம். கே.என்.நேரு வழக்கை விசாரிக்க அனுமதி கொடுத்த அரசு தாமதமாக செந்தில்பாலாஜி வழக்கிற்கு அனுமதி கொடுத்தது. திமுகவின் நிழல் தவெக.

**செய்தி:**

**காஞ்சியில் பக்தரை தாக்கியோர் மீது நீதிமன்ற உத்தரவு இருந்தும் FIR போட மறுக்கிறதா காவல்துறை**

**சிந்தனை**

கோவில்களை கொள்ளையடிக்கும் கூடாரங்களாக மட்டுமே பயன்படுத்தும் அரசுக்கு பக்தர்களைப் பற்றி என்ன கவலை? நீதிமன்ற அவமதிப்புகளை வாடிக்கையாக்கிய அறநிலையத்துறை. ஹிந்து இன அழிப்பின் இன்னொரு பரிணாமம்.

**செய்தி:**

**தமிழ் ஜனம், பாலிமர், நியூஸ் தமிழ் - அரசு கேபிளில் மறைப்பு யூடியூபர் மாரிதாஸ் மதுரையில் கைது**

**சிந்தனை**

அரசியல் பழிவாங்கும் நடவடிக்கையில் தொடங்கிய ஆட்சி. கருத்துச் சுதந்திரம் பற்றி பேசுபவர்கள் மௌனம். அரசு துறைகளை ஏவல் துறையாக்கி திமுகவைப் போல் ஜனநாயக படுகொலை செய்யும் தவெக அரசு.

**செய்தி:**

**சித்த மருத்துவ பட்டப்படிப்பை**
**செய்ய வேண்டும் என்ற நீதிம**
**மேல்முறையீடு செய்தது திமுக**

**சிந்தனை**

தமிழ் மொழி, பண்பாடு, அறி
நாட்டினருக்கும், மதத்தினருக்
திமுகவின் இந்த துரோகத்தை
தமிழ் பண்பாட்டு காவலர்
கொள்பவர்களும் கண்டுகொள்

**செய்தி:**

**அட்சதையைப் போ**
**வீணாக்காதீர்கள் -**
**பேச்சு**

**சிந்தனை**

சிவப்பு கொடிக
காரணமான து
சர்ச்சுகளில் வைன்
என்று பேசுவார
திட்டமிட்டே புண்
ஹிந்து வெறுப்பு

# திகள்
# னைகள்

செய்தி:

**முஸ்லீம்களுக்கென பிரத்யேக ஜிம் - கேரளாவில் ஷரியா அமலாகிறதா?**

சிந்தனை

உணவு, உடை வங்கி முறை என்று மதவாதத்தைப் புகுத்தும் இஸ்லாத்தின் லேட்டஸ்ட் ஐட்டம். ஹிந்துப் பெண்களை ஜிம் வைத்து கவரும் முஸ்லிம்களுக்கு அவர்கள் பெண்களைப் பாதுகாக்க செய்யப்பட்ட ஏற்பாடு. பெண்களை காட்சிப் பொருளாக அல்லது போகப் பொருளாகப் பார்க்கும் மேட்டிமைத்தனம்

**ப அங்கீகரித்து பணி நியமனம்**
**ன்ற ஆணைக்கு எதிராக**
**- நீதிபதி G.R.ஸ்வாமிநாதன்**

பியல் ஆகியவற்றை அழித்து அந்நிய தும் உதவும் ஏஜெண்ட் திராவிடம். ஊடகங்களும், தமிழ் ஆர்வலர்கள், கள் என்று தம்பட்டம் அடித்து ளாமல் இருப்பதும் தமிழ் துரோகமே.

செய்தி:

**அகஸ்திய மலை ஆக்கிரமிப்புகளை அகற்ற உத்தரவு; 118 அரசு ஊழியர்களுக்கு சுப்ரீம் கோர்ட் கெடுபிடி**

சிந்தனை

பணமுள்ளவர்களும், பயங்கரவாதிகளும் ஆக்ரமிக்க அனுமதிக்கும் அரசு சுற்றுச்சூழலை கெடுப்பதுடன் நாட்டின் பாதுகாப்பையும் கேள்விக்குறியாக்கியுள்ளது. ஆக்ரமிப்பை அகற்ற அரசு தவறும் பட்சத்தில் மத்திய பாதுகாப்பு படையை பயன்படுத்துவோம் என்ற எச்சரிக்கை மாநில அரசின் மீதுள்ள நம்பிக்கையின்மையை வெளிபடுத்தியுள்ளது.

**ட்டு அரிசியை**
**சிபிஎம் பெ. சண்முகம்**

ளக் கட்டி உடுக்கும் உடைக்கு ணியை /பாழாக்காத்தீர்கள், கொடுத்து குடிகாரனாக்காதீர்கள் ா? ஹிந்துக்களின் மனதை படுத்தும் பேச்சு. வழக்கமான பேச்சு.

செய்தி:

**கோவை மாநகராட்சி தூய்மைப்பணி விளம்பரத்தில் கிறிஸ்தவ பிரச்சாரம்**

சிந்தனை

மதமாற்றத்தில் வெளிப்படையாகவே ஈடுபடும் தவெக அரசு. சட்டவிரோத செயல்களை துணிந்து செய்வது கிறிஸ்தவ மதவெறியின் உச்சம். அதிகார துஷ்பிரோயத்தில் ஈடுபடுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கைத் தேவை.

# படம் சொல்லும் பாடம்

- சி.பாண்டிக்குமார்






# சிலிகுரி ஒரு வலிமையான வளையம்

*பாரதி*

***சிலிகுரியின் முக்கியத்துவம்***

இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களை நாட்டின் பிற பகுதிகளுடன் இணைக்கும் மிக முக்கியமான ஒரு பகுதிதான் சிலிகுரி இணைப்புப்பாதை (Siliguri Corridor). 'கோழியின் கழுத்து' (Chicken's Neck) என்று அழைக்கப்படும் இந்தப் பாதை வெறும் 20 முதல் 22 கிலோமீட்டர் அகலம் கொண்ட இந்த குறுகிய நிலப்பரப்பு.

இந்த சிலிகுரி பாதை நேபாளம், பூட்டான், வங்காளதேசம் மற்றும் சீனா (திபெத்) ஆகிய நான்கு வெளிநாட்டு எல்லைகளால் சூழப்பட்டுள்ளது. இந்தியாவின் ஒட்டுமொத்த வடகிழக்கு மாநிலங்களுக்கான போக்குவரத்து, பாதுகாப்பு தளவாடங்கள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் நகர்வு அனைத்தும் இந்த ஒரே ஒரு வழித்தடத்தின் வழியாகவே நடக்க வேண்டும்.

உலகளவில் புகழ்பெற்ற ஹார்முஸ் நீரிணையை (Strait of Hormuz) எப்படி ஒட்டுமொத்த வர்த்தகத்தை முடக்கும் இதயப் பகுதியாகப் பார்க்கிறார்களோ, அதே போன்ற ஒரு நிலையை இந்தியாவின் பாதுகாப்பில் இந்த சிலிகுரி பாதை பெற்றுள்ளது. எதிர்காலத்தில் ஏதேனும் ஒரு பதற்றமான சூழலில் இந்த குறுகிய பகுதி துண்டிக்கப்பட்டால், வடகிழக்கு மாநிலங்களுக்கான தொடர்பு முற்றிலும் துண்டிக்கப்படும் அபாயம் உள்ளது. 2017 ஆம் ஆண்டு நடந்த டோக்லாம் (Doklam) எல்லைப் பிரச்சனைக்குப் பிறகு, இந்தப் பகுதியின் பாதுகாப்பை




பலப்படுத்துவது இந்தியாவின் முதன்மை இலக்காக மாறியுள்ளது.

***உள்கட்டமைப்பு மேம்பாடும் மத்திய-மாநில கூட்டுறவும்***

இந்தப் பாதுகாப்புக் குறைபாட்டை நிவர்த்தி செய்ய, மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள சுமார் 120 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு பிரம்மாண்டமான ராணுவ மற்றும் தளவாட மையத்தை (Logistical and Military Hub) உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. மத்தியிலும் மாநிலத்திலும் இணக்கமான சூழல் நிலவும்போது, இத்தகைய பெரிய அளவிலான உத்திசார் திட்டங்களை நிலம் கையகப்படுத்துதல் போன்ற சிக்கல்களின்றி மிக வேகமாகச் செயல்படுத்த முடிகிறது.

***வரவிருக்கும் பொருளாதார மற்றும் வணிக வாய்ப்புகள்***

அடுத்த 5 முதல் 10 ஆண்டுகளில், இந்த சிலிகுரி மற்றும் பாக்டோக்ரா (Bagdogra) சுற்றியுள்ள பகுதிகளில் மிகப்பெரிய அளவிலான உள்கட்டமைப்பு மாற்றங்கள் நிகழவுள்ளன. மத்திய அரசின் நேரடி நிதியுதவியுடன் பல கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்கள் இங்கே செயல்படுத்தப்பட வாய்ப்புகள் உள்ளன. இதில் பின்வரும் துறைகளில் மிகப்பெரிய வணிக வாய்ப்புகள் உருவாகும்:


**கட்டுமானம் மற்றும் சுரங்கப்பாதைகள் (Construction & Tunnels)**

ராணுவப் போக்குவரத்து எளிதாக இருக்க புதிய சாலைகள், மேம்பாலங்கள் மற்றும் வியூக முக்கியத்துவம் வாய்ந்த சுரங்கப்பாதைகள் அமைக்கப்படும்.

மின்சாரம் மற்றும் கண்காணிப்பு அமைப்புகள் (Electricals & Surveillance): நவீன எல்லைக் கண்காணிப்பு உபகரணங்கள், அதிநவீன ரேடார்கள், சிசிடிவி அமைப்புகள் மற்றும் தடையற்ற மின்சார விநியோகத்திற்கான உள்கட்டமைப்புகள் நிறுவப்படும்.

**பாதுகாப்பு மற்றும் வீட்டுவசதி (Defense & Housing)**

எல்லையில் பணியாற்றும் ராணுவ வீரர்கள், தொழிலாளர்கள் மற்றும் அதிகாரிகளுக்கான பிரத்யேக குடியிருப்பு வளாகங்கள் மற்றும் தற்காலிக முகாம்கள் அதிகளவில் உருவாக்கப்படும்.



இந்த பிரம்மாண்டமான பொருளாதார முதலீடுகள், மேற்கு வங்கத்தின் கிழக்குப் பகுதி மற்றும் ஒட்டுமொத்த வடகிழக்கு மாநிலங்களின் பொருளாதாரத்தை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்லும். அரசு வழங்கும் இந்த டெண்டர்களை நேரடியாகவோ அல்லது பெரிய நிறுவனங்களுடன் இணைந்து துணை ஒப்பந்தங்கள் மூலமாகவோ பெற்றுச் செயல்பட நினைக்கும் உள்ளூர் மற்றும் வெளிமாநில வணிகர்களுக்கு இது ஒரு தங்கமான வாய்ப்பாகும்.

இப்பகுதியில் இப்போதே தங்களுடைய விநியோகச் சங்கிலி (Distribution channel) களை பலப்படுத்திக் கொள்ளும் வணிகர்கள், எதிர்காலத்தில் அரசு செயல்படுத்தப்போகும் திட்டங்கள் மூலம் மிகப்பெரிய லாபத்தை ஈட்ட முடியும்.

இந்த பிரம்மாண்ட திட்டத்தின் பின்னணியில் இருக்கும் பொறியியல் அதிசயங்களும் வியூக சுவாரஸ்யங்களும் எந்தவொரு தொழில்நுட்ப வல்லுநரையும் வியக்க வைக்கும் வகையில் அமைந்துள்ளன.

பொதுவாக ஒரு பாதுகாப்பு தளம் என்பது நிலத்தின் மேல் அமைக்கப்படும் கட்டமைப்பாகவே இருக்கும், ஆனால் இந்த சிலிகுரி திட்டத்தின் முதன்மை தனித்துவமே இதன் பெரும்பகுதி நிலத்தடி அரணாக (Underground Bunker Network) மாறுவதுதான்.

**தயாராகி வரும் டிஜிட்டல் கோட்டை**

நவீன ஏவுகணைகள் அல்லது வான்வழி குண்டுவீச்சுகள் போன்ற அச்சுறுத்தல்களைத் தாங்கி, நாட்டின் மிக முக்கிய விநியோகச் சங்கிலி எவ்விதத்திலும் தடைபடக் கூடாது என்பதற்காக, நிலத்தடியில் சுமார் 20 மீட்டர் ஆழத்தில் இந்த ராணுவ மற்றும் தளவாட மையம் வடிவமைக்கப்படுகிறது. இதனுடன் இணைக்கப்படும் 40 கிலோமீட்டர் நீள நிலத்தடி இரயில் சுரங்கப்பாதையானது, எதிரிகளின் செயற்கைக்கோள் (Satellite) கண்களுக்குத் தெரியாமல், ரகசியமாக ராணுவ டாங்கிகள், கனரக ஆயுதங்கள் மற்றும் ஆயிரக்கணக்கான வீரர்களை சில நிமிடங்களில் எல்லையை நோக்கிக் கொண்டு சேர்க்கும் ஒரு 'அதிநவீன சுரங்கப் பாதையாக' மாறும்.

இதன் சிறப்பம்சம், இங்கு அமையவிருக்கும் ஆறு வழி இரயில் பாதை (Six-track rail system) அமைப்பு மூலம் 120 ஏக்கரில் உருவாக்கப்படும் நாட்டின் மிக நவீன 'லாஜிஸ்டிக்ஸ் ஹப்'. ஒரே நேரத்தில் பல சரக்கு இரயில்கள் வந்து தளவாடங்களை இறக்கவும், தானியங்கி முறையில் (Automated Cargo Handling) அவற்றைச் சேமித்து வைக்கவும், தேவைப்படும் நேரத்தில் நொடிப் பொழுதில் மாற்றுப் பாதைகளில் திருப்பி விடவும் கூடிய அதிநவீன சிக்னலிங் மற்றும் கிரிட் தொழில்நுட்பம் இங்கு பயன்படுத்தப்படவுள்ளது. பாதுகாப்பு மற்றும் உள்கட்டமைப்பைத் தாண்டி, இந்தத் திட்டத்தில் பயன்படுத்தப்படவிருக்கும் டிஜிட்டல் கண்காணிப்பு தொழில்நுட்பம் (Digital Surveillance Enclosure) மிகவும் தனித்துவமானது. எல்லையை ஒட்டிய பகுதி என்பதால், வெறும் சாதாரண வேலிகளுக்குப் பதிலாக, செயற்கை நுண்ணறிவு (AI) மூலம் இயங்கும் சென்சார்கள், வெப்பத்தைக் கண்டறியும் கேமராக்கள் (Thermal Imaging), மற்றும் ஊடுருவல்களை உடனுக்குடன் கண்டறியும் லேசர் பாதுகாப்பு வளையங்கள் இந்த 120 ஏக்கரைச் சுற்றி அமைக்கப்படவுள்ளன. இது இந்தியாவின் கிழக்கு எல்லையில் ஒரு டிஜிட்டல் கோட்டையை உருவாக்குவதற்குச் சமம்.

**வலிமையான பகுதி**

மிக முக்கியமாக, இந்த ஒட்டுமொத்தப் பொறியியல் மாற்றமும் சிலிகுரி மற்றும் பாக்டோக்ரா சுற்றியுள்ள உள்ளூர் வர்த்தக அமைப்பை முற்றிலும் மாற்றியமைக்கப் போகிறது. ராணுவத் தேவைகளுக்காக உருவாக்கப்படும் தடையற்ற அதிவேக மின்சாரக் கட்டமைப்பு மற்றும் நவீன சாலை வசதிகள், அந்தப் பகுதியைச் சுற்றியுள்ள சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களுக்கான மிகப்பெரிய உந்துசக்தியாக மாறும். அரசு டெண்டர்கள் மூலம் வரவிருக்கும் இத்தகைய பிரம்மாண்டமான கட்டுமானங்கள், சர்வதேச அளவில் இந்தியாவின் பாதுகாப்புத் தரத்தையும், உள்நாட்டுப் பொறியியல் திறனையும் உலகிற்குப் பறைசாற்றும் ஒரு மைல்கல்லாக அமையும் என்பதில் ஐயமில்லை.

Strength of the chain lies in its weakest link அதாவது ஒரு சங்கிலியின் பலவீனமான வளையமே அதன் மொத்த பலவீனத்தின் அடையாளம் என்று கூறுவார்கள். இன்று வரை இந்தியாவின் மிக பலவீனமாக இருந்த ஒரு பாதுகாப்பு வளையம், இப்போது நாட்டின் மிகப்பெரிய பொருளாதார மற்றும் உள்கட்டமைப்பு மையமாக மாறத் தயாராகி வருகிறது.

# பொருளாதாரம்

கோ. ரமேஷ், பொருளாதார நிபுணர்.

### புல்லிஷ் டோஜி ஸ்டார் அமைப்பு

ஸ்டார் என்பது பங்கு அல்லது சந்தை அதன் தற்போதைய போக்குக்கு எதிராக செயல்பட போகிறது என்பதை சுட்டிக் காட்டுகிறது. டோஜி என்பது நிச்சயமில்லாத நிலையை குறிக்கும்.


பொதுவாக இந்த புல்லிஷ் டோஜி ஸ்டார் பேட்டர்ன் (Bullish Doji star) என்பது தற்போதைய போக்குக்கு எதிரான நிச்சயமில்லாத காலத்தைக் குறிக்கும். ஒருவர் இந்த அமைப்பை உறுதிப்படுத்துவதற்கு சிறிது காலம் (உதாரணமாக, மார்னிங் ஸ்டார் அமைப்பு, மேலே) காத்திருக்க வேண்டும். அதன் பிறகுதான் டோஜி ஸ்டார் அமைப்பில் வர்த்தகம் செய்ய வேண்டும்.

முதல் லைன் வெற்றிடமாகவே அல்லது மூடப்பட்டோ இருக்கும். சார்ட்டை பார்த்தால் இந்த அமைப்பை எளிதில் விளங்கிக் கொள்ள முடியும்.

### ஹேங்கிங் மேன் பேட்டர்ன்

குறிப்பிட அளவுக்கு மேலேறிய பிறகு அமைப்பில் உள்ள லைன்கள் பேரிஷ் ஆக இருக்கும். குறிப்பிட்ட காலத்துக்கு இறங்குமாக இருந்து அமைப்பு உருவானால் அது ஹேங்கிங் மேன் பேட்டர்ன் என்று அழைக்கப்படுகிறது. அவை சிறிய ரியல் பாடிகள் மூலம் அடையாளம் காணப்படுகிறது. (அதாவது, தொடக்கம் மற்றும் முடிவு விலைகளுக்கு இடையே விலை வித்தியாசம் சிறிதாகத்தான் இருக்கும்.) மற்றும் நீண்ட லோயர் ஷேடோ (அதாவது, குறைந்தபட்ச விலையானது, தொடக்க விலை, அதிகபட்ச விலை, முடிவு விலையை விட குறைவாக இருக்கும்) உருவாகி இருக்கும்.

பாடிகள் வெற்றிடமாகவே அல்லது மூடப்பட்டோ இருக்கும். சார்ட்டை பார்த்தால் இந்த அமைப்பை விளங்கி கொள்ள முடியும்.




### டார்க் கிளவுட் கவர் அமைப்பு

இது கரடி நிலையை குறிக்கும் அமைப்பு. இரண்டாம் தினத்தின் நாளின் பாடி, முந்தைய தினத்தின் பாடியின் மையப்பகுதிக்கு கீழே இருந்தால் இந்த அமைப்பு உருவாகி இருக்கும்.

அதாவது இரண்டாவது தினத்தில் கரடி சந்தை மெழுகுவர்த்தி, முந்தைய தினத்தின் மெழுகுவர்த்தியின் மையப்பகுதிக்கு கீழே முடிவு பெற்றிருந்தால் உருவாகி இருக்கும் அமைப்புக்கு டார்க் கிளவுட் கவர் ( Dark Cloud Cover) என்று பெயர்.

மேலும், இரண்டாம் நாளில் விலை வித்தியாசம் அதிகரித்து, வித்தியாசத்தை பூர்த்தி செய்வதாக இருக்கும். (பார்க்க இடைவெளி அமைப்புகள்). மற்றும் முதல் தினத்தின் காளை சந்தை மெழுகுவர்த்தி குச்சியில் உருவான ஆதாயத்துக்கு நெருக்கமாக இருக்கும்.

விலை வித்தியாசம் அதிகரிப்பதை விலக்கிக் கொண்டால் பங்கின் விலை அல்லது சந்தையின் புள்ளிகள் இறங்கப் போகிறது என்பதற்கான குறியீடாக இருக்கிறது. ஆனால், முந்தைய தினத்தின் லாபத்தை பெற மீண்டும் செல்லும் போது அதிக கரடி சந்தையின் இறக்க நிலை உருவாகி விடுகிறது. ஏறிய விலை, அதே நிலையில் நீடிக்க முடியாமல் தேவையை ஈடுகட்ட முடியாத நிலையில் அளிப்பு குறைவாக இருக்கும்.


### ஈவினிங் ஸ்டார் அமைப்பு


இது கரடி சந்தையைக் குறிக்கும் குறிப்பிடத்தக்க அமைப்பு. ஸ்டார் என்பது, சந்தையின் புள்ளிகள் அல்லது பங்கின் விலை தற்போதைய நிலையிலிருந்து மாறப் போகிறது என்பதைக் குறிக்கிறது. இதனை கரடி (நிரப்பட்ட) லைன் உறுதிப்படுத்துகிறது. இந்த ஸ்டார் நிரப்பப்படாமல் அல்லது நிரப்பப்பட்டதாக இருக்கும்.

### ஷூட்டிங் ஸ்டார் அமைப்பு

இது தற்போதைய நிலைக்கு எதிராக பங்கின் விலை அல்லது சந்தையின் புள்ளிகள் செயல்பட போகிறது (ரிவர்ஸல்) என்பதை குறிப்பிடும் அமைப்பு..

இரண்டாவது தினத்தில் மெழுகுவர்த்தி குச்சியின் பாடியில் குறைந்தபட்ச விலை என்பது டிரேடிங் ரேஞ்ச்-ன் பாட்டத்துக்கு நெருக்கி இருக்கும். மேல் நிழல் (அப்பர் ஷேடோ) அவசியம் உயரமாக இருக்க வேண்டும். இது மார்னிங் ஸ்டார் அல்லது




ஈவினிங் ஸ்டார் அமைப்பை விட பலவீனமான ரிவர்ஸல் சிக்னல் ஆகும்.

அடுத்த மெழுகுவர்த்தி குச்சியின் முடிவு, முதல் தினத்தின் பாதிக்கு கீழே இருந்தால்தான் இந்த ஷூட்டிங் ஸ்டார் அமைப்பு உறுதிப்படும்.

**கவனத்தில் கொள்ள வேண்டியவை..!**

மெழுகுவர்த்தி சார்ட்கள் பற்றிய பொதுவான சில விஷயங்களைப் பார்ப்பது முதலீடு மற்றும் வர்த்தகத்தில் இருப்பவர்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும்.

பொதுவாக வெள்ளை மெழுகுவர்த்தி அமைப்புகள் சந்தை ஏறுமுகத்தில் உள்ளதையும் கருப்பு மெழுகுவர்த்தி அமைப்பு இறங்குமுகத்தில் உள்ளதையும் குறிக்கும். ஒரு நாளில் ஒரு மெழுகுவர்த்தி குச்சிதான் உருவாகும். இந்த அடிப்படையான விசயங்களைக் கொண்டு நாம் சில முடிவுகளுக்கு வர முடியும்.

ஒரு நாளின் வர்த்தகம் வெள்ளை மெழுகுவர்த்தி குச்சியாக இருந்தால் அன்றைய தொடக்க விலையை விட முடிவு விலை அதிகபட்சமாகவே முடிந்திருக்கும். அப்படியானால் அடுத்த நாள் தொடக்க விலையும் அதனை ஒட்டியே தொடங்கும்.

அதுவே கருப்பு மெழுகுவர்த்தி அமைப்பில் தொடக்க விலையை விட முடிவு விலை குறைவாகவே முடிந்திருக்கும்.

இந்த மெழுகுவர்த்தி குச்சி அமைப்பை வைத்து இதன் ஆதரவு நிலை எது? தடுப்பு நிலை எது? சந்தை இனி மேலே செல்லுமா அல்லது கீழே இறங்குமா? போன்ற தகவல்களைப் பெற முடியும்.

ஒரு மாத காலத்தில் பங்குச் சந்தை புள்ளிகளின் சார்ட்டை கவனித்துப் பாருங்கள். அதன் குறைந்தபட்ச புள்ளிகள் எந்த நிலையில் முடிந்திருக்கிறது என்பதை கவனியுங்கள். அவற்றின் வித்தியாசம் கடந்த சில வாரங்களாக சுமார் 50 புள்ளி என்கிற அளவில் ஏறி இறங்கிக் கொண்டிருந்தால், அதுதான் ஆதரவு நிலை. புள்ளிகள் அந்த நிலையில் இருந்து மேலே செல்ல முயற்சிக்கிறது என்று பொருள்.

அது போலவே தடுப்பு நிலையை தெரிந்துக் கொள்ள சந்தையின் அடுத்தடுத்த வாரங்களின் அதிகபட்ச புள்ளிகளின் வித்தியாசத்தைக் கவனித்து வாருங்கள். அதுவும் கிட்டத்தட்ட 50 புள்ளிகள் வித்தியாசத்திலே ஊசலாடிக் கொண்டிருந்தால் சந்தை அதை உடைத்துக் கொண்டு புதிய உச்சத்தை அடைய முயற்சிக்கிறது என்று பொருள்.

இந்த இரு நிலைகளில் தற்போது சந்தையின் புள்ளிகள் அல்லது பங்கின் விலை எதில் இருக்கிறது என்பதை தெளிவாக அறிந்துக்கொண்டால் சந்தை/பங்கு எந்த திசையில் செல்கிறது என்பதைக் கணித்துவிட முடியும்.

மிக முக்கியமாக, மெழுகுவர்த்தி குச்சி அமைப்பு அடிப்படையில் பங்கின் விலை அல்லது சந்தை புள்ளிகளின் போக்கைக் கணிக்கும் போது தின வர்த்தகத்தை (Indra Day)வைத்து தீர்மானிக்கக் கூடாது. காரணம், ஒரு நாளில் உருவாகும் எந்த அமைப்பும் அந்த ஒரு நாளுக்கானது மட்டுமே. அந்த வகையில், வாரம் அல்லது மாத சார்ட் அமைப்பை போட்டு பார்த்து, அலசி ஆராயும் போது மட்டும்தான் சரியான நிலவரத்தை அறிந்துக் கொள்ள முடியும்.

**கப் வித் கேண்டில் பேட்டர்ன்**

கப் வித் கேண்டில் என்பது பங்கு அல்லது சந்தை ஏறுமுகத்தில் இருக்கிறது என்பதைக் குறிக்கும் பேட்டர்ன். பேட்டர்ன் குறிப்பிட்ட காலத்துக்கு இருந்துவிட்டு பிறகு, அந்த நிலையை உடைத்துக் கொண்டு (பங்கின் விலை/ சந்தையின் புள்ளிகள்) மேலேறத் தொடங்கும்.

இந்த கப் பேட்டர்ன் கிட்டத்தட்ட ஆங்கில U வடிவில் இருக்கும். கீழ் பகுதி வட்ட வடிமாக இருக்கும். அதாவது ஒரு கிண்ணம் வடிவில் இருக்கும். இது ஆங்கில V வடிவில் இருக்காது. V வடிவ கீழ் பகுதி இருந்தால் அது கப் பேட்டர்ன் எனப்படும்.

இந்த கப் பேட்டர்னை தொடர்ந்து ஹேண்டில் பேட்டர்ன் உருவாகும். அதாவது கப் பேட்டர்ன்க்கு பிறகு பங்கின் விலை சிறிது இறங்கி காணப்படும். அதன் பிறகு 'பிரேக் அவுட்' ஆகி உடைத்துக் கொண்டு மேலேறும் நிலை உருவாகும்.

# வெற்றியும் தோல்வியும்

- வெங்கட் பிரசாத், D.
அரசியல் மற்றும் விளையாட்டு ஆய்வாளர்

**தொடங்கியது 2026 கால்பந்து உலகக்கோப்பை :**

2026 பிஃபா உலகக் கோப்பை கால்பந்து தொடர் ரசிகர்களுக்கு மறக்க முடியாத விருந்தாக அமைய உள்ளது. நடப்பு சாம்பியன் அர்ஜென்டினா மீண்டும் கோப்பையை தக்கவைக்குமா, அதேபோல், உலகின் சிறந்த கோல் கீப்பர்களில் ஒருவரான எமிலியானோ மார்டினஸ் தனது அபார சேவ்களால் அர்ஜென்டினாவுக்கு வலு சேர்க்கிறார், மெஸ்ஸி



தனது மாயாஜாலத்தால் அணியை வெற்றிப்பாதைக்கு அழைத்துச் செல்வாரா என்ற எதிர்பார்ப்பு உச்சத்தில் உள்ளது. கிறிஸ்டியானோ ரொனால்டோவின் கடைசி உலகக் கோப்பை வாய்ப்பாக பார்க்கப்படும் இந்த தொடரில் போர்ச்சுகலும் வரலாறு படைக்கத் தயாராக உள்ளது.

பிரான்ஸ், பிரேசில், இங்கிலாந்து மற்றும் நெதர்லாந்து போன்ற பலம் வாய்ந்த அணிகளும் சாம்பியன் பட்டத்திற்காக கடும் போட்டி அளிக்கத் தயாராக உள்ளன. அமெரிக்கா, கனடா மற்றும் மெக்சிகோ இணைந்து நடத்தும் இந்த உலகக் கோப்பை உலகம் முழுவதும் கோடிக்கணக்கான ரசிகர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது. நட்சத்திர வீரர்கள், அதிரடி போட்டிகள் மற்றும் புதிய வரலாறுகளுக்காக காத்திருங்கள். உலகக் கோப்பையின் அனைத்து முக்கிய அப்டேட்கள், பகுப்பாய்வுகள் மற்றும் சுவாரஸ்ய தகவல்களுக்கு எங்கள் செய்தி இணையதளத்தைத் தொடர்ந்து பாருங்கள்.

**பாட்மிண்டனில் உள்ளே வெளியே:**

சர்வதேச பேட்மிண்டன் போட்டிகளின் எண்ணிக்கையை BWF தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில், இந்தியா முன்னும் பின்னுமாய் வெற்றிகளையும் தோல்விகளையும் பதிவு செய்து வருகிறது. மே இறுதியில் நடைபெற்ற சிங்கப்பூர் ஓபனில் ஒற்றையர் பிரிவில் லக்ஷ்யா சென் மற்றும் பி.வி.சிந்து காலிறுதியில் வெளியேறினர். ஆனால் ஆண்கள் இரட்டையர் பிரிவில் சாத்விக் சாய்ராஜ் ராங்கிரெட்டி - சிராக் ஷெட்டி ஜோடி இந்தோனேசிய அணியை வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்றது. ஜூன் 14-ம் தேதி நிறைவடைந்த ஆஸ்திரேலிய ஓபனில் காயம் மற்றும் உடற்தகுதி மேலாண்மைக்காக சாத்விக்-சிராக், லக்ஷ்யா விலகினர். ஹெச்.அம்சகருணன் - அர்ஜுன் எம்.ஆர் ஜோடி அரையிறுதியுடன் வெளியேற, பி.வி.சிந்து அரையிறுதியில் ஜப்பானின் அகானே யமகுச்சியிடம் தோல்வியடைந்தார். இந்தியாவில் கிரிக்கெட் அடுத்து அதிகாமாக விளையாடபடும் இந்த விளையாட்டில் இன்னும் தொடர் வெற்றிகளை குவிக்க வேண்டுமென்பதே நமது எதிர்பார்ப்பு.

**சிங்கபெண்களே உங்களால் முடியும் :**

இங்கிலாந்து மற்றும் வேல்ஸில் மகளிர் டி20 உலகக் கோப்பை 2026 தொடங்கியுள்ளது. ஒருநாள் உலகச் சாம்பியனான இந்திய அணி மீண்டும் இன்ப அதிர்ச்சி வெற்றியைப் பதிவு செய்யுமா என்ற எதிர்பார்ப்பு ரசிகர்களிடையே அதிகமாக உள்ளது. இருப்பினும், இங்கிலாந்து சூழ்நிலைகளில்




விளையாட வேண்டியிருப்பதால் தென்னாப்பிரிக்கா, இங்கிலாந்து மற்றும் ஆஸ்திரேலியா அணிகள் வலுவான போட்டியாளர்களாக இருப்பதாக விமர்சகர்கள் கருதுகின்றனர்.

ஆனால் டி20 கிரிக்கெட்டில் ஒரு நாளில் 1 அல்லது 2 வீராங்கனைகள் சிறப்பாக செயல்பட்டாலே எந்த அணியும் வெற்றி பெற முடியும். திறமையான இளம் வீராங்கனைகள், அனுபவம் வாய்ந்த மூத்த வீராங்கனைகள் மற்றும் பலம் வாய்ந்த சுழற்பந்து தாக்குதலுடன் இந்தியா வலுவாகப் போராடும் திறன் கொண்டுள்ளது. இதேபோன்ற சூழ்நிலையில்தான் இந்திய மகளிர் அணி 2017 உலகக் கோப்பையில் இறுதிப்போட்டி வரை முன்னேறியது. ஷ்ரேயங்கா பாட்டீல், ரிச்சா கோஷ் உள்ளிட்ட நட்சத்திரங்கள் தங்கள் முழுத் திறமையையும் வெளிப்படுத்தினால் இந்தியாவுக்கு கோப்பையை வெல்ல சிறந்த வாய்ப்பு உள்ளது. மேலும் பல பகுப்பாய்வுகளை அடுத்த கட்டுரைகளில் காணலாம்.

# சங்கத் தமிழில் சனாதனம்

பத்மன்



## அத்தியாயம் 13: எங்கள் பாரத தேசமென்று தோள்கொட்டுவோம்

“பாரத நாடு பழம்பெரு நாடு நீரதன் புதல்வர் இந்நினைவு அகற்றாதீர்” என்று கட்டளையிட்டார் மகாகவி பாரதியார். ஆனால் ஆங்கிலேய அடிமைத்தனக் கல்விமுறையின் காரணமாக பாரத நாட்டின் புதல்வர்கள் நாம் என்ற நினைவு சிலருக்கு அகன்றுபோயுள்ளது. வேறு சில பகுத்தறிவு மேதாவிகளுக்கு, ஆங்கிலேயன் ஒன்றிணைத்த நிலப்பகுதியான யூனியன் அதாவது ஒன்றியம் தானே இந்த நாடு என்ற மூட நம்பிக்கை பீடித்துள்ளது. “ஹிமாலயம் சமாரப்ய யாவத் இந்து சரோவரம் தம் தேவநிர்மிதம் தேசம் ஹிந்துஸ்தானம் பிரசக்ஷதே” என்று பண்டைய நூலான பிருஹஸ்பதி சூத்திரம் கூறுகிறது. இமயமலை தொடங்கி இந்து மாக்கடல் எனப்படும் இந்தியப் பெருங்கடல் வரை பரவியிருக்கின்ற, கடவுளரால் உருவாக்கப்பட்ட இந்த நாட்டுக்கு ஹிந்துஸ்தானம் என்று பெயர் என்று இதற்குப் பொருள்.

இதே ஒற்றை தேசக் கருத்தைத்தான் நமது பழந்தமிழ் சங்க இலக்கியங்களும் சாற்றுகின்றன. மொழியுணர்வின் அடிப்படையில் “வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகம்” என நமது தமிழ்நாடு மாநிலம் அமைந்திருப்பதில் மாற்றுக் கருத்து இல்லை. அதேபோலத்தான், பண்பாட்டின் அடிப்படையில் இமயமலை முதல் இந்தியப் பெருங்கடல் முழங்கும் குமரி முனை வரையிலான பரந்த நிலப்பகுதி, ஒரே நாடாக விளங்குகிறது. இதனை ஹிந்துஸ்தானம், பாரதம், ஜம்புத்வீபம் என்ற பெயர்களில் பழங்காலத்தில் அழைத்துள்ளனர். இந்த ஜம்புத்வீபம்தான் தமிழில் நாவலந்தீவு, நாவலந்தண்பொழில் என்று பெயர் பெற்றுள்ளது.

மிகப் பழங்காலத்தில் இந்த நிலப்பகுதி இப்போது உள்ளதைப் போன்ற முப்புறம் கடலும் ஒருபுறம் நிலமும் கொண்ட தீபகற்பமாக இல்லாமல், மேலும் அதிக நிலப்பரப்பு இணைந்து, நாற்புறமும் கடல் சூழ்ந்த தீவாக, நாவல் பழ வடிவில் இருந்ததாக புவியியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். கோண்டுவானா, லெமூரியா போன்ற கருதுகோள்களும் இதனையே குறிக்கின்றன. முற்காலத்தில் ஜம்புக பழம் எனப்படும் நாவல் பழ மரங்கள் அடர்ந்திருந்த நிலப்பகுதி என்பதாலும் இதற்கு ஜம்பத்வீபம், நாவலந்தீவு என்று பெயர் ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது.

நமது சங்கல்ப மந்திரத்தில் “ஜம்புத்வீபே பரதவர்ஷே பரதகண்டே” என்ற வரிகள் வருவது இந்த நாட்டையே குறிக்கிறது. இந்த உணர்வின் அடிப்படையில்தான் ஆங்கிலேயர்களை எதிர்த்துப் போராடிய மருது பாண்டியர்கள் அன்னியனை எதிர்த்து நாடு முழுவதும் போராடுவதற்கான அறைகூவலை, “ஜம்புத்வீப பிரகடனம்” என்று அறிவித்தனர். அதுசரி, இந்த நாடு ஒரே நாடு என்பதற்கு, சங்க இலக்கிய ஆதாரங்கள் என்ன? இதோ அடுக்குகிறேன்:

முதலில் மதுரைக் காஞ்சி தரும் சான்றைப் பார்ப்போம். இளமை, செல்வம், வாழ்க்கை ஆகியவற்றின் நிலையாமையைச் சான்றோர் எடுத்துரைக்கும் திணைக்குக் காஞ்சித் திணை என்று பெயர். அவ்வகையில், இளவயது முதல் போர்களிலும் இன்பம் அனுபவிப்பதிலும் வாழ்க்கையைக் கழித்துவந்த மதுரை மன்னன் தலையாலங்கானத்துச் செரு வென்ற பாண்டியன் நெடுஞ்செழியனிடம் வாழ்வின் நிலையாமையை எடுத்துரைத்து, அறச்செயல்களில் ஈடுபடுமாறு அறிவுறுத்தும் வகையில் அம்மன்னனது அவைக்களத் தலைமைப் புலவர் மாங்குடி மருதனார் பாடியது மதுரைக் காஞ்சி. 782 அடிகளைக் கொண்ட நெடும் பாடலான இந்த மதுரைக் காஞ்சியில் இடம்பெற்றுள்ள கீழ்க்கண்ட வரிகள், நம் பாரத நாட்டின் எல்லையை நமது கண் முன் நிறுத்துகின்றன:

**தென் குமரி வட பெருங்கல்**
**குண குட கடலா வெல்லைத்**
**தொன்று மொழிந்து தொழில் கேட்ப**
**வெற்ற மொடு வெறுத் தொழுகிய**
**கொற்ற வர்தங் கோனா குவை**

***(ம.கா. 70-74)***

“தெற்கே குமரியையும், வடக்கே பெருங்கல் எனப்படும் இமயமலையையும், கிழக்கிலும் மேற்கிலும் கடல்பரப்பையும் எல்லைகளாகக் கொண்ட பரந்துபட்ட நாட்டிலே வாழும் மன்னர்கள் எல்லாம், உனது பழம்பெருமையைப் பேசியபடி அல்லது உன்னுடனான தங்களது பழைய நட்புறவைப் பேசியபடியே உனது ஏவலைச் செய்து முடிக்கின்றனர். அந்த வகையிலே, வெற்றிப் பெருமிதத்துடன் மன்னர்க்கு மன்னனாக நீ விளங்குகிறாய்” என்பது இதன் பொருள்.

மேற்கண்ட பாண்டியன் நெடுஞ்செழியனின் சம காலத்தில் வாழ்ந்த சேர அரசன் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை. இந்த

அரசனைப் புகழ்ந்து, புலவர் குறுங்கோழியார் கிழார் பாடியுள்ள புறநானூற்றின் 17-ஆவது பாடலிலும், மதுரைக் காஞ்சியில் இடம்பெற்றுள்ள பாரத நாட்டு எல்லை பற்றிய விவரங்கள் அப்படியே எடுத்துரைக்கப்பட்டுள்ளன:

தென் குமரி, வட பெருங்கல்,
**குண குட கடலா வெல்லை,**
**குன்று, மலை, காடு, நாடு**
**ஒன்று பட்டு வழி மொழியக்,**
**கொடிது கடிந்து, கோல் திருத்திப்,**
**படுவது உண்டு, பகல் ஆற்றி,**
**இனிது உருண்ட சுடர் நேமி**
**முழுது ஆண்டோர் வழி காவல!**

**(புற. 17. 1-8)**

"தெற்கே குமரி முனையையும் வடக்கே இமயமலையையும் கிழக்கிலும் மேற்கிலும் கடலையும் எல்லையாகக் கொண்டு, இதற்கு நடுவிலே உள்ள குன்று, மலை, காடு ஆகியவை அடங்கிய நிலப்பகுதி ஒரு நாடாக ஒன்றுபட்டு வழிவழியாய்த் தொடர, கொடியவற்றை அகற்றி, செங்கோலைத் திருத்தமாகச் செய்து, அதாவது நல்லாட்சி புரிந்து, ஆறில் ஒரு பங்கு என்ற அரசுக்கு உரிய வரியைப் பெற்றுக்கொண்டு, நடுநிலை தவறாமல் செயல்பட்டு, தடையேதுமின்றி உருண்ட ஒளிபொருந்திய அரசாணைச் சக்கரத்தால், நிலம் முழுவதையும் ஆண்ட முற்கால மன்னர்களின் வழிமுறையைக் காப்பவனே" என்று இந்தப் பாடல் வரிகளுக்குப் பொருள். இந்த நாடு ஒன்றுபட்டு இருந்ததா என்ற கேள்விக்கு, "நாடு ஒன்றுபட்டு வழிமொழிய" என்ற வரிகளே தகுந்த பதில்.

மேற்கண்ட இரண்டு சங்க இலக்கியப் பாடல்களிலும் கூறப்பட்டுள்ள வடபெருங்கல் என்பது இமயமலையைக் குறிக்கவில்லை, அது தமிழகத்தின் வடக்கு எல்லையான வேங்கடம் அதாவது திருப்பதி என்று உருட்டுவோரும் உண்டு. அவர்களால் எழுகின்ற சந்தேகத்தைச் சிறிதுகூட மிச்சமின்றித் துடைத்தெறிகிறது, புறநானூற்றின் 6-ஆவது பாடல். தலையானங்கானத்துச் செரு வென்ற பாண்டியன் நெடுஞ்செழியனுக்குச் சில நூற்றாண்டு காலம் முன்பாக வாழ்ந்த அம்மன்னனின் முன்னோரான பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதிப் பாண்டியனைப் புகழ்ந்து புலவர் காரி கிழார் பாடியிருக்கும் பாடல் இது.

**வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்,**
**தெனாஅது உருகெழு குமரியின் தெற்கும்,**
**குணாஅது கரைபொரு தொடுகடல் குணக்கும்,**
**குடாஅது தொன்றுமுதிர் பௌவத்தின் குடக்கும்,**

**(புற. 6. 1-4)**

"நாட்டின் வடக்கு எல்லையானது பனி படர்ந்திருக்கும் நீண்ட உயர்ந்த மலையான இமயமலை, தெற்கு எல்லையானது அச்சம் தருகின்ற குமரி முனை, கிழக்கு எல்லையானது கரையோடு அலை மோதுகின்ற தோண்டப்பட்ட கடல், மேற்கு எல்லையானது தொன்றுதொட்டு இருக்கின்ற பழமை வாய்ந்த கடல்" என்று இந்தப் பாடல் வரிகளுக்குப் பொருள். சற்று விளக்கமாகக் காண்போம்:

ஹிமம் என்ற சம்ஸ்கிருதச் சொல்லுக்குப் பனி என்றும் அசலம் என்ற சொல்லுக்கு மலை என்றும் பொருள். ஆகையால்தான் வடக்கிலே உள்ள பனிபடர்ந்த நெடுமலை ஹிமாசலம் என்று பெயர் பெற்றது. அந்த ஹிமாசலம்தான் தமிழிலே இமயமலை என்றானது. இதனைத்தான் பாடலின் முதல் அடியில் உள்ள "பனிபடு நெடுவரை" என்ற சொற்றொடர் குறிக்கிறது.

நாட்டின் தெற்கு எல்லையானது, குமரி என்பதை இரண்டாவது அடியில் உள்ள "உருகெழு குமரி" என்ற சொல் உணர்த்துகிறது. "உருகெழு" என்பதற்கு அச்சந்தருகின்ற என்ற பொருள் உண்டு. அது எதனால்? முற்காலத்தில் குமரி என்பது தற்போதுள்ள நிலப்பகுதியைத் தாண்டி, பஃறுளி (பல்துளி) ஆறு எனப்படும் குமரியாற்றையும் அது தோன்றிய குமரி மலைத்தொடரையும் உள்ளடக்கிய பகுதி என்றும், இந்த நிலம் கடல் கொள்ளப்பட்டது என்றும் கருதப்படுகிறது. இந்தக் கருத்துக்கு, சிலப்பதிகாரத்தில் வருகின்ற "பஃறுளி ஆற்றின் பன்மலை அடுக்கத்துக் குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ப" என்ற வரிகள் சான்று தருகின்றன. குமரி நிலம் கடல்கொள்ளப்படுவதற்கு முந்தைய காலத்தில்தான் இந்த நாடு நாவல் பழ வடிவிலான ஜம்புத்வீபமாக இருந்துள்ளது. இவ்விதம் நிலத்தை உள்விழுங்கிய அச்சந்தரக்கூடிய கடல் இருக்கும் பகுதி என்பதால் "உருகெழு குமரி" என்ற சொல்லைப் புலவர் பயன்படுத்தியுள்ளார்.

பாரதத்தின் எந்த மூலையில் நடைபெறும் நிகழ்வுகளும் பண்டைத் தமிழருக்கு அத்துப்படி என்பதை எடுத்துரைக்கும் வகையில் மூன்றாவது அடியில் உள்ள "கரைபொரு தொடுகடல்" என்ற சொற்றொடர் அமைந்துள்ளது. தொடு கடல் என்றால் தோண்டப்பட்ட கடல், நாட்டின் கிழக்கு எல்லையாக இருப்பது தோண்டப்பட்ட கடல். யாரால்? பகீரதனின் முன்னோர்களான சகரர்கள், கவர்ந்து செல்லப்பட்ட அஸ்வமேத யாகக் குதிரையைத் தேடுவதற்காக பூமியைத் தோண்டியதாக புராணம் கூறுகிறது. அவ்வாறு தோண்டப்பட்டதால் நீண்ட கடல்தான் கிழக்கில் உள்ள வங்காள விரிகுடா. அவ்வாறின்றி மேற்கிலே தொன்மை மாறாத பழைய கடல் எல்லையாக இருக்கிறது என்பதை "குடாஅது தொன்றுமுதிர் பௌவத்தின் குடக்கும்" என்ற நாலாவது அடி எடுத்துரைக்கிறது.

**(தொடரும்)**


# நமக்கான USER MANUAL

இரா. முகுந்த கிருஷ்ணன்,
Wellness Centre for Yoga & Holistic Yogic Healing.

## நம் கண்ணுக்குத் தெரியாத நமது 4 உடல்கள்

இங்கு எழுதப்படுபவை வெறும் கட்டுரைகள் அல்ல, மனிதனின் இயக்கத்திற்கான வழிகாட்டி என்பதையும், இந்த உடல்வாழ்வு எப்படி இயங்குகிறது என்பதை அறிந்து, நமக்கு நாமே சரியாக இயக்கிக் கொள்வதற்கான யூசர் மேனுவல் என்பதையும் இதைப் படிப்பவர்கள் மீண்டும் மீண்டும் நினைவுபடுத்திக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

இந்தத் தொடர்களின் ஆரம்பத்தில் குறிப்பிட்டதுபோல் நமக்கு 5 உடல்கள் இருக்கின்றன. 1) அன்னமய சரீரம் - (உணவால் உருவான உடல்), 2) பிராணமய சரீரம் - (பிராண சக்திகளால் உருவான உடல்), 3) மனோமய சரீரம் - (எண்ணங்களால் ஆன உடல்), 4) விஞ்ஞானமய சரீரம் - (அறிவே உருவான உடல்), மற்றும் 5) ஆனந்தமய சரீரம் - (ஆனந்தமே வடிவான உடல்) என அவை ஐந்து உடல்கள். இதுவரையான தொடர்களில் ஐந்து உடல்களில் முதலாவதான அன்னமய சரீரம் எனப்படுகின்ற நமது பருவுடலைப் பற்றி மட்டுமே நாம் தெரிந்துகொண்டோம்.



நம்முடைய மற்ற நான்கு உடல்கள் நமது கண்ணுக்குப் புலப்படாது. ஆனால் நம்மால் நன்கு உணரமுடியும். உதாரணத்திற்கு ஒரு நாளைக்கு மூன்று வேளை நமக்கு பசி ஏற்படுகின்றது. நமக்கு பசிக்கின்றது என்று நாம் மற்றவர்களிடம் சொல்லத்தான் முடியும். நமது கையையோ காலையோ உடலையோ சுட்டிக்காட்டுவது போல் பசியை ஒரு பொருளாக மற்றவர்களுக்கு எடுத்துக் காட்டமுடியாது. பசியை தனக்குத்தான் உணரத்தான் முடியும். பசி, தாகம், இன்பம், துன்பம், தூக்கம், கனவு, ருசி, வலி, ஓசை, காட்சி, குளிர், வெப்பம், பயம், சந்தேகம், தெளிவு, அறிவு, ஆனந்தம், ஞானம் ஆகிய இந்த அனுபவங்களை ஒருவன் தனக்குத்தானே அனுபவித்து உணர்ந்துகொள்ள முடியுமே தவிர அவற்றை மற்றவருக்கு ஒரு பொருளைக் காட்டுவது போல எடுத்துக் காட்டமுடியாது. இந்த அனுபவங்கள் எல்லாம் இந்த பிராணன்களால் ஆன உடம்பில்தான் ஏற்படுகின்றன.

2ஆவது உடலான பிராணமய சரீரத்தில் பிரதானமாக 5 பிராணன்கள் அல்லது சக்திகள் ஒன்று சேர்ந்து இயங்கி உடல்வாழ்க்கையை நடத்துவதற்கு உதவுகின்றன. 1)பிராணன், 2) அபானன், 3) சமானன், 4) வியானன், 5) உதானன் ஆகியவை அந்த 5 பிராணன்கள். மற்ற துணைப் பிராணன்கள் 5 இருக்கின்றன. அவற்றைப் பற்றி பின்னர் தெரிந்துகொள்வோம். பொதுவாக பிராணன் என்றால் வாயு என்று சொல்வதுண்டு. இன்று நமது அறிவியல் பாடப் புத்தகங்களில் ஆக்ஸிஜென் என்பதற்கு பிராணவாயு என்று பொருள் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் நாம் இங்கு பார்த்துக் கொண்டிருக்கின்ற பிராணவாயு என்பது அந்த ஆக்ஸிஜென் அல்ல என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். நாம் பேசிக்கொண்டிருக்கின்ற இந்த பிராணன், ஒற்றையாக இருக்கின்ற ஆக்ஸிஜென் அணுவுக்கும் மூலகாரணமானது. O2 என்பது ஆக்ஸிஜெனுடைய சிம்பல். அதாவது 2 ஆக்ஸிஜென் அணுக்கள் சேர்ந்தது. அதன் பின்னர்தான் நம்மைச் சுற்றியுள்ள வெட்டவெளியில் சுவாசிக்கத் தகுந்த ஆக்ஸிஜெனாக உருவாகிறது. ஒற்றை அணுவாக உள்ள ஆக்ஸிஜென் மிகவும் ஆபத்தானதாகவும் நிலையற்றதாகவும் இருப்பதாக விஞ்ஞானம் தெரிவிக்கின்றது. ஏனெனில் விஞ்ஞான ஆராய்ச்சி அதற்கு மேல் செல்லத் துணியவில்லை என்பதே உண்மை. காற்றானது எவ்வாறு கண்ணுக்குத் தெரியாதோ அவ்வாறே மூலகாரணமான இந்த பிராணனும் கண்ணுக்குத் தெரியாது. காற்று எவ்வாறு தடையின்றி எந்தத் திசையிலும் வீசுமோ அவ்வாறே பிராணனும் உடலுக்குள்ளே எல்லா அணுக்களிலும் ஊடுருவி இயங்கக் கூடியது.

(தொடரும்)



# சிறந்த மனிதனாக வாழ சீரிய வழிகள்

**வ ரங்கநாதன்,**
ஆளுமைத் திறன் பயிற்றுநர்

**“விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது சொல்லுதல் வல்லார்ப் பெறின்” - குறள் 648**

தான் சொல்ல வரும் செய்திகளைக் கோர்வையாகவும் கனிவாகவும் யாரால் சொல்ல முடிகிறதோ அவரது சொல்படி நடக்க உலகம் உடனே தயாராக இருக்கும் என்கிறார் தெய்வப் புலவர் திருவள்ளுவர்.

இந்தக் குறளுக்கு உதாரணமாக நமக்குத் தெரிபவர் பாரதப் பிரதமர் நரேந்திர மோடிதானே?

**அப்படிப்பட்ட கனிவான தலைவனின் குணங்களை அறியலாம். வாருங்கள்**

1. கூர்மையாகக் கேட்கிறார்கள் : யார் அவரிடம் பேச வந்தாலும் அல்லது வேறு எவர் பேசினாலும் கூர்மையாகக் கவனித்துக் கேட்கிறார்கள். பேச வருபவரைப் பற்றி மனக் கணக்கு பண்ணுவதோ, அல்லது முன்முடிவுக்கு வருவதோ இல்லை. இந்த குணம் தலைவன் மீதான நம்பகத்தனையை அதிகரிக்கிறது.

2. மற்றவர்களை மனிதனாக மதிக்கிறார் : தன் குழுவில் உள்ளவர்களையோ மற்றவர்களையோ தன்னைவிடக் குறைவு எனக் கருதாமல் மனிதனாக மதிக்கிறார் அவர்களின் உணர்வைப் புரிந்து கொள்கிறார்.

3. பரந்த மனம் உடையவர்: வெற்றி கிடைத்தால் அதற்கான காரணம் தன் குழுவினரின் பங்களிப்பு என்று வெற்றியை பரந்த மனதோடு பகிர்பவர். குழு உறுப்பினர்களின் பங்களிப்பை உரிய நேரத்தில் அங்கீகரிக்கிறார். பிறரிடம் பகிரவும் செய்கிறார். அதே சமயம் தோல்வி ஏற்பட்டால் குழுவைக் குறை கூறாமல் தானே பொறுப்பேற்கிறார்.

உதாரணமாக சந்திரயான் 2 தோல்வியுற்ற போது பிரதமர் உடனேயே குழுவினருடன் சேர்ந்து ஆறுதல் வார்த்தை சொல்லி தேற்றினார்.

2021 டோக்கியோ ஒலிம்பிக் அரை இறுதியில் இந்திய ஹாக்கி அணி பெண்கள் தோல்வியடைந்தபோது, பிரதமர் நரேந்திர மோடி தொலைபேசியில் தொடர்புகொண்டு ஆறுதல் கூறினார். “தோல்விகள் வாழ்க்கையின் ஒரு பகுதி, உங்கள் முயற்சி கோடிக்கணக்கான இந்தியர்களை ஊக்குவித்துள்ளது, கவலைப்படாதீர்கள். நீங்கள் அழுவதை நிறுத்துங்கள்” என்று கூறி அவர்களை ஊக்கப்படுத்தினார்.



4. பாதுகாப்பான பணி சூழலை உருவாக்குகிறார்கள் : எந்த முயற்சியும் திட்டமிட்டபடியே முன் செல்லாது. நிறை குறைகள் இருக்கத்தான் செய்யும். அப்போது குழுவினரைப் புரிந்து கொண்டு தவறு நேர்ந்தபோது “நாம் பெறும் பாடம் என்ன?” என்று கேட்பார். எவரையும் குற்ற உணர்வுக்குள் தள்ள மாட்டார்.

5. தெளிவான வரையறை வகுப்பார் : கனிவாக இருந்தாலும் ஒழுக்கக் குறைவோ, அடக்கமின்மையோ, துரோகமோ செய்தால் கண்டிக்கத் தவறாதவர். அதே போல இலக்கை அடைய வேண்டும் என்பதில் சமரசம் செய்ய மாட்டார்.

6. உங்களை உயர்த்த வழி காண்பார் : குழுவில் உள்ளவர்களின் திறமையை அறிந்து அவர்களின் சிறப்பு வெளிப்படுபடியாக கூடிதல் பணியும் பொறுப்பும் கொடுத்து முன்னேற்றம் அடைய வழி வகுப்பார்.

7. தவறுக்கு பொறுப்பு ஏற்கிறார் ; கொஞ்சம் கூட தயங்காமல் தவறுகளுக்கு பொறுப்பு எடுத்துக் கொள்கிறார். எனது தவறுதான். மன்னித்துக் கொள்ளுங்கள்” என்று சொல்லத் தயங்குவதில்லை. குழுவினரால் ஏற்பட்ட தவறாக இருந்தாலும் தானே பொறுப்பு என்று சொல்லத் தயங்குவதில்லை

8. இணக்கமான சூழலை தருகிறார் : பணி செய்யும் இடத்திலோ மற்ற எங்கு என்றாலும் அவரவர் தமது தனித் திறமைகளை வெளிப்படுத்த வகை செய்கிறார்.. புதிய வழிகளில் முயற்சி செய்வதை ஊக்குவிப்பார். வெளிப்படையான பணி சூழலைத் தருகிறார்

# ஆர்.எஸ்.எஸ். 100
# இந்த நாடு ஹிந்து நாடு (பகுதி 16)

இராம . வெங்கடாத்ரி

**வேற்றுமையில் ஒற்றுமை ஹிந்துதர்ம சாதனை**

நூற்றாண்டு விழா காணும் ஆர்.எஸ்.எஸ்.-ன் அடிப்படை சித்தாந்தம் இந்த நாடு ஒரு ஹிந்து ராஷ்ட்ரம். இந்த நாடு ஹிந்து நாடு என்பதன் பொருள் இமயம் முதல் குமரி வரை இந்த நாடு கலாச்சார அடிப்படையில், ஆன்மிக மரபுகளால் பன்னெடுங்காலமாக ஒன்றாகப் பிணைக்கப்பட்டுள்ளது என்பதையே இந்த நாடு ஹிந்து நாடு என்று கூறுகிறோம்.

ஆர்.எஸ்.எஸ் இயக்கத்தோடு தொடர்பு இல்லாத மற்ற சிந்தனையாளர்களும் இந்த நாடு ஹிந்து நாடு என்பதை ஒப்புக் கொள்கின்றனர்.

**Von Pochhammer என்ற ஜெர்மானியரின் பார்வையில்**

ஜெர்மானிய வரலாற்றாசிரியரும் தூதருமான வான் போக்ஹாம்மர், தனது 'இந்தியாவின் தேசத்திற்கான பாதை' (India's Road to Nationhood) என்ற நூலில், **"தற்போதைய மதச்சார்பற்ற இந்திய அரசு, பண்டைய இந்தியப் பண்பாட்டின் அடித்தளத்தில் நிலை கொண்டுள்ளது. இந்தப் பண்பாடே இந்திய நாட்டினரை ஒருங்கிணைக்கிறது"** என்று ஒப்புக்கொள்கிறார்.

ஐரோப்பாவில் ஒரே ஒரு மதம் இருந்தாலும், அது இரண்டு உலகப் போர்களைக் கண்டுள்ளது. சனாதன தர்மம், 'வேற்றுமையில் ஒற்றுமை' என்ற உலகளாவிய தத்துவத்தை நம்புகிறது. பல்வேறுபட்ட நம்பிக்கைகள், கொள்கைகள், மொழிகள் மற்றும் பழக்கவழக்கங்களைக் கொண்ட இந்தியா போன்ற ஒரு பெரிய நாட்டை ஒன்றாக இணைக்கக்கூடிய ஒரே பிணைப்பு இதுதான்.

இந்த ஒற்றுமையும் உணர்வுப்பூர்வமான ஒருங்கிணைப்பும், பல நூற்றாண்டுகளாக இந்தியாவில் பிறந்த மாபெரும் முனிவர்கள் மற்றும் ஞானிகளிடமிருந்து நாம் பெற்ற ஒரு புகழ்பெற்ற பாரம்பரியம் ஆகும். இந்து மதத்தின் காரணமாகவே இந்தியாவில் "வேற்றுமையில் ஒற்றுமை" தழைத்தோங்க முடிந்தது.

**Frank Moraes என்ற பத்திரிக்கையாளரின் பார்வை**

டைம்ஸ் ஆஃப் இந்தியா மற்றும் இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகைகளின் முன்னாள் ஆசிரியரான ஃபிராங்க் மொரேஸ், **"இந்தியாவை ஒரு தனித்துவமான நாடாக நிலைநிறுத்தியது எது?"** என்ற கேள்வியை ஒருமுறை எழுப்பி, அதற்கு அவரே பதிலளித்தார்: **"வடக்கையும் தெற்கையும், கிழக்கையும் மேற்கையும் பிணைக்கும் ஒரே இழையாகிய ஹிந்து மதமே உள்ளது. ஹிந்து மனப்பான்மை என்று விவரிக்கக்கூடிய ஒன்று, நமது நாட்டின் பெரும்பகுதியில் பரவலாக நிலவுகிறது."**

**Ramsay Macdonald**

இங்கிலாந்தின் ஒருகாலப் பிரதமரான ராம்சே மெக்டொனால்ட், இந்தக் கருத்தை பின்வரும் வார்த்தைகளில் ஒப்புக்கொள்கிறார்: **"இந்தியாவின் பரந்த தன்மை அதன் ஒருமைப்பாட்டை மறைப்பதில்லை, அதன் சமூகம் அதன் ஒற்றுமையைப் பார்வையில் இருந்து மறைப்பதில்லை."**

**டாக்டர் ராதாகிருஷ்ணன்**

டாக்டர் ராதாகிருஷ்ணனின் கூற்றுப்படி, **"ஹிந்து" என்ற சொல்லுக்கு முதலில் ஒரு பிராந்திய அடையாளமே இருந்தது. அது நன்கு வரையறுக்கப்பட்ட ஒரு புவியியல் பகுதியில் வசிப்பதைக் குறித்தது. காட்டுவாசிகள், அரை நாகரிக மக்கள், பண்பட்டவர்கள் மற்றும் வேதகால ஆரியர்கள் என அனைவரும் ஹிந்துக்களே, ஏனெனில் அவர்கள் அனைவரும் ஒரே தாயின் பிள்ளைகள்."**

**மாக்ஸ் முல்லர்**

உலகில் எங்கு வாழ்ந்தாலும், இந்தியாவில் தோன்றிய எந்தவொரு மதத்தையும் பின்பற்றுபவரே இந்து ஆவார். இந்திய சிந்தனையின் பொதுவான சாராம்சம் இந்து சிந்தனையின் சாராம்சத்துடன் ஒத்திருக்கிறது. மாக்ஸ் முல்லர் இந்த ஒத்த தன்மையை பின்வரும் வார்த்தைகளில் விவரித்துள்ளார்: **"ஹிந்து மதத்தின் ஆறு பிரிவுகளுக்குப் பின்னால், இந்தியாவின் தேசிய தத்துவ சிந்தனை என்று அழைக்கப்படக்கூடிய ஒரு பொதுவான அடித்தளம் உள்ளது."**

**அமெரிக்க சிந்தனையாளர் Rev. TJ Sunderland, American thinker and missionary**

அமெரிக்க சிந்தனையாளரும் மதபோதகருமான ரெவரெண்ட் டி.ஜே. சண்டர்லேண்ட், தனது 'இந்தியா இன் பாண்டேஜ்' (India in Bondage) என்ற புத்தகத்தில் இவ்வாறு கூறுகிறார்: **"உண்மை என்னவென்றால், உலகில் ஒரு உண்மையான தேசம் இருக்குமானால் - மக்களின் அறிவு மற்றும் மன இழைகளின் ஒரு பகுதியாக, அவர்களின் உயிர் இரத்தத்தின் ஒரு அங்கமாக மாறிய அளவுக்கு ஆழமான ஒற்றுமையைக் கொண்ட ஒரு தேசம் இருக்குமானால் - அந்த தேசம்**

**இந்தியா தான்." இந்தியாவின் ஒற்றுமையுடன் ஒப்பிடுகையில், ஒவ்வொரு அமெரிக்க மற்றும் ஐரோப்பிய தேசத்தின் ஒற்றுமையும் மேலோட்டமானதும் நிலையற்றதும் ஆகும்.''**

**சுவாமி விவேகானந்தர்**

**"ஹிந்துக்களின் மனதில் உள்ள ஒருமைப்பாடு குறித்த உணர்வு இந்திய தேசத்தைப் போலவே பழமையானது. இந்த ஒருமைப்பாட்டு உணர்வு அவர்களின் எண்ணங்களில் மறைந்திருக்கிறது''** என சுவாமி விவேகானந்தர் கூறினார்.

**Dara Shikoh**

ஔரங்கசீப்பின் மூத்த சகோதரரும் இந்து மதத்தைச் சாராதவருமான தாரா ஷிகோ இவ்வாறு கூறினார், **"ஹிந்து மதத்தைப் புரிந்து கொள்ளாமல் இந்தியாவைப் புரிந்து கொள்ள முடியாது, ஏனெனில் இரண்டும் ஒன்றே.''**

**ஜவஹர்லால் நேரு**

**"இந்தியாவில் நடைபெற்ற மாபெரும் அரசியல் மற்றும் மக்கள் இயக்கங்களுக்குப் பின்னணியில் ஓர் ஆன்மீக அடிப்படை இருந்திருக்கிறது என்பதைக் குறிப்பிடுவது முக்கியமானது.''** (டாக்டர் கரண் சிங்கின் 'Prophet of Indian Nationalism' எனும் நூலுக்கான முன்னுரையில் ஜவஹர்லால் நேரு குறிப்பிட்டது.

இப்படி எல்லா சிந்தனையாளர்களும் வெள்ளைக்காரன் வருவதற்கு முன்பாகவே ஒரு நெடிய பாரம்பரியத்தின் அடிப்படையில் இந்த நாடு, "ஹிந்து நாடாக'' உருவாக்கப்பட்டிருப்பதை ஒப்புக்கொள்கின்றனர்.

**ஹிந்து ராஷ்ட்ரம் என்பதன் விசாலமான பார்வை**

ஹிந்து ராஷ்ட்ரம் என்ற கருத்து உலகிற்கே நன்மை பயப்பது. எல்லார்க்கும் எல்லாமும் என்பதே ஹிந்துத்வ கருத்தின் ஆன்மாவாக இருப்பது **"வசுதைவ குடும்பகம்''**, அதாவது உலகமே ஒரு குடும்பம் என்று கிமு மூன்றாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட பஞ்சதந்திரம் மற்றும் ஹிதோபதேசம் நூல்கள் கூறுகின்றன. இதையே கணியன் பூங்குன்றனார் **"யாதும் ஊரே யாவரும் கேளிர்''** என்கிறார்.

எல்லார்க்கும் எல்லா நன்மைகளும் கிடைக்க வேண்டும் என்று கதோபனிஷத் கூறுகிறது

இதே கருத்தை **"எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்று அறியேன் பராபரமே''** என்கிறார் தாயுமானவர்.

**லோகா சமஸ்தா சுகினோ பவந்து**, - உலகம் முழுவதும் சுகமாக இருக்கட்டும், **சர்வே ஜனா சுகினோ பவந்து** - எல்லா மக்களும் சுகமாக வாழட்டும் என்று ஹிந்துக்கள் தினசரி பாடும் மந்திரங்கள் ஹிந்துத் தன்மையின் விசாலமான பரந்துபட்ட பார்வைக்குச் சான்று.

**மனிதனுக்கு அப்பால்**

மனிதர்களைத் தாண்டி மற்ற உயிரினங்கள், தாவரங்கள் அனைத்தின் நலனிற்காக பிரார்த்தனை செய்வது ஹிந்துத் தன்மை. மனிதனுக்காக மட்டுமே இந்த உலகமும் அதில் உள்ள மற்ற உயிரினங்களும் படைக்கப்பட்டதாக இஸ்லாமும், கிறிஸ்தவமும் கூறும்போது, எல்லாவற்றிற்கும் இந்த பிரபஞ்சத்தில் சம அந்தஸ்தைக் கொடுப்பது ஹிந்துத் தன்மை மட்டுமே

Munich நகரின் Max Plank Institute ல் அணுவின் உள்ளே இருக்கும் பொருட்களை ஆய்வு செய்யும் குவாண்டம் விஞ்ஞானிகள், அவர்களது ஆய்வுக் கட்டுரைகளுக்கும், ஹிந்து வேதாந்தக் கருத்துக்களுக்கும் எந்த வித்தியாசமும் காண முடியவில்லை என்று கூறியிருக்கின்றனர். இந்த ஹிந்து கண்ணோட்டம் மட்டுமே அனைத்தையும் உள்ளடக்கியது (All Encompassing) என்பதை உலக அறிவியல் ஆய்வாளர்கள் ஆச்சரியத்துடன் ஏற்றுக்கொள்ள ஆரம்பித்துள்ளனர். Fritjof Capra எழுதிய The Tao of Physics மற்றும் அவரது இதர புத்தகங்களில் உள்ள விஞ்ஞானிகளின் ஆய்வும், ஹிந்து வேதாந்தக் கருத்துக்களும் ஒற்றைப் புள்ளியில் இணைவதை உலகமே உற்று நோக்குகிறது.

**உலகின் குரு பாரதம்**

இந்த நாடு ஹிந்து நாடு என்று உணர்வது இந்த நாட்டிற்கு மட்டுமல்ல, உலகிற்கே நன்மை பயப்பது. ஞான கங்கை முதல் அத்தியாயத்தின் இறுதியில் ஆர்.எஸ்.எஸ் - இரண்டாம் தலைவராக இருந்த திரு குருஜி கோல்வல்கர் இந்தக் கருத்தைத் தெளிவாக விளக்குகிறார்.

**முடிவுரை**

இந்த நாட்டை ஹிந்து நாடு என்று அறிவிக்காவிட்டாலும் அன்றிலிருந்து இன்று வரை இந்த நாடு ஹிந்து நாடாகத்தான் இருந்து கொண்டு இருக்கிறது. ஹிந்து நாடு என அறிவிக்க வேண்டாம், உணர வேண்டும். இந்த நாடு ஹிந்து நாடு என்று உணர ஆரம்பித்தால் நமது நாடு மட்டுமல்ல உலகமே நற்கதி அடையும்.

"இந்த நாடு ஹிந்து நாடு'' என்ற தொடர் இத்துடன் நிறைவு அடைகிறது. ஆர்.எஸ்.எஸ் பேரியக்கத்தின் இதர சிறப்புகளை அடுத்தடுத்து வரும் தொடர்களில் காண்போம்.

# இரண்டாம் பாரதியின் எழுச்சி கீதங்கள் - பகுதி 15

- ஏழுமலை




**இரண்டாவது பாரதியார்**

"மகாகவி சுப்ரமணிய பாரதியாருக்குப் பிறகு, சுதந்திர பாரதத்திலே தமிழிலே அதிகமான தேசபக்திப் பாடல்களை எழுதிய தேசியக் கவி, இரண்டாவது பாரதி என்று அழைக்கப்படுபவர் இந்து முன்னணி நிறுவனர் வீரத்துறவி இராம.கோபாலன்ஜி அவர்கள்.

**வில்லினை எடு வீரா**

அவர் எழுதிய பாடல்களிலே நரபலி கொடுத்த வீரவங்கமும் என்ற பாடல் வரிகளைப் பற்றி சென்ற தொடரில்கண்டோம். 1947ல்மதத்தின்அடிப்படையில் நாடு பிளவுபடுத்தியத்தை நினைவுறுத்தி வீர சபதம் எடுக்க வலியுத்தும் பாடல் இது. 1947ல் தேச பிரிவினை காலத்தில் படுகொலைகள் நடந்தன. ஹிந்துக்கள் திட்டமிட்டு தாக்கப்பட்டனர். கொல்லப்பட்டனர். பெண்கள் மானபங்கப்படுத்தப்பட்டனர். இதனால் வேதனையடைந்த பாடலாசிரியர் இராமகோபாலன்ஜி தனது மனக்குமுறலை இந்தபாடலில் விவரித்துள்ளார். ஹிந்துக்களின் வீர வரலாற்றையும், தியாக வரலாற்றையும் நினைவுறுத்தி, "வில்லினை எடு வீரா" என்று சமுதாயத்தைத் தயார்படுத்தும் பாடல் இது.

**கூவி அழைக்கும் வரலாறு**

இந்தப் பாடலில் வரும் முதல் வரலாற்றுச் சம்பவம், சித்தூர்க் கோட்டையில் தீக்குளித்த நல்மாதர்களின் சரித்திரம். இந்த ஜவ்ஹர் என்ற தியாக வேள்வி நடந்து முடிந்து சரியாக 41 ஆண்டுகள் கழித்து 1576-ஆம் ஆண்டு ஜூன் 18-அன்று 5 மணி நேரமே நடைபெற்ற ஹல்திகாடி போரில் "சாகும் வரை போர்" என்று சபதம் இட்டு தங்களை அர்ப்பணம் செய்து, தாய்நாட்டைக் காத்த வீரர்களின் வரலாறு, "ஹல்திகாட்டிலே போரில் மடிந்த வீரரின் ஆவிகளும்" என்ற வரிகளால் நினைவு கூறப்படுகிறது.

இந்தியாவின் ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள ஆரவல்லி மலைத்தொடரில் அமைந்துள்ள ஹல்திகாட்டி இரு புறமும் மஞ்சள் நிற பாறைகளைக் கொண்ட குறுகலான ஒரு மலைப்பாதை. இந்த ஹல்திகாட்டில் சுமார் 20,000 வீரர்களைக் கொண்ட ராணாபிரதாப்பின் படைகள் கிட்டத்தட்ட முழுவதும் அழிந்து போனாலும், 2,00,000 பேருக்கும் அதிகமான அக்பரின் படைகளை நிர்மூலமாக்கி, அவர்களை ஓட ஓட விரட்டியடித்த வீர வரலாற்றுச் சாதனை நிகழ்த்தப்பட்டது.

**ராணா பிரதாப் சிம்மன்**

முகலாயப் பேரரசர் என்று நாம் வரலாற்றில் படிக்கும் அக்பரை நிலைகுலையச் செய்த மாவீரர் மகாராணா பிரதாப். மகாராணா பிரதாப்பின் தந்தையார் மகாராணா உதய்சிங். சித்தூரைத் தலைமையிடமாகக் கொண்டு மேவாரை ஆட்சி செய்து வந்தார். மகாராணா பிரதாப் தந்தையான மகாராணா உதய்சிங்கை முகலாய அரசுக்கு அடிபணியச் சொல்லி நான்கு முறை தூதுக் குழு அனுப்பினான் அக்பர். ஆனால் உதய்சிங் அதற்கு இணங்கவில்லை. இறுதியில், கி.பி. 1567-ல் அக்பர் ஒரு பெரும் படையுடன் சித்தூர்க் கோட்டையைக் கைப்பற்றினான்.

சித்தூர்க் கோட்டையை வென்ற வெறியில், அக்பர் சித்தூரிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் 30,000 அப்பாவி இந்துக்களைப் படுகொலை செய்தான். பல ராஜபுத்திர மன்னர்கள் அக்பரின் அடிமைகளாய் சேவகம் செய்ய ஆரம்பித்தனர். ராணா பிரதாப் சிம்மன் உடன் பிறந்த சகோதரர்கள் ஜக்பல், சக்தி சிங், சரவ் சிங் அனைவரும் அணி மாறி அக்பரிடம் சேர்ந்து விட்டனர்.

1567-ல் சித்தூரை விட்டு வெளியேறிய பிரதாப் சிங், பின்னர் மேவாரின் மகாராணாவாக முடிசூட்டிக் கொண்டார். சித்தூர் அக்பரின் ஆட்சியின் கீழ் இருந்தது, அக்பரின் மேலாதிக்கத்தை ஏற்றுக்கொள்ளுமாறு அக்பர் ஆறு முறை தூதுக் குழுக்களை மேவாரிற்கு அனுப்பினான்; ஆனால் ராணா பிரதாப் அவற்றை நிராகரித்தார். இத்தகைய சூழ்நிலையில் மகாராணா பிரதாப் தனது தளபதிகள் முன்னிலையில் காளி தேவியின் முன்னிலையில் சபதம் மேற்கொண்டார்: "சித்தூர் விடுவிக்கப்படும் வரை, நான் வெள்ளித் தட்டுகளில் உணவு உண்ணமாட்டேன், இலையில் உணவு உண்பேன். படுக்கையில் உறங்கமாட்டேன், வெறும் தரையில் உறங்குவேன். அரண்மனையில் தங்கமாட்டேன்; மாறாக குடிசையில் தங்குவேன்." தங்கள் மன்னரின் சபதத்தால் உத்வேகம் பெற்ற அனைத்துத் தலைவர்களும், தங்கள் கடைசி சொட்டு இரத்தம் இருக்கும் வரை சித்தூரை விடுவிக்க மகாராணா பிரதாப்பிற்கு உதவுவதாகவும், முகலாயர்களுக்கு எதிரான போரில் அவருடன் இணைவதாகவும், தங்கள் இலக்கிலிருந்து பின்வாங்கப் போவதில்லை என்றும் உறுதியளித்தனர்.

**ஹல்திகாட்டிப் போர்**

மகாராணா பிரதாப்பின் கருவூலம் காலியாக இருந்தது; ஆனால் அக்பரோ மிகப்பெரிய ராணுவம், ஏராளமான செல்வம் மற்றும் பல வளங்களைக்

கொண்டிருந்தார். இருப்பினும், மகாராணா பிரதாப் ஒருபோதும் மனச்சோர்வு அடையவில்லை. அவர் தனது தலைநகரை அணுகுவதற்கு மிகவும் கடினமான இடமான ஆரவல்லி மலைத்தொடரில் உள்ள கும்பல்கடிற்கு மாற்றினார்.

ராணா பிரதாப்பை உயிருடனோ அல்லது இறந்த நிலையிலோ பிடித்து வருமாறு மான்சிங் என்ற தளபதிக்கு உத்தரவிட்டான் அக்பர். மலைப்பாங்கான நிலப்பரப்பில் போரிடுவதில் மேவார் படைகளுக்கு நல்ல அனுபவம் இருந்ததால் அக்பரின் பிரம்மாண்டமான படையை எதிர்கொள்ள ஆரவல்லி மலைப்பகுதிகளில் இருந்த ஹல்திகாட்டி கணவாயை மேவார் படைகள் அடைந்தன. ராணா பிரதாப்பின் சிறுபடைகளை எதிர்கொள்ள இயலாமல் முகலாயப் படைகள் சிதறி ஓடின. பனாஸ் நதிக்கரையில் நடைபெற்ற போரின்போது பெய்த பலத்த மழையால் போர்க்களம் முழுவதும் வெள்ளத்தில் மூழ்கியது, லட்சக்கணக்கான வீரர்களின் குருதி கலந்து நீர் இரத்தச் சிவப்பாக மாறியது. இந்நிகழ்வின் காரணமாகவே அப்பகுதி இன்றும் ‘ரக்த தாலாய்’ (இரத்தக் குளம்) என்று அழைக்கப்பட்டு வருகிறது.

இந்தப் போரில் கடுமையாக காயமுற்று மயங்கி குதிரை மீது சரிந்தார் ராணா பிரதாப். மயங்கிய நிலையில் இருந்த ராணா பிரதாப்பை கொல்ல வந்த எதிரிகளிடம் இருந்து அவரது குதிரை “சேதக்” அவரை வெகு வேகமாகச் செயல்பட்டுக் காப்பாற்றியது. மின்னல் வேகத்தில் போர்க்களத்தில் இருந்து வெளியேறிய “சேதக்” குதிரை, 22 அடி முதல் 26 அடி தூரம் வரை அகலம் இருந்த ஒரு ஆற்றைத் தாவி ஆற்றின் மறு கரையில் ராணா பிரதாப்பை பத்திரமாகச் சேர்த்த பின் உயிர் துறந்தது.

‘சாகா’ (இறுதிவரை போராடி உயிர் துறத்தல்) எனும் வீர சபதத்துடன் வெறி கொண்ட வேங்கையாய் சுழன்ற மகாராணாவின் படைகளை எதிர்கொள்ள முடியாமல், ஹல்திகாட்டி மலைப்பாதையை விட்டு 14 மைல்கள் வரை பின்வாங்கிய முகலாயர் படை கோகுண்டா என்ற இடத்தை அடைந்தது. “சுமுகலாயப் படை கோகுண்டாவை அடைந்த பிறகும், ராணா திடீரெனத் தாக்கக்கூடும் என்ற அச்சம் காரணமாக குதிரை தாண்டிக்குதிக்க முடியாத அளவுக்கு உயரமான சுவர்களை எழுப்பினர்; அகழிகளை வெட்டினர்.” போர்க்களத்தில் உடனிருந்த பதௌனி (Badauni) எழுதிய போர்க் குறிப்புகளில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது. ராணா பிரதாப்பை பிடிக்க முடியாமல் கோகுண்டாவில் 4 மாதங்கள் முகாம் இட்டிருந்த முகலாயர் படைகள் மீண்டும் பாசறை திரும்பின. இதனால் கோகுண்டா மீண்டும் மேவாரின் கட்டுப்பாட்டிற்குள் வந்தது.

**ஹல்திகாட்டி போருக்குப் பின்**

ஹல்திகாட்டிலே பெற்ற அவமானத்தைத் தாங்கிக் கொள்ள முடியாத நிலையில், அக்பரே நேரில் வந்து ராணா பிரதாப்பைத் தாக்கினான். ஆனால் ஆறு மாத காலப் போருக்குப் பிறகும் பிரதாப்பைத் தோற்கடிக்க முடியாமல் அக்பர் டெல்லிக்குத் திரும்பினான். 1584-ல் மீண்டும் ஒரு பெரும் படையை மேவாருக்கு அனுப்பினான் அக்பர். ஆனால் இரண்டு ஆண்டுகள் முயன்றும், அந்தத் தளபதியாலும் மகாராணா பிரதாப்பைப் பிடிக்க முடியவில்லை.

இந்தப் போருக்குப் பிறகு, ராணா பிரதாப்பும் அவரது குடும்பத்தினரும் காடுகளில் வாழ்ந்தனர். ஆனால் அப்போதும் அவர் மனம் தளரவில்லை. தனது நண்பர் பாமா ஷா மற்றும் பில் மலைவாசிகளின் உதவியுடன் மீண்டும் ஒரு படையை உருவாக்கினார். தனது ராஜ்யத்தை மீண்டும் கைப்பற்ற மகாராணா பிரதாப் பதினைந்து ஆண்டுகள் இடைவிடாது போராடினார். 1584-ஆம் ஆண்டின் இறுதிக்குள், அவர் ராஜஸ்தானின் பெரும்பாலான பகுதிகளை மீட்டார். ஆனால், மேவாரின் தலைநகரான சித்தூரை மட்டும் அவரால் மீண்டும் கைப்பற்ற முடியவில்லை. உதய்பூருக்குத் தெற்கே மலைப்பகுதிகளுக்குள் அவர் நிறுவிய தலைநகரான சாவந்த் (Chawand) என்னும் இடத்தில் 1597-இல், தனது 56வது வயதில் காலமானார். ராணா பிரதாப் மறைவுக்குப் பின் அவருடைய மகன் அமர் சிங் மொகலாயப் படைகளை 13 முறை வென்று துரத்தியடித்தார்.

மகாராணாவைத் தோற்கடிக்க அக்பர் பல வழிகளில் முயன்ற போதிலும், அவர் இறுதிவரை வெல்ல முடியாதவராகவே திகழ்ந்தார்.

**இன்று சிந்தித்த பாடல் வரிகள்**

**சித்தூர் கோட்டையில் தீக்குளித்த நல்மாதரின் ஆவிகளும்**

**ஹல்திகாட்டிலே போரில் மடிந்த வீரரின் ஆவிகளும்**

(தொடரும்)

**இசை வடிவம்**

**பாடலின் இசை வடிவத்திற்கு கீழே உள்ள QRCODE ஐ SCAN செய்யவும்.**

# வெளிச்சம் படாத வேர்கள்

## மறக்கப்பட்ட மாவீரன் ஜெகந்நாத அய்யர்

யா.சு. கண்ணன்

மறக்கப்பட்ட மாவீரன் ஜெகந்நாத அய்யர் என்பவர் 18-ஆம் நூற்றாண்டின் இறுதியில் தமிழ் மண்ணில் தோன்றி, பிரிட்டிஷ் கிழக்கிந்திய நிறுவனத்தின் ஏதேச்சதிகார ஆட்சியைத் தீவிரமாக எதிர்த்துப் போராடிய ஒரு வரலாற்று நாயகர் ஆவார். 1801-ஆம் ஆண்டு நடைபெற்ற புகழ்பெற்ற தென்னகக் கிளர்ச்சியில் (South Indian Rebellion) மிக முக்கியப் பங்காற்றிய இவர், முறையான அங்கீகாரமும் வரலாற்றுப் பதிவுகளும் கிடைக்கப் பெறாமல் போன தியாகிகளில் ஒருவர். 1,000 கொடூரமான சாட்டையடிகளைத் தாங்கிய பிறகும் ஆங்கிலேயர்களிடம் மண்டியிடாமல், இறுதிக்காலம் வரை தன் தாய்நாட்டை மீட்கப் போராடிய இவரது விரிவான வரலாறு கீழே விவரிக்கப்பட்டுள்ளது.

**இளமை மற்றும் ராமநாதபுரம் அரசின் நிர்வாகப் பொறுப்பு**

18-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில், ராமநாதபுரம் சமஸ்தானம் ஆங்கிலேயர்களின் நேரடிக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படுவதற்கு முன்னதாக, ஜெகந்நாத அய்யர் ராமநாதபுரம் மன்னரான முத்துராமலிங்க விஜய ரகுநாத சேதுபதியின் மிக நெருங்கிய மற்றும் நம்பிக்கைக்குரிய ஆப்த நண்பராக விளங்கினார்.

மன்னர் இவருடைய நிர்வாகத் திறமையைக் கண்டு, சேதுபதி அரசின் மிக உயர்ந்த பதவியான "ஆமில்தார்" (Amaldar - முதன்மை நிர்வாக அதிகாரி) என்ற பதவியை வழங்கினார். வரி வசூல் செய்தல், மக்கள் நலத் திட்டங்களைக் கண்காணித்தல் மற்றும் மன்னரின் ஆலோசனைக் குழுவில் முதன்மை வகித்தல் ஆகியவை இவரது பொறுப்புகளாக இருந்தன. இப்பதவியில் இருந்ததால், ராமநாதபுரத்தின் கிராமப்புற மக்களுடன் இவருக்கு நெருங்கிய தொடர்பு இருந்தது.

**கிளர்ச்சிக்கான பின்னணி: மன்னரின் கைது**

ஆங்கிலேய கிழக்கிந்திய நிறுவனம், வரி வசூலிக்கும் உரிமையைக் கையில் எடுத்துக் கொண்டு, பாளையக்காரர்களையும் மன்னர்களையும் தங்களின் அடிமைகளாக நடத்தத் தொடங்கியது. இதற்கு ராமநாதபுரம் மன்னர் முத்துராமலிங்க சேதுபதி கடும் எதிர்ப்பு தெரிவித்தார். இதனால் கோபமடைந்த ஆங்கிலேயர்கள், 1795-இல் மன்னரை வஞ்சகமாகக் கைது செய்து சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் சிறை வைத்தனர்.

> **மக்கள் பசியால் வாடிய போது, ஜெகந்நாத அய்யரும் அவரது தோழர்களும் பிரிட்டிஷ் சேமிப்புக் கிடங்குகள் மீது அதிரடிப் படையெடுப்பை நிகழ்த்தி கொள்ளையடிக்கப்பட்ட நெல்லை மீட்டு மக்களுக்குப் பகிர்ந்தளித்ததோடு, பிரிட்டிஷ் படைகளுக்குப் பெரும் சேதத்தை ஏற்படுத்தினர்.**

மன்னரின் கைது, ஜெகந்நாத அய்யரை ஆங்கிலேயர்களுக்கு எதிராகத் தீவிரமாகச் செயல்படத் தூண்டியது. நாட்டின் இறையாண்மையையும் தன் நண்பனின் விடுதலையையும் நோக்கமாகக் கொண்டு, ஆங்கிலேயர்களைத் தமிழ் மண்ணிலிருந்து விரட்ட அவர் சபதமேற்றார்.

**மருது சகோதரர்களுடன் கூட்டணி மற்றும் கிளர்ச்சிகள்**

மன்னர் இல்லாத சூழ்நிலையில், ராமநாதபுரத்தின் புரட்சிப் படைகளை ஜெகந்நாத அய்யர் ஒருங்கிணைத்தார். அப்பகுதியில் தீவிரமாகச் செயல்பட்டு வந்த இதர தேசப்பற்றாளர்களான கருப்பத்தேவர், மயிலப்பன், குமாரத்தேவர், கண்ணத்தேவர் ஆகியோருடன் இணைந்து ஆங்கிலேயர்களுக்கு எதிராக ஒரு வலுவான கூட்டணியை உருவாக்கினார். இவர்களில் மயிலப்பன் சேர்வைகாரர் ஆப்பனூர் நாட்டைச் சேர்ந்த சித்திரங்குடி கிராமத்தைச் சேர்ந்தவர். இவர் சேதுபதி மன்னரின் படைப்பிரிவுத் தலைவராக இருந்தவர். இவர் தனது தலைமையில் முதுகுளத்தூர் ஆங்கிலேய நீதிமன்றத்தைத் தாக்கினார். கமுதி மற்றும் அபிராமத்தில் இருந்த வெள்ளையர் கிடங்குகளைத் தகர்த்து நெற்களஞ்சியங்களை மக்களுக்கு மீட்டுக் கொடுத்தார். இவரது அதிரடிப் போராட்டங்களால் முதுகுளத்தூர், கமுதிச் சீமைகள் சுமார் 42 நாட்கள் ஆங்கிலேயர் பிடியிலிருந்து விடுபட்டு சுதந்திரமாக இயங்கின.

அதே காலகட்டத்தில், சிவகங்கைச் சீமையின் சிங்கம் என்று அழைக்கப்பட்ட மருது பாண்டிய சகோதரர்கள் (பெரிய மருது மற்றும் சின்ன மருது) ஆங்கிலேயர்களுக்கு எதிராகப் பெரும் கிளர்ச்சியைத் திட்டமிட்டுக் கொண்டிருந்தனர். ஜெகந்நாத அய்யர், மருது சகோதரர்களின் போர்த்திறனையும் அவர்களது நோக்கத்தையும் உணர்ந்து அவர்களோடு கைகோர்த்தார். மருது சகோதரர்கள் வெளியிட்ட புகழ்பெற்ற "திருச்சி ராப்பள்ளி பிரகடனத்திற்கு" ஆதரவாக ராமநாதபுரம்

பகுதியில் மக்களைத் திரட்டும் பணியை இவர் முன்னெடுத்தார்.

ஜெகந்நாத அய்யரின் வீரத்திற்கு மிக முக்கியமான சான்றாக விளங்குவது ராஜசிங்கமங்கலம் மற்றும் அனுமந்தக்குடி பகுதிகளில் நடைபெற்றப் போராகும். பிரிட்டிஷ் படைகள் உள்ளூர் விவசாயிகளிடம் இருந்து லட்சக்கணக்கான மூட்டை நெல்லைக் கொள்ளையடித்துச் சேமித்து வைத்திருந்தன. மக்கள் பசியால் வாடிய போது, ஜெகந்நாத அய்யரும் அவரது தோழர்களும் பிரிட்டிஷ் சேமிப்புக் கிடங்குகள் மீது அதிரடிப் படையெடுப்பை நிகழ்த்தி கொள்ளையடிக்கப்பட்ட நெல்லை மீட்டு மக்களுக்குப் பகிர்ந்தளித்ததோடு, பிரிட்டிஷ் படைகளுக்குப் பெரும் சேதத்தை ஏற்படுத்தினர். அப்போதைய பிரிட்டிஷ் கலெக்டரான லுசிங்டன் என்பவரை ஜெகந்நாத அய்யரின் படை நேரடியாகக் குறிவைத்துத் தாக்கியது. இருப்பினும், அவர் நூலிழையில் உயிர் தப்பினார். இந்தச் சம்பவம் கிழக்கிந்திய நிறுவனத்திற்கு ஜெகந்நாத அய்யர் மீது கடுமையான கோபத்தை ஏற்படுத்தியது.

ஆங்கிலேயர்களால் ஜெகந்நாத அய்யரை நேருக்கு நேர் போரிட்டுப் பிடிக்க முடியவில்லை. இதனால், அவர்கள் வழக்கம்போல தங்களின் 'பிரித்தாளும் சூழ்ச்சி' மற்றும் துரோக வழிகளைக் கையாண்டனர். சுமார் மூன்று மாதங்களுக்கும் மேலாகத் தீவிரமாகத் தேடப்பட்டு வந்த ஜெகந்நாத அய்யர், இறுதியாக வன்னியத்தேவன் என்ற உள்ளூர் துரோகியின் காட்டிக்கொடுத்தலால் ஆங்கிலேயர்களிடம் சிக்கினார். இவருடன் இணைந்துப் போராடிய கண்ணத்தேவர், குமரன் ஆகியோர் பிடிபட்ட உடனே சம்பவ இடத்திலேயே கொடூரமாகக் கொலை செய்யப்பட்டனர். மயிலப்பன் சேர்வைகாரர் 1802 ஆகஸ்ட் 6 அன்று தூக்கிலிடப்பட்டார்

ஆனால், கிளர்ச்சியாளர்களுக்கு ஒரு பாடம் புகட்ட வேண்டும் என்ற நோக்கில் ஜெகந்நாத அய்யருக்குப் பிரிட்டிஷ் அரசு கடுமையான தண்டனையைத் திட்டமிட்டது.

கைது செய்யப்பட்ட ஜெகந்நாத அய்யர் ராமநாதபுரம் கோட்டைக்குக் கொண்டு செல்லப்பட்டு விசாரிக்கப்பட்டார். ஆங்கிலேய அதிகாரி இவருக்கு 1,000 சாட்டையடிகள் அடிக்கும் கொடூரமான தீர்ப்பை வழங்கினார்.

ஒரு மனிதனின் உடல் தாங்க முடியாத அளவுக்கு, சதை கிழிந்து இரத்தம் வழிய வழிய சாட்டையடிகள் கொடுக்கப்பட்டன. ஆனால், ஒவ்வொரு அடி விழும்போதும் நாட்டின் சுதந்திர முழக்கங்களை எழுப்பினாரே தவிர, ஆங்கிலேயர்களிடம் மன்னிப்புக் கேட்க மறுத்துவிட்டார். இந்தத் தண்டனைக்குப் பிறகு, அவர் உடல்நிலை மிகவும்

**1,000 சாட்டையடிகளைத் தாங்கியும், சொத்து சுகங்களை இழந்தும், நாட்டின் விடுதலைக்காகப் போராடிய மாவீரன் ஜெகந்நாத அய்யரின் வரலாறு, தமிழ் சமூகம் என்றும் மறக்கக்கூடாத ஒரு வீரக் காவியமாகும்.**

மோசமடைந்த நிலையிலும், புதுக்கோட்டைக்கு அருகில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க திருமயம் மலைக்கோட்டையில் பலத்த பாதுகாப்புடன் சிறை வைக்கப்பட்டார்.

1801-ஆம் ஆண்டின் இறுதியில் தென்னகக் கிளர்ச்சி முழுமையாக ஒடுக்கப்பட்ட பிறகு, மருது சகோதரர்கள் மற்றும் கட்டபொம்மனின் தம்பிகள் தூக்கிலிடப்பட்டனர். எஞ்சிய தலைவர்களை மீண்டும் தமிழ் மண்ணில் வைத்தால் புரட்சி வெடிக்கும் என அஞ்சிய பிரிட்டிஷ் அரசு, 72 முக்கிய வீரர்களை நாடுகடத்த உத்தரவிட்டது.

1802-ஆம் ஆண்டின் தொடக்கத்தில், ஜெகந்நாத அய்யர், திண்டுக்கல் கிளர்ச்சியாளர் ஷேக் உசேன், சின்ன மருதுவின் மகன் துரைச்சாமி உள்ளிட்ட 72 வீரர்கள் தூத்துக்குடி துறைமுகத்திற்குக் கொண்டு வரப்பட்டனர். அங்கிருந்து 'பிரின்ஸ் ஆஃப் வேல்ஸ்' (தற்போதைய பினாங்கு தீவு, மலேசியா) நோக்கிச் செல்லும் கப்பலில் அவர்கள் ஏற்றப்பட்டனர். இந்தச் சிறைக் கைதிகள் அனைவரும் இரும்புச் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டிருந்தனர். குறிப்பாக, ஜெகந்நாத அய்யரும் ஷேக் உசேனும் ஒரே சங்கிலியால் பிணைக்கப்பட்டிருந்ததாக வரலாற்று ஆவணங்கள் கூறுகின்றன. உணவும் தண்ணீரும் இன்றி 74 நாட்கள் தொடர்ச்சியாக நீடித்த இந்த மோசமான கடல் பயணத்தின் போது மூன்று வீரர்கள் கப்பலிலேயே உயிரிழந்தனர்.

பினாங்கு தீவை அடைந்த ஜெகந்நாத அய்யர், அங்கிருந்த அடர்ந்த காடுகளை அழித்துச் சாலைகள் அமைக்கும் கொத்தடிமை வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டார். கடுமையான உடல் உழைப்பு மற்றும் முறையற்ற உணவு காரணமாக, தாய்நாட்டை மீண்டும் பார்க்கும் பாக்கியம் கிடைக்காமலேயே பினாங்கு மண்ணில் அவரது உயிர் பிரிந்தது.

ஆங்கிலேய ஆவணக் காப்பகங்களில் (Madras Records) இவரைப் பற்றிய குறிப்புகள் "மிகவும் ஆபத்தான கிளர்ச்சியாளர்" என்று குறிப்பிடப்பட்டுள்ளன. ஆயினும், சுதந்திர இந்தியாவின் வரலாற்றுப் பக்கங்களில் இவரைப் போன்ற தியாகிகளின் பெயர்கள் மறைக்கப்பட்டுவிட்டன. 1,000 சாட்டையடிகளைத் தாங்கியும், சொத்து சுகங்களை இழந்தும், நாட்டின் விடுதலைக்காகப் போராடிய மாவீரன் ஜெகந்நாத அய்யரின் வரலாறு, தமிழ் சமூகம் என்றும் மறக்கக்கூடாத ஒரு வீரக் காவியமாகும்.

மஹான்களின் தரிசனம்

# ஸர்வம் ப்ரஹ்மமயம். ஸ்ரீ ஸதாசிவ ப்ரஹ்மேந்த்ராளின் திவ்ய சரித்ரம்

- நிதீஸ்வரன்



ஸனாதன தர்மத்தின் முடிபொருளான அத்வைத வேதாந்தத்தை வெறும் ஏட்டுச் சுரைக்காயாக அன்றி, தன் ஆத்ம அநுபூதியாகவே பெற்று வாழ்ந்து காட்டிய உன்னத மஹான் நெரூர் ஸ்ரீ ஸதாசிவ ப்ரஹ்மேந்த்ர ஸ்வாமிகள். இவர் காவேரி நதி தீரத்தில் அவதாரம் செய்தார். இவருடைய இயற்பெயர் சிவராமக்ருஷ்ணன். இவரது தந்தை ஸோமனாத யோகியார் தாயார் பார்வதி தேவி. இவர், தன் பால்ய பருவத்திலேயே திருவிசைநல்லூர் என்னும் புண்ய கிராமத்தில் வீற்றிருந்த மஹாவித்வான்களிடம் முறையாக வித்யாப்யாஸம் செய்தார்.

இளமையிலேயே வேத அத்யயனத்தையும், தீவிரமான வேதாந்த விசாரத்தையும் பூர்த்தி செய்த இவர், தன் உள்ளத்தில் மூண்ட ஞானக்கனலால் உந்தப்பட்டு, யோக மார்க்கத்தையும் ஆத்ம தத்துவத்தையும் முழுமையாக அடைவதற்குரிய உத்தம குருவை நாடினார்.

ஞானத்திலும் யோகத்திலும் சிறந்த விளங்கிய காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ பரமசிவேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகள் தான் தமக்கு ஏற்ற ஸத்குரு என்று திடமாக நம்பி, அவரிடத்தில் ஸன்யாஸம் பெற்று ஸ்ரீ ஸதாசிவேந்த்ர ஸரஸ்வதி என்ற திரு நாமத்துடன் பல ஆண்டுகள் மிகக் கடுமையான நியமங்களுடன் வேதாந்த சாஸ்த்ரப் பயிற்சிகளை அப்யாஸம் செய்தார்.

ஸன்யாஸம் பெறுவதற்கு முன் இவர் படித்த சாஸ்த்ரங்களின் வாஸனையால் எல்லோரிடத்திலும் சாஸ்த்ரங்களில் தர்க்கம் செய்வதில் ஈடுபாடு இருந்தது. அதனால் இவர் அங்குள்ள ஸகல பண்டிதர்களையும் தர்க்கத்தில் வென்றார். இந்தச் செய்தியைக் கேள்விப்பட்ட அவரது குருவான பரமசிவேந்த்ராள், ஊரார் வாயையெல்லாம் அடக்கக் கற்ற நீ, உன் வாயை அடக்கக் கற்றுக் கொள்ளவில்லையே! என்று கூறினார். குருவின் இந்த ஒரு வார்த்தையையே உபதேசமாக எண்ணி அன்று முதல் பரிபூர்ண மோன வ்ரதத்தை மேற்கொண்டார். மேலும் குருவின் பாதகமலங்களைச் சிரமேற்கொண்டு, தடையற்ற பக்தி செலுத்தியதன் பயனாலும், மோனத்தினாலும் ஸ்ரீஸதாசிவேந்த்ரருக்கு வெளிவிஷயங்களில் மனம் ஈடுபடாது உட்புறம் ஒடுங்கி ப்ரஹ்மஸாக்ஷாத்காரத்தை அடைந்தார்.

இதன்பின் ஸ்ரீ ஸதாசிவேந்த்ரர் காவேரி தீரத்திலேயே பெரும்பாலும் ஸஞ்சாரம் செய்து

வந்தார். எப்போதும் ப்ரஹ்மத்தையே நினைத்திருந்த இவருக்கு உடலுணர்வே இல்லாததால் அணிந்திருந்த ஆடை விழுந்தது கூட அறியாமல் திகம்பரராக அவதூதராக ஸஞ்சாரம் செய்து வந்தார். கிடைத்ததை உண்பார். பித்தன் போல் நடந்து கொள்வார். சிலர் இவ்வாறு நடப்பதை அவருடைய குருவிடம் கூறவே பரம ஞானியான அவரது குரு, எனக்கு அந்த ஞான நிலை வரவில்லையே எனக் கூறினார்.

ஸ்ரீ ஸதாசிவ ப்ரஹ்மேந்த்ரர் வேதாந்த தத்வங்களை உலகிற்கு நிலைநாட்டும் பொருட்டு, மிக உன்னதமான க்ரந்தங்களை அருளியுள்ளார். வ்யாஸாசாற்யாளின் ப்ரஹ்மஸூத்ரத்திற்கு ப்ரஹ்மஸூத்ர வ்ருத்தி என்ற உன்னத உரையையும், பதஞ்ஜலி முனிவரின் யோகஸூத்ரத்திற்கு யோகஸூத்ர வ்ருத்தி என்ற உரையையும் அருளியுள்ளார். மேலும் பலவிதமான பக்தி ஸ்தோத்ரங்கள் கீதங்கள் என நிறைய க்ரந்தங்களை அனுக்ரஹித்துள்ளார். இவருடைய ஆத்ம அநுபவத்தின் முதிர்ந்த நிலையை, இவர் வடித்த 'ஆத்ம வித்யா விலாஸம்' என்னும் நூல் தெள்ளத்தெளிவாக நமக்கு காட்டுகிறது.

எப்போதும் ப்ரஹ்மத்தையே நினைத்திருந்ததால் ஸதாசிவ ப்ரஹ்மம் என்று எல்லோராலும் போற்றப்பட்டார். ப்ரஹ்மஞானியான இவர் நிகழ்த்திய லீலைகள் ஏராளம். அதில் சில.

உடல் உணர்வற்ற நிலையில் ஜடபரதரைப் போல் திரிந்த இவருடைய தலையின் மேலே, யாரோ ஒருவன் அறியாமல் விறகுக் கட்டு ஒன்றைச் சுமத்தியபோதும் இவர் அதை உணரவில்லை.

மற்றொரு சமயம், நெற்குவியலின் மேல் மெய்மறந்து படுத்திருந்த இவரைத் திருடன் என்று கருதி அடிக்க ஓங்கிய கைகள் அப்படியே ஆகாயத்தில் ஸ்தம்பித்து நின்றன.

கொடுமுடிக்கு அருகில் காவேரி மணல் திட்டில் தியானத்தில் இருந்தபோது, ஆற்றில் திடீரெனப் பெருக்கெடுத்த புது வெள்ளம் இவரை அடித்துச் சென்று மணலுக்குள் புதைத்துவிட்டது. மூன்று மாதங்கள் கழித்துத் தண்ணீர் வற்றியபின், யாதுமறியாதவராய் தியானத்திலிருந்து கலைந்து எழுந்து நடந்தார்.

ஒரு சமயம், ஆலயத்தின் கருவறைக்கு வெளியில் நின்றுகொண்டு இவர் ஈஸ்வரனின் திவ்ய நாமங்களை உச்சரித்தபோது, ஒவ்வொரு நாமத்திற்கும் கருவறையில் உள்ள மூலஸ்தான லிங்கத்தின் மீது பூக்கள் தானாக உதிர்ந்தன.

ஒருமுறை சரீர பற்றின்றி நடந்து சென்ற இவரைப் பைத்தியம் என்று கருதிய மிலேச்சன் ஒருவன், தன் வாளால் இவருடைய ஒரு கையை வெட்டி வீழ்த்தினான். கையை இழந்த பின்பும் எவ்வித விகாரமுமின்றி, வலியின்றி நடந்த இவரைக்கண்டு பயந்த அந்த மிலேச்சன் மன்னிப்பு வேண்டிப் பின்தொடர்ந்த போதுதான் விஷயம் வெளிப்பட்டது. அப்போதும் அவன்பால் கோபப்படாமல் பெருங்கருணையே காட்டி, வெட்டுண்ட கையைத் திருமேனியில் தடவ, அது மீண்டும் ஒட்டிக்கொண்டது இவர்களது யோக ஸித்திக்கு மாபெரும் சான்றாகும்.

மதுரையில் நடைபெற்ற ரிஷப வாஹன உத்ஸவத்தைக் காண ஆசைப்பட்ட காவேரிக்கரைச் சிறு பிள்ளைகளை, கண்மூடித் திறக்கும் நேரத்திற்குள் ஆகாய மார்க்கமாக மதுரைக்கு அழைத்துச் சென்று, ஸ்வாமி தரிசனம் செய்வித்து, மீண்டும் காவேரிக்கரையிலேயே கொண்டு வந்து விட்டார்.

ஒருசமயம் படிப்பின் வாசனையே அறியாத ஒரு ப்ரஹ்மசாரிக்கு இவர் கருணை கூர்ந்து அரங்கமா நகருளானின் தரிசனம் செய்வித்து ஸ்ரீ மேதா தக்ஷிணாமூர்த்தி மந்த்ரத்தை உபதேசித்த மாத்ரத்தில் அவர் எல்லா சாஸ்த்ரங்களின் ஞானத்தையும் அடைந்தவனானான்.

இவ்வாறு தனது யோக ஸித்திகளால் பல பக்தர்களுக்கு அனுக்ரஹம் செய்துள்ளார். அதில் புதுக்கோட்டையை ஆண்ட தொண்டைமான் என்ற அரசருக்கு அருளியது பேரனுக்ரஹம். இவர் புதுக்கோட்டைக்கு அருகே காட்டில் ஸஞ்சாரம் செய்வதை அறிந்த அரசன் அங்கு சென்று இவரை தரிசித்தான். உடனே ஸதாசிவ ப்ரஹ்மம் இவருக்கு மணலில் எழுதி உபதேசம் செய்தார். அந்த மணலானது இன்றும் புதுக்கோட்டையில் உள்ளது.

தமது அவதாரக் கடமைகள் பூர்த்தியடைந்ததை உணர்ந்த ஸ்ரீ ஸதாசிவ ப்ரஹ்மேந்த்ரர், தக்ஷிண வாஹினியாக (தெற்கு நோக்கி) ஓடும் காவேரியின் மேற்குக் கரையிலே அமைந்துள்ள புனிதமான நெரூரிலே மஹாஸமாதி அடைய எண்ணினார். அந்த ஸமயத்தில் அங்கிருந்த பக்தர்களிடம் தாம் ஸமாதி அடையும் இந்த இடத்தில் ஒரு வில்வமரம் தானாக தோன்றும் எனவும் மேலும் காசியிலிருந்து ஒரு அந்தனர் பாண லிங்கம் கொண்டுவருவார் அதனை மரத்திற்கு கிழக்கே ப்ரதிஷ்டை செய்து பூஜை செய்ய வேண்டும் என உத்தரவிட்டருளி அங்கேயே மஹாஸமாதி அடைந்தார். இன்றும் அங்கு வில்வமரத்தின் உருவில் இருந்து வரும் பக்தர்கள் அனைவரின் குறைகளையும் நீக்கி அருளுகிறார். இன்றும் எல்லாம் துறந்த பல ஞானியர் இவருடைய அதிஷ்டானத்திற்கு வந்து வணங்கித் துதிக்கின்றனர்.

இத்தகைய சிறப்புமிக்க சற்குருநாதரின் திவ்ய சரித்திரத்தைத் தியானிப்பதும், அவர் அருளிய கீர்த்தனைகளைப் பாடுவதும் மனிதனின் அஞ்ஞான இருளை நீக்கி, ஆத்ம ஞானத்தை அநுக்ரஹிக்கும் என்பது திண்ணம்.

**ஓம் நமோ பகவதே தக்ஷிணாமூர்த்தயே**
**மஹ்யம் மேதாம் பிரஜ்ஞாம் ப்ரயச்ச ஸ்வாஹா |**

# விழாக்களும் விரதங்களும்

-செல்வம்

**ஆனி உத்திரம் - JUN 22 2026**

ஆனிமாதம் உத்திர நட்சத்திரத்தன்று நடக்கும் தரிசனமாகையால் இத்தினம் ஆனி உத்திரம் எனவும் ஆனித்திருமஞ்சனம் எனவும் அழைக்கப்படுகிறது.

சிவபெருமானின் பஞ்சசபைகளில் பொற்சபையாக வும், பஞ்சபூத தலங்களில் ஆகாய தலமாகவும் போற்றப்படுவது சிதம்பரம் நடராஜர் ஆலயம். சிதம்பரம் கோயில் ஐந்து சுற்று பிராகாரங்களைக் கொண்டது.

இக்கோயிலில் மூலவர் இருக்கும் கருவறை நேர் எதிரே அமையப்பெறாமல் சிறிது இடப்புறம் தள்ளி அமைந்துள்ளது. இது மனித உடலில் இதயம் இடப்புறம் அமைந்துள்ளதை ஒத்து இருக்கிறது என்கிறது தல புராணம்.

மனித உடலை ஒத்து அமைந்துள்ளதாகக் கூறப்படும் இக்கோயிலின் கூரை, மனிதன் நாள் ஒன்றுக்கு மூச்சுவிடும் எண்ணிக்கையான 21,000 முறையைக் கணக்கில் கொண்டு அதே அளவு ஓடுகளால் வேயப்பட்டுள்ளன. மனித உடலில் ஓடும் நாடிகள் 72,000. இதே எண்ணிக்கையில் ஓடுகளைப் பதியச் செய்ய ஆணிகள் அடிக்கப்பட்டுள்ளன.


திருமஞ்சனம் என்றால் மகா அபிஷேகம் என்று பொருள். ஆடலரசரான நடராஜருக்கு ஆண்டுக்கு 6 முறை மகா அபிஷேகம் செய்யப்படுகிறது. இதில் சிறப்பு வாய்ந்தது ஆனி உத்திரத்தில் நடைபெறும் திருமஞ்சனமும், மார்கழி திருவாதிரையில் நடைபெறும் திருமஞ்சனமும் ஆகும். இவ்விரு நாட்களில் மட்டுமே அதிகாலையில் அபிஷேகம் நடக்கும்.

மார்கழி திருவாதிரையில் அருணோதயகாலப் பூஜை; மாசி வளர்பிறை சதுர்த்தியில் சந்திபூஜை; சித்திரை திருவோணத்தில் நண்பகல் பூஜை; ஆனி உத்திரத்தில் சாயரட்சை பூஜை; ஆவணி வளர்பிறை சதுர்த்தி மற்றும் புரட்டாசி வளர்பிறை சதுர்த்திகளில் அர்த்தஜாம பூஜை என ஆறுகால பூஜையை நடராஜப் பெருமானுக்கு தேவர்கள் செய்கிறார்கள் என்பது ஐதீகம்.

ஆனி உத்திர நாளில்தான் சிவபெருமான் குருந்தை மரத்தின் கீழ் மாணிக்கவாசகருக்கு காட்சி அளித்ததாகவும் அவருக்கு உபதேசம் செய்ததாகவும் நம்பப்படுகிறது.

**ஜேஷ்டாபிஷேகம் , ஜூன் 26 2026:**

தமிழ் மாதமான ஆனி மாதத்தில் வரும் கேட்டை (ஜேஷ்டா) நட்சத்திர தினம் வைணவக் கோயில்களில் மிகவும் சிறப்பாகக் கருதப்படுகிறது.



சமஸ்கிருதத்தில் ஆனி மாதம் “ஜேஷ்ட மாதம்” என்று அழைக்கப்படுகிறது. கேட்டை நட்சத்திரத்தின் அதிதேவதையாக இந்திரன் கருதப்படுவதால், இந்த நாளில் நடைபெறும் ஜேஷ்டாபிஷேகத்திற்கு தனிப்பட்ட மகத்துவம் உண்டு.

இந்த நாளில் பெருமாளை வழிபட்டால் பதவி உயர்வு, தலைமைப் பொறுப்பு, அரசியல் மற்றும் நிர்வாகத் துறைகளில் முன்னேற்றம், செல்வ வளம் போன்றவை கிடைக்கும் என்ற பாரம்பரிய நம்பிக்கை நிலவுகிறது.

ஸ்ரீரங்கம் கோயிலில் மூலவர் ரங்கநாதருக்கு அபிஷேகம் மற்றும் திருமஞ்சனம் எதுவும் செய்யப்படுவதில்லை. அவரது திருமேனி சுதையினால் செய்யப்பட்டதாகும். இந்த சுதை திருமேனியை ஆண்டுக்கு இருமுறை பாரம்பரிய முறையில் தயாரிக்கப்படும் தனித்தைலத்தை பூசி பாதுகாத்து வருகின்றனர். இந்த தைலம் சந்தனம், சாம்பிராணி, அகில், வெட்டிவேர் உள்பட வாசனை திரவியங்களில் இருந்து தயாரிக்கப்படுகிறது.

மூலவர் பெரிய பெருமாளுக்கு பதிலாக உற்சவர்நம்பெருமாள்மற்றும்உபயநாச்சியார்களுக்கும் ஜேஷ்டாபிஷேகம் நடைபெறும்.

ஜேஷ்டாபிஷேகத்தின் மறுநாள் காலை திருப்பாவாடை எனப்படும் தளிகை நிகழ்ச்சி நடைபெறும். அப்போது மூலஸ்தானத்துக்கு எதிரே உள்ளே மண்டபத்தில் தரையில் விரிக்கப்பட்ட துணியில் பெருமளவில் குவிக்கப்படும் அன்ன பிரசாதத்தில் பலாச்சுளை, தேங்காய், மாங்காய், வாழைப்பழம், நெய் உள்ளிட்ட பொருட்கள் அனைத்தும் சேர்க்கப்பட்ட சாதத்தை பெரிய பெருமாளுக்கு படைக்கப்பட்டு பின்னர் பக்தர்களுக்கு பிரசாதமாக வழங்கப்படும்.

தங்கம் மற்றும் வெள்ளியால் செய்யப்பட்ட குடங்களில் தீர்த்தம் சேகரிக்கப்பட்டு ஸ்ரீரங்கத்தில் உள்ள மூலவர் (மூல ரங்கநாதர்) சுதை வடிவில் இருப்பதால் அவருக்கு வழக்கமான நீராபிஷேகம் செய்யப்படுவதில்லை. எனவே நம்பெருமாள் (உற்சவர்), ஸ்ரீதேவி, பூதேவி ஆகியோருக்கு சிறப்பு திருமஞ்சனம் நடைபெறுகிறது.

**திருப்பதி திருமலையில் ஜேஷ்டாபிஷேகம்:**

திருப்பதி; திருமலையில் உள்ள ஸ்ரீவாரி கோயிலில், வருடாந்திர சலகட்ல ஜேஷ்டாபிஷேகம் விழா ஜூன் 26 முதல் ஜூன் 28 வரை நடைபெறவுள்ளது.

மூன்று நாட்கள் நடைபெறும் இந்த நிகழ்வு ஆண்டுதோறும் ஜ்யேஷ்ட மாதத்தில் நடத்தப்பட்டு, ஜ்யேஷ்ட நட்சத்திரத்தன்று நிறைவடைகிறது.



சம்பங்கி பிரதட்சணத்தில் உள்ள கல்யாண மண்டபத்தில் நடைபெறும் இந்த சடங்கு அபிதேயக அபிஷேகம் என்றும் அழைக்கப்படுகிறது. பல தலைமுறைகளாகத் தொடர்ந்து செய்யப்படும் அபிஷேகங்களால் உற்சவ மூர்த்திகளுக்கு (ஊர்வலத்திற்கு எடுத்துச் செல்லப்படும் சிலைகள்) ஏற்படும் தேய்மானத்தைத் தடுக்கும் நோக்கத்துடன் இந்த விழா தொடங்கப்பட்டது.

முதல் நாளில், ஸ்ரீ மலையப்ப சுவாமிக்கு அணிவிக்கப்பட்டிருக்கும் தங்கக் கவசம் (ஸ்வர்ண கவசம்) அகற்றப்பட்டு, ஹோமம், அபிஷேகம் மற்றும் பஞ்சாமிருத ஸ்நபன திருமஞ்சனம் (ஐந்து புனிதப் பொருட்கள் கலந்த கலவையால் செய்யப்படும் தெய்வீக நீராட்டு) போன்ற சடங்குகள் நடத்தப்படுகின்றன. அதன்பிறகு, சுவாமிக்கு வைரக் கவசம் (வஜ்ர கவசம்) அணிவிக்கப்படுகிறது. இரண்டாம் நாளில் முத்துக்கவசம் (முத்யால கவசம்) அணிவிக்கப்படுகிறது. மூன்றாம் நாளில், திருமஞ்சனம் மற்றும் பிற சடங்குகள் நிறைவடைந்த பிறகு, மீண்டும் தங்கக் கவசம் அணிவிக்கப்படுகிறது.

அடுத்த ஆண்டு நடைபெறும் ஜேஷ்டாபிஷேகத்தின் போது மட்டுமே இந்தத் தங்கக் கவசம் மீண்டும் அகற்றப்படுகிறது; அதுவரை, ஆண்டு முழுவதும் நடைபெறும் பல்வேறு விழாக்களில் சுவாமி இந்தத் தங்கக் கவசத்துடனேயே எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார்.

# நல்ல தொண்டில் நல்ல உள்ளம்

## பசு மரியாதை அழைப்பு பிரச்சாரம்

பல ஆயிரம் ஆண்டுகளாக பாரதத்தின் ஆன்மீக, சமூக மற்றும் பொருளாதார வாழ்வின் மையமாக விளங்கும் பசுவை கோமாதா என்றே போற்றுகிறோம். தர்மத்தின் திருவுருமாக விளங்கும் கோமாதா வெறும் ஒரு விலங்கு அல்ல. உயிர்கள் அனைத்தையும் தாயன்புடன் காத்து வளர்க்கும் தெய்வீக அன்னையாக நம் முன்னோர்களால் போற்றப்பட்டுள்ளது.

வேதங்கள், உபநிஷத்துகள், இதிகாசங்கள், புராணங்கள் என நமது சனாதன மரபின் ஒவ்வொரு அத்தியாயத்திலும் கோமாதாவின் மகிமை போற்றப்பட்டுள்ளது. சங்க காலத்தில் மக்களின் முக்கிய சொத்தாக மாடுகளே (ஆநிரைகள்) கருதப்பட்டன. இதனால் "மாடு" என்ற சொல்லே செல்வத்தைக் குறிக்கப் பயன்பட்டது. ஒரு நாட்டின் மீது போர் தொடுப்பதற்கு முன்னால், அங்குள்ள பசுக்களுக்குத் தீங்கு நேரிடக் கூடாது என்பதற்காக அவற்றை முதலில் கவர்ந்து வருவது சங்க காலப் போர் மரபாக இருந்தது. பசுக்களுக்குத் தீங்கு விளைவிப்பது மிகப்பெரிய பாவமாகக் கருதப்பட்டது. திருவள்ளுவர் பசுவை அறத்தின் குறியீடாகவே குறிப்பிடுகிறார். நாட்டை ஆளும் மன்னன் அறநெறி தவறினால், பசுக்களின் பால் வளம் குறைந்து போகும் என்று கூறுகிறார் திருவள்ளுவர். தமிழ் இலக்கியங்கள் பசுவை வெறும் விலங்கு என்று சொல்லாமல் "செல்வம்", "அறத்தின் வடிவம்", "தாய்க்கு நிகரானது", "வழிபாட்டிற்குரியது" என்ற உன்னத நிலைகளிலேயே அடையாளப்படுத்துகின்றன.

நம் அனைவராலும் போற்றி வழிபடப்படும் கோமாதாவை காப்பது நம் கடமையல்லவா? நாம் போற்றி வழிபடும் பசுவை வதைக்க அனுமதிக்கலாமா?

நம் கோமாதாவை காக்க தேசிய அளவில் பசுவதைத் தடைச் சட்டத்தை அமல்படுத்தவும், பசுவிற்கு தேசிய அந்தஸ்து பெற்றுத்தரவும் மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு வேண்டுகோள் விடுக்க மாபெரும் கையெழுத்து இயக்கத்தை நடத்தி கொண்டிருக்கிறார்கள் கோ சம்மான் ஆஹ்வான் அபியான் (பசு பாதுகாப்பு அழைப்பு இயக்கம்) அமைப்பினர்.

**இந்த இயக்கத்தின் முக்கிய நோக்கம்:**

1. பசுவதைக்கு முழுமையான தடை: இந்தியாவில் பசுவதைக்கு முழுமையான தடை விதிப்பதன் மூலம் நாட்டு இனப் பசுக்கள் முழுமையாகப் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்தல்



2. தேசிய இயக்கம்: பசுவிற்கு (கோமாதா) தேசியத் தாய், தேசிய தெய்வம், தேசிய பாரம்பரியம் அல்லது தேசிய அடித்தளம் போன்ற கௌரவ அந்தஸ்துகளை வழங்குதல்

3. மத்திய சட்டம்: பசு சேவைக்கான மத்திய சட்டங்களை நடைமுறைப்படுத்தவும், இந்தியா முழுவதும் சீரான பராமரிப்பை உறுதி செய்வதற்காக பசு சேவைக்கான ஒரு மத்திய அமைச்சகத்தை நிறுவ தொடர்ந்து வலியுறுத்தல்

4. வேளாண் ஒருங்கிணைப்பு: மேய்ச்சல் வாரியங்களை நிறுவுதல், தீவனப் பாதுகாப்பு கொள்கைகளை வரையறுத்தல், பசு சார்ந்த விவசாயத்தை உறுதி செய்தல் மற்றும் பஞ்சகவ்ய பொருட்களின் உற்பத்தி / சந்தைப்படுத்தலை அதிகரித்தல்.

உள்ளிட்ட மேலும் 18 கோரிக்கைகளை செயல்படுத்த இந்த இயக்கத்தில் நம்மை இணைத்துக் கொண்டு பசுக்களைக் காப்போம்.

தேசிய மற்றும் கலாச்சாரப் பாதுகாப்பிற்கான இந்த தன்னலமற்ற மற்றும் புனிதமான இயக்கத்தில் பங்கேற்க

மிஸ்டு கால் கொடுத்து இணையலாம். தொடர் கொள்ள வேண்டிய எண்: 90677 77323

அல்லது உங்கள் விவரங்களை வாட்ஸ் அப் எண்ணிற்கு தெரிவித்து இணையலாம். வாட்ஸ் அப் எண்: 82397 11008

ஆன்லைன் படிவத்தைப் பெறவும், இயக்கம் குறித்த பல தகவல்களுக்கு https://www.gausamman.cloud என்ற இணையதளத்தைப் பார்வையிடவும்.



## SRI SRINGERI SHARADA PEETHAM CHARITABLE TRUST
with
## ANANYA FOUNDATION

"Empowering Skills for a Better Tomorrow."

# Free Computer Education for Women

### DIGITAL BASICS & CONFIDENCE

- ✓ Computer & Internet Basics
- ✓ Smartphone & ChatGPT Usage
- ✓ Communication & Confidence Skills

### CREATIVE & DIGITAL PROGRAMS

- ✓ Canva, Photoshop & Video Editing
- ✓ Social Media Content Creation
- ✓ AI Tools & Freelancing

### DATA & ANALYTICS

- ✓ Advanced Excel & Reports
- ✓ Dashboards & Power BI
- ✓ AI-Assisted Data Analysis

### ADVANCED CAREER PROGRAMS

- ✓ Web Development Basics
- ✓ UI/UX & Digital Skills
- ✓ Projects & Portfolio Creation



***Upgrade Your Skills. Upgrade Your Life.***

**Training Centres**

No.20, Annai Sathya Nagar, 2nd cross Street,
West jafferkhanpet, Chennai-600083
**9840702504 7598101633**

No.12, Thanigachalam Nagar, Near-M Central Hotel,
T.Nagar, Chennai-600017
**7871892233 7598101633**

# சினிமா சாரல்

- சேஷு

ஞாயிற்றுக் கிழமை மதியம் முரட்டு உணவருந்தியவுடன் சரி ஒரு விடுமுறை உறக்கத்திற்கு போவோம் என நினைத்த போது, மறந்துட்டீங்களா! நேற்று இரவே புக் செஞ்சாச்சு மதியம் ஷோ 3.40க்கு கிளம்புங்க என்றனர் குடும்பத்தினர். ஆஹா, தூக்கம் போச்சே என வேண்டா வெறுப்பாகத் தான் போய் காசி டாக்கீஸில் படம் பார்க்க அமர்ந்தேன்.

படம் ஆரம்பமே கராத்தே கிளாஸ் மாஸ்டராக அர்ஜுன், மகளை தைரியமான பெண்ணாக வளர்க்கும் தந்தை ரோல். குடும்ப பெண்ணாக அபிராமி, அர்ஜுனனின் தம்பியாக மெடிக்கல் ஷாப் நடத்தும் விவேக் பிரசன்னா என்ற எளிமையான குடும்பம். அர்ஜுன் வீட்டிற்கு அருகே கராத்தே மாணவர்கள் பயன்படுத்த ஒரு கழிவறை கட்டப்படுகிறது. இன்னொரு பக்கம் கனிமவள கொள்ளையில் ஈடுபடும் வில்லன். அவனுக்கு ஆதரவாக அரசியல் பிரபலம். அரசியல்வாதிக்கு லஞ்சத்தொகையை கறுப்பு பணத்தை ஹவாலா பரிமாற்றம் செய்ய சிறையிலிருந்து தப்பிய ஒரு குற்றவாளி. அவனுக்கு அடைக்கலம் தரும் லோக்கல் ரவுடி என பல கதாபாத்திரங்கள் இருந்தாலும் எல்லோரையும் சரியாக இணைக்கும் புள்ளி எது என ரசிகர்களைத் தேட வைத்திருக்கிறார் இயக்குநர் சுபாஷ் கே.ராஜ்.




கதை எதை நோக்கி நகர்கிறது என்ற ரகசியத்தை முதலிலேயே போட்டு உடைத்தாலும், ஒரு வரிக் கதையை மிக சுவாரஸ்யமாக நகர்த்துகிறார் இயக்குநர். வில்லன் குறித்த பேக்ரவுண்டு விவரனைகளை சிக்கலில்லாமல் விவரிப்பதும், ஹீரோ அர்ஜுனுக்கு தேவையில்லாத ஃப்ளாஷ்பேக் கதை என நீட்டி முழக்காமல் அடுத்தடுத்து விறுவிறுப்பூட்டும் காட்சிப்படுத்தலில் கவனத்தை செலுத்தியிருக்கும் இயக்குநருக்கு ஒரு சபாஷ். ஹீரோயினைப் பற்றி குறிப்பிட வேண்டுமென்றால் கதையில் சும்மா வந்து போகும் கேரக்டராக இல்லாமல் வெயிட்டான ரோல் கொடுக்கப்பட்டுள்ளது. ப்ரீத்தி முகுந்தனுக்கு இது பேர் சொல்லும் படமாக இருக்கும். ஆக்ஷன் காட்சிகளில் அவருடைய அசுரத்தனமான உழைப்பு ஆச்சர்யப்படுத்துகிறது. ஒடிசலான தேகமாக இருந்தாலும் ஆக்ஷன் காட்சிகளில் பட்டைய கிளப்புகிறார். அக்காட்சிகளில் தியேட்டரில் விசில் பறக்கிறது.

ஜெண்டில்மேன், ஜெய்ஹிந்த், ஏழுமலை போன்ற படங்களில் காட்டிய அதே சுறுசுறுப்பு, ஸ்டண்ட் காட்சிகளில் கிக் ஷாட்டில் தனது திறமையை வெளிப்படுத்திய அர்ஜுனுக்கு பாராட்டுக்கள். சண்டை காட்சிகள் ஒவ்வொன்றும் மிக நேர்த்தியாகப் படமாக்கப்பட்டுள்ளன. யார் அந்த ஸ்டண்ட் இயக்குநர் என்று வியக்கும் அளவுக்கு அசத்தலான உழைப்பை கொட்டியுள்ளார் ஃபீனிக்ஸ் பிரபு. படத்தின் மற்றொரு ஹீரோ இவர்தான். சண்டை காட்சிகளில் படத்தின் டைட்டிலுக்கு ஏற்றார் போல் ஒட்டுமொத்த அரங்கும் "ப்ளாஸ்ட்".

கன்னட இசையமைப்பாளர் ரவி பசுரூரின் மாஸ் இசை ஒவ்வொரு காட்சியையும் திரையிலிருந்து நம்மை விலக்காமல் பார்க்கத் தூண்டுகிறது. பாடல்கள் கதையினூடே வந்துவிடுவதால் கதையோட்டத்தை சிதைக்காமல் நகர்த்துகிறது. அருண் ராதாகிருஷ்ணனின் கேமரா ஆக்ஷன் காட்சி களில் மாஸ் காட்டி இருக்கிறது. ஃபைட் சீன்களில் ரவி பசுரூர் வேற லெவல் இசைக் கோர்ப்பினால் இளைஞர்களை ஈர்க்கச் செய்கிறார். இனி தமிழ் சினிமாவில் பெரிய ரவுண்டு வருவார் என்றே தோன்றுகிறது.

2023ல் நிகில் நாகேஷ் பட் இயக்கிய "Kill" படம் டிஸ்னி ஹாட்ஸ்டாரில் உள்ளது. ஒரு ட்ரெயினின் அதிலும் இரண்டு கோச்சுகளில் நடக்கும் ரத்தம் தெறிக்கும் ஆக்ஷன் படம். கொடூர சண்டைக்காட்சிகளாக இருந்தாலும், அது எடுக்கப்பட்ட விதம் நம்மை பார்க்கத் தூண்டும். அதேபோல ஒரு பாழடைந்த கட்டிடம், வில்லன் தங்கியிருக்கும் ப்ளாட், அர்ஜுனின் வீடு என இதற்குள் ஒட்டுமொத்த படத்தையும் மாஸாக முடித்துக் காட்டியிருக்கும் இயக்குநர் சுபாஷ் கே.ராஜை கண்டிப்பாகப் பாராட்டலாம்.

பல நாட்களுக்குப் பிறகு தமிழ்த் திரையுலகில் அசத்தலான ஆக்ஷன் மசாலா படம் "ப்ளாஸ்ட்". குடும்பத்துடன் ஜாலியாக, போர் அடிக்காமல் பார்க்கலாம்.

Printed by Published by Padmapriya L on behalf of Padmapriya L, Published at 77/6, 10th Avenue, Ashok Nagar, Chennai - 600 083 Printed at Chennai Offset Printers, No. 19/1 & 21/2, Kitabath Khan Bahadur Street, Ellis Road, Chennai - 600 002, Editor Padmapriya L.